கடல் உணவின் களஞ்சியம்
மொத்தமாகவும். சில்லறையாகவும் பெற்றிட
Kasturi Limited
290B, Ealing Road, Wembley, Middlesex, HA0 4LL, UK.
Tel: 0181-903 4276 Fax: 0181-903 0827
Mobile: 0958 246580

France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு
பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 3 20 - 26 நவம்பர் 1997 முழக்கம்: 149

புதிய நிர்வாகத்தில்
மளிகைப் பொருட்கள் யாவும் மலிவு விலையில்
NEW (SRI) KANNAN STORES
249, Fore street, Edmonton, LONDON, N18 2TY
Tel: 081- 884 4979

## கனகராயன்குளம் - கிளிநொச்சி - புளியங்குளம்

# மும்முனைகளில் கடும் போர்

சிறீலங்கா அரசின் 'ஜெயசிக்குறுய்' போர்நடவடிக்கையின் மூன்றாம் கட்டம் நேற்றைய தினம் (16.11.97) ஆரம்பமாகியுள்ளது. கரிப்பட்டுமுறிப்பு கிளிநொச்சிப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா துருப்பினருக்குமிடையே பலத்த மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இதேவேளை கனகராயன்குளம் பகுதியில் சிறீலங்காப் படையினருடன் விடுதலைப் புலிகளின் சிறப்புப் படையணிகள் மூர்க்கமான போரினை நடாத்திவருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் விபரம் தருகின்றன.

பல வாரங்களாக விடுதலைப் புலிகளின் எதிர் நடவடிக்கைகளினால் இடைநிறுத்தப்பட்டிருந்த ஜெயசிக்குறுய் நடவடிக்கையின் மூன்றாம் கட்டம் கடந்த சனியன்று ஆரம்பமானதை உறுதிப்படுத்தியுள்ள சிறீலங்கா இராணுவ அமைச்சு, விமானப்படையின் துணையுடன். கனரகடாங்கிகள், பீரங்கிகள் சகிதம் பல்லாயிரம் துருப்பினர் போரில் ஈடுபட்டுள்ளதாக அறிவித்துள்ளது. அங்கிருந்து கிடைக்கப்பெறும் தகவல்களின் படி 55-வது படைப்பிரிவினர் கனகராயன் குளம் பகுதியில் விடுதலைப் புலிகளினால் கடு

(☞ 2ம் பக்கம்)




### யாழ்.நகரில் புலிகளின் சுவரொட்டிகள்

யாழ். நகர்ப்பகுதியில் விடுதலைப் புலிகளின் சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டு வருகின்றன. யாழ் கச்சேரி அலுவலகத்தின் உட்புறம் உட்பட பல்வேறு தெருமுனைகளில் புலிகளின் சுவரொட்டிகள் திடீரென்று தோன்றியுள்ளன. இதனால் அச்சமுற்ற இராணுவத்தினர் அப்பகுதிகளில் தமது கண்காணிப்புகளை அதிகரித்து வருகின்றனர்.

*யாழ். நகர்*
## புதிய இராணுவத் தடையரண்கள்

யாழ். நகர் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினர் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். மறைந்த விடுதலைப் புலிகளின் ஞாபகார்த்தமாக தமிழர்களினால் அனுஷ்டிக்கப்படும் மாவீரர்வாரம் ஆரம்பமாகவுள்ளதால், அச்சங்கொண்டுள்ள சிறீலங்காப் படைகள், நகர்ப்பகுதிகளில் பல்வேறு தடையரண்களை நிறுவியுள்ளனர். முதலாம் குறுக்குத்தெரு, மற்றும் யாழ். பிரதான வீதி என்பனவற்றில் வாகனப் பாவனைக்கு முழுமையாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்விரு வீதிகளும் சிறீலங்கா இராணுவத்தின் 51-வது படைப்பிரிவின் காரியாலயத்தினை நெருங்குவதற்கான பாதைகளாகும். இதேவேளை யாழ் நகர்ப் பகுதியில் ஹற்றன் நஷனல் வங்கிக்கு அண்மையாக இரு இராணுவ தடை அரண்கள் நிறுவப்பட்டுள்ளன.

## தொண்டமானாறு பகுதியில் மோதல்

(17.11.1997)

இன்று யாழ்குடா நாட்டில் தொண்டமானாறு பகுதியில் வைத்து சிறீலங்கா இராணுவம் மீது விடுதலைப் புலிகளினால் அதிரடித்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. காலை 11.00 மணியளவில் கெருடாவில் பகுதியில் இடம் பெற்ற இத்தாக்குதலின்

(☞ 2ம் பக்கம்)

*புளியங்குளம்*
## 19 இராணுவக் கொமாண்டோக்கள் பலி 75 பேர் படுகாயம்

சிறீலங்கா படைகளின் மூன்றாம் கட்ட ஜெயசிக்குறுய் நடவடிக்கை, புளியங்குளம்பகுதியில் விடுதலைப் புலிகளின் போர் அணிகளினால் கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

19-ற்கு மேற்பட்ட சிறீலங்கா விசேட இராணுவ கொமாண்டோக்கள் விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டுள்ளதுடன் 75ற்கு மேற்பட்டோர் படுகாயப் படுத்தப்பட்டுள்ளனர். இதன் போது அரசொளி என்னும் போராளி வீரச்சாவடைந்துள்ளார் என விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை ஆரம்பமான புளியங்குளம் பகுதியை குறியாகக் கொண்ட மோதலகள் முறியடிக்கப்பட்டதாக இன்று (17.11.97) மாலை புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

(☞ 2ம் பக்கம்)

*துணாவில் - சங்கத்தானை - வதிரீயில் சமர்*
## புலிகளின் சிறப்பு படையணிகளின் தாக்குதல்கள்

யாழ். குடாவிற்கான புதிய ஆக்கிரமிப்பு பொறுப்பாளராக மேஜர் ஜெனரல் லயனல் பாலகாலே பொறுப்பேற்றிருக்கும் இந்த வேளையில், குடாநாட்டில் விடுதலைப் புலிகள் சிறீலங்கா இராணுவத்தினருக்கெதிரான தாக்குதலை தொடர்ந்தும் தீவிரப்படுத்தி வருகின்றனர்.

கடந்த வாரம் 11-ம், 14-ம் திகதிகளில் சிறீலங்காப் படையினருக்கு மொத்தமாக எதிரான மூன்று தாக்குதல்கள் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 8 இற்கும் மேற்பட்ட சிப்பாய்கள் பலியாக மேலும் பலர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 11-ம் திகதி இரவு 8.30 மணியளவில் கைதடி துணாவில் வைரவர் கோவிலடிக்கு அண்மையாக ரோந்து சென்ற படையினர்மீது புலிகள் வழிமறித்து தாக்குதல் மேற்கொண்டதில் 2 சிப்பாய்கள் கொல்லப்பட்டதுடன், மேலும் மூவர்

(☞ 2ம் பக்கம்)

*வடமராட்சி கிழக்கு*
## தடையுத்தரவுகள் நீக்கப்படமாட்டாது

### இராணுவம் அறிவிப்பு

வடமராட்சி கிழக்குப் பகுதி மீதான தமது கெடுபிடி உத்தரவுகளை தளர்த்தப் போவதில்லை என்பதை சிறீலங்கா இராணுவத்தினர் அப்பகுதி பிரஜைகள் குழுவிடம் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

வல்லிபுரம் கோவில் பகுதியில் இருந்து வெற்றிலைக்கேணி வடபகுதிவரை சிறீலங்கா இராணுவம் விதித்திருக்கும் கடுமையான தடை உத்தரவுகளை நீக்குவதற்கு சிறீலங்கா இராணுவத்தின் வடமராட்சிப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் லால் விஜயரட்ண மறுப்புத் தெரிவித்துள்ளார்.

(☞ 2ம் பக்கம்)

*மாவிட்டபுரம் கந்தசாமி கோவில்*
## வழிபாட்டிற்கும் முன் அனுமதி!

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு செல்லும் பக்தர்கள் தமது பெயரையும் முகவரியையும், அடையாள அட்டைகளையும் இராணுவத்தினரிடம் காட்டி அனுமதி பெற்ற பின்பு தான் கோவிலுக்கு செல்லமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாவை ஆக்கிரமித்

(☞ 2ம் பக்கம்)

## 8 விடுதலைப் புலிகள் வீரச்சாவு

கனகராயன் குளம் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினருடனான மோதுகையில் நேற்று முன்தினம் ஐந்து விடுதலைப் புலிகள் வீரச்சாவை அடைந்துள்ளனர். கப்டன். நிதர்சன் (செல்லத்துரை தெய்வேந்திரன்), லெப்

(☞ 2ம் பக்கம்)

லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
RATHY JEWELLERS
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில்
சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்



28 Ealing Road, Wembley, Middx. HA0 4TL
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.00 P.M.
Sunday 12.00 Noon - 6.00 P.M.

# சோனியா கட்சித் தலைமையை ஏற்க வேண்டும்

வெளிநாட்டு பயணத்தை முடித்துக்கொண்டு கடந்தவாரம் டெல்லி திரும்பிய சோனியா காந்தியை முன்னாள் மத்திய அமைச்சர்கள், அர்ஜுன் சிங், கே.கருணாகரன் ஆகியோர் வரவேற்று கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

ராஜீவ் காந்தி படுகொலைக்கு பின்னணியிலுள்ள சதி குறித்து விசாரிக்கும் ஜெயின் ஆணையத்தின் இடைக்கால அறிக்கை வெளியான போது சோனியா இங்கிலாந்தில் தங்கியிருந்தார்.



ஜெயின் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள வி.பி.சிங், தி.மு.க. சம்பந்தப்பட்டுள்ள ஐக்கிய முன்னணி மீது சீதாராம் கேசரி இன்னமும் பரிவுகாட்டுவதாகவும், காங்கிரஸ் கட்சியின் நலனை அவர் புறக்கணித்து விட்டதாகவும் சோனியாவிடம் இவர்கள் முறையிட்டனர். ஜெயின் ஆணைக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, தி.மு.கவை அமைச்சரவையிலிருந்து வெளியேற்ற ஐக்கிய முன்னணியை நிர்ப்பந்திக்க கேசரி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அத்தோடு கட்சியை பலப்படுத்தும் வாய்ப்பை இழந்துவிட்ட சீதாராம் கேசரி தொடர்ந்தும் தலைவராக நீடிப்பது கட்சியின் வளர்ச்சிக்கு எதிராகவே இருக்கும் ஆகவே கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்க முன்வருமாறு சோனியாவை வலியுறுத்தியுள்ளனர்.

# ராஜீவ் கொலை குறித்து நீதிபதி விசாரணை

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைகுறித்து நீதிபதி ஜெயின் தலைமையிலான ஆணைக் குழு விசாரணை நடத்தி வரும் ஜெயின் ஆணைக் குழு தனது இடைக்கால அறிக்கையை தாக்கல் செய்துள்ளது.

முன்னாள் பிரதமர்கள் வி.பி. சிங், சந்திரசேகர் மற்றும் தமிழக முதல்வர் கருணாநிதி ஆகியோருக்கு இவ்வகையில் கண்டனம் தெரிவித்ததாக பத்திரிகையில் செய்திகள் வெளிவந்துள்ளதால் அரசிற்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதை தொடர்ந்து ஜெயின் ஆணைக் குழு தெரிவித்த விடயங்களுக்கான அடிப்படை ஆதாரங்களை உடனடியாக தரும்படி அவ் ஆணைக் குழுவின் செயலாளருக்கு மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த வாரம் கடிதம் அனுப்பியதாக தெரியவருகிறது.

இதற்கிடையில் ஜெயின் ஆணையரின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வது தொடர்பான சட்ட ஆலோசனையை உள்துறை அமைச்சகம் கேட்டுள்ளது இது தொடர்பாக விவாதிப்பதற்கு பாராளுமன்றக்கூட்டம் எதிர்வரும் 19-ம் திகதி கூட்டப்படவுள்ளது.



# முதல்வருக்கு கண்ணகி காலத்து சிலம்பு

கண்ணகி காலத்தில் பயன்படுத்தப்பட்ட மூன்று சிலம்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதில் ஒன்று தமிழக முதல்வர் கருணாநிதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

தொல் பொருள் இயக்குனரான எல்.எல் தியாகராஜன் கொச்சி, கொல்லம் அருகேயுள்ள ஆழ்கடலில் முப்பது அடிக்கும் கீழாக மூன்று காற்சிலம்புகளைக் கண்டெடுத்துள்ளார். கண்டெடுக்கப்பட்ட சிலம்புகளில் ஒன்றை புதைபொருள் ஆய்வு நிலையத்தின் தலைவர் காசிநாதனிடம் அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார். மற்றொரு சிலம்பினை தமிழக முதல்வர் கருணாநிதிக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இச் சிலம்பு ஏறக்குறைய 1800 தொடக்கம் 2000 ஆண்டுகளுக்கு பழமை வாய்ந்தது என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இச் சிலம்பு அரபிக் கடலில் கண்டெடுக்கப்பட்ட காரணத்தால், தமிழரின் பழங்கால வரலாற்றின் ஒரு திருப்பு முனையாக இது அமையக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

# நெல்லையில் திராவிடர் கழகம் அமெரிக்க கொடும்பாவி எரிப்பு

நெல்லை மாவட்டத்தில் திராவிடர் கழகத்தினர் பொலிஸ் தடையை மீறி அமெரிக்காவின் கொடும்பாவிகளை எரித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளை அமெரிக்கா பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்ததை கண்டித்தும், சிறிலங்காவிற்கு பல வகையில் உதவிகள் புரிந்து வருவதையும் கண்டித்தும், திராவிடக் கழக தொண்டர்களும், தமிழீழ விடுதலை இயக்க ஆதரவாளர்களும் இணைந்து அமெரிக்க கொடும்பாவிகளை எரிக்க முடிவு செய்தனர்.

இதன்படி நெல்லை மாவட்டத்தில் பாரதியார் சிலை முன்பாக 12.11.97 அன்று முன்னரே அறிவித்த நேரப்படி அமெரிக்காவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. கொடும்பாவி எரிக்கப்பட்ட சில மணி நேரத்தின் பின் அவ்விடத்திற்கு விரைந்து வந்த பொலிசார், சந்தேகத்தின் பெயரில் மாசி குட்டி, விவேகராசு, தமிழ் மாந்தன், சுந்தரம், சந்திரசேகரம், மற்றும் சேலத்தை சேர்ந்த பன்னீர்செல்வம், ஜெகதீஸ், அருண், இளங்குமரன் ஆகியோரை கைதுசெய்தனர்.

இதேதினம் மதுரையில் பழ. நெடுமாறன் தலைமையில் ஊர்வலமும் கொடும்பாவி எரிப்பும் நடைபெற்றது. இது தொடர்பாக நெடுமாறன் உட்பட 39 பேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

# அணு ஆயுதத் தயாரிப்பில் இந்தியாவுக்கு நாட்டம் இல்லை

**- குஜ்ரால்**

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அவசியம் ஏற்படாத வரை அணு ஆயுத தயாரிப்பில் இந்தியா அக்கறை காட்டாது என இந்தியப் பிரதமர் குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் டெல்லியில் தேசிய பாதுகாப்பு கல்லூரி ஒன்றில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய பிரதமர் குஜ்ரால்,

21-ம் நூற்றாண்டில் அணு ஆயுதமற்ற உலகம் என்ற ஒரு இலட்சியத்தை அடைய வேண்டுமானால் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடும் அனைத்து உலக நாடுகளும் இவ் விவகாரம் குறித்து, அக்கறையாக இருக்க வேண்டும். அந்த இலட்சியத்தை அடைய நாம் கடுமையாக உழைக்க வேண்டும். அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடும் நாடுகள் பல தமது தயாரிப்புகளை முற்றிலுமாக அழித்து விட மறுத்து விட்டன. அதனால் தான அணு ஆயுத ஒப்பந்தத் தடைச் சட்டத்தில் இந்தியா கையெழுத்திட மறுத்துவிட்டது.

உலகில் அணு ஆயுதமற்ற ஒரு மண்டலமாக மாற்ற இந்தியா ஆர்வம் கொண்டுள்ளது டன், பாகிஸ்தானுடன் இந்திய அரசு, மீண்டும் தமது பேச்சு வார்த்தையை ஆரம்பித்துள்ளது. தமது அண்டைய நாடுகளுடனான உறவை பலப்படுத்த இது போன்ற பேச்சுவார்த்தைகள் உதவும் என்றும் கூறினார்.

# பத்மநாபா கொலைவழக்கில் நியாயம் கிடைத்துள்ளது

**- ஆர். நாகராஜன்**

பத்மநாபா கொலைவழக்கில் வழக்கிலிருந்து விடுதலை கிடைத்துள்ளது என்று ஆர். நாகராஜன் கூறினார்.

அரசியல் நோக்கத்துடன் என் மீது பொய் வழக்கு போடப்பட்டது. உள்துறை செயலாளராக இருந்த என்னையே தடா சட்டத்தின் கீழ் கைதுசெய்து, விடுதலைப் புலிகளை தப்ப விட்டதாக என் மீது குற்றம் சுமத்தி தவறான வழக்குப்போடப்பட்டு என்னை சித்திரவதை செய்தார்கள். தற்போது அவர்கள் அதற்கான பலனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஜெயலலிதா அரசு பழிவாங்கும். நோக்குடன் என் மீது பொய்வழக்கு தொடர்ந்தது தற்போது நிருபிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தார்மீக பொறுப்பேற்று ஜெயலலிதா அரசியலில் இருந்து விலக வேண்டும் என்றும் கூறினார்.

மேலும், வை. கோபால்சாமியின் தம்பி ரவிச்சந்திரன் தெரிவிக்கையில், காயப்பட்டு வந்தவர்களுக்கு மனிதாபிமான முறையில் ஆதரவு கொடுத்தோம். ஆனால் இலங்கை தமிழர்களுக்கு இந்திய மக்கள் ஆதரவு கொடுக்ககூடாது என்பதற்காகவும், தமிழர்களை பயமுறுத்தவும் இது போன்ற பொய் வழக்குகள் எம்மேல் போடப்பட்டன என்று அவர் கூறினார்.

# வாழை இலையிலிருந்து எரிபொருள்

வாழை இலையிலிருந்து எரிபொருள தயாரிக்கும் நிறுவனத்தை உயிரிவேதியல் தொழில் நுணுக்க மையம் டெல்லியில் உருவாக்கியுள்ளது. இவ் எரிபொருள் உற்பத்திகள் பற்றி மைய அறிவியல் நிபுணர் டாக்டர் வி.சி.கலியா கூறுகையில்,

வாழை இலைகளைக் காயவைத்து பொடியாக்க வேண்டும். அத்துடன் களிமண் அல்லது மாட்டுச் சாணத்தைக் கலந்து கற்கள் போல அறுத்துக் காயவைத்து அக் கட்டிகளை எரிபொருளாகப் பயன்படுத்தலாம் என்றார்.


## கிருஷ்ணா அச்சகம்

விலைகள் குறைவு! குறித்த தவணை!! தரமான வேலை!!!

London Models திருமணஅழைப்பிதழ்கள்!

உங்கள் தேர்வுக்கு 200ற்கும் மேற்பட்ட மாதிரிகள் எம்மிடம் உண்டு!

சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும், மொழிபெயர்ப்புத் தேவைகளுக்கும்...

Imprimerie KRISHNA

73, Rue Doudeauville, 75018 Paris.

M°: Marcadet Poissonniers / Château Rouge

மொழிபெயர்க்கப்பட்ட உங்கள் ஆவணங்கள் மீளப்பெறும் வகையில், ஐந்து வருடங்கள் வரை எங்கள் கொம்பியூட்டர்களில் பாதுகாத்து வைக்கப்படுகின்றன...

உங்கள் வண்ணக்கலர் வேலைகளுக்காக எங்கள் நவீன அச்சு இயந்திரங்கள்...



வெளிநாடுகளிலிருந்து அச்சுப்பதிப்பு வேலைகளை எம்மிடம் செய்துகொள்ளவிரும்புவர்கள் தபாற்பொதி மூலமும் பெற்றுக்கொள்ளலாம்!

Tél : 01 42 51 29 92

Fax. : 01. 42. 51. 35. 25

# இந்திய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் என்.வி.என்.சோமு உலங்குவானூர்தி விபத்தில் பலி

இந்திய மத்திய பாதுகாப்பு இணை அமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற் குழு உறுப்பினருமான என்.வி. என்.சோமு கடந்த வெள்ளிக் கிழமை (14.11.97) அன்று காலை 9.15 மணியளவில் அருணாசலப் பிரதேசத்தில் இடம்பெற்ற உலங்கு வானூர்தி விபத்தில் உயிரிழந் துள்ளார். இவருடன் அவ் உலங்கு வானூர்தியில் பயணம் செய்த 4 இராணுவ அதிகாரிகளும் உயிரிழந்துள்ளனர்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் என்.வி.என்.சோமுவின் உடல் கடந்த இராணுவ விமானம் மூலம் வெள்ளிக்கிழமை இரவு 1.30 மணிக்கு சென்னைக்குக் கொண்டுவரப்பட்டது.

விபத்தில் பலியான அமைச்சரின் உடல் இராணுவ மரியாதையுடன் கடந்த சனிக்கிழமை (15.11.97) 21 குண்டுகள் முழங்க அடக்கம் செய்யப்பட்டது.

இறுதி நிகழ்ச்சிகளில் முக்கி யஸ்தர்களை தவிர எவரும் அனு மதிக்கப்படவில்லை. அவரது மகன் திருமாறன் பகல் 3.37 மணிக்கு சோமுவின் உடலுக்கு தீ மூட்டினார்.

இவரது மரணம் குறித்து தமி ழக முதல்வர் கருணாநிதி வெளி யிட்ட இரங்கல் செய்தியில், திராவிட முன்னேற்றக் கழகத்



தின் முன்னணி வீரர்களில் ஒரு வரும், கழகத்தின் செயற்குழு உறுப்பினரும், கழக அமைப்புச் செயலாளராக திறம்பட பணி யாற்றியவரும், மத்திய அரசின் பாதுகாப்புத்துறை இணை அமைச்சராக விளங்கியவருமான என்னுடைய அருமைத்தம்பி என்.வி.என்.சோமு அருணாச லப் பிரதேசத்திற்கு பாதுகாப் புப் பணி குறித்த அலுவல் கார ணமாகச் சென்றபோது உலங்கு வானூர்தி விபத்துக்கு உள்ளாகி அவருடன் நான்குபேரும் உயிரி ழந்தார்கள் என்ற செய்தி கேட்டு தாங்கமுடியாத அதிர்ச்சிக்கு ஆளாகியிருக்கிறேன்.

தம்பி சோமு, இந்த இயக்கத் திற்கு இரத்த நாளமாக இருந்து ஆற்றியுள்ள அரும்பணியை யாரா லும் மறுக்க இயலாது. இனிய சுபாவம், எளிய வாழ்க்கைமுறை, எல்லோரிடத்திலும் சகோதரப் பாசத்தோடு பழகுகின்ற பண்பு. இதற்கெல்லாம் உறைவிடமாக இருந்த என் உயிரனைய அந்த உடன்பிறப்பு இன்று இல்லை யென்று அவரை மாயமாய் தழுவிக்கொண்டது. அவருடைய குடும்பத்தாருக்கும் மனைவி மக்களுக்கும், அவரை இழந்து தவித்துக் கொண்டிருக்கின்ற இந்த பெரும் குடும்பமாம் கழ கக் குடும்பத்தில் உள்ள உடன் பிறப்புக்கள் அனைவருக்கும் என் னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தமிழக முதல்வர் தனது இரங்க லில் தெரிவித்துள்ளார்.

# மத்திய மந்திரிகள் சொத்து விபரத்தை வெளியிட வேண்டும்

## - ஜெயலலிதா

'தமிழகத்தைச் சேர்ந்த மத்திய மந்திரிகள் அனைவரும் தங்களி டம் உள்ள சொத்துக்களின் விப ரத்தை வெளியிட வேண்டும்' என முன்னாள் முதல்வரும் அ.தி. மு.க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

'மத்திய அமைச்சர்கள் அனை வரும் தங்களது சொத்துக் கணக் குகளையும், தங்கள் குடும்ப உறுப்பினர்களின் சொத்துக் கணக்கையும் ஒப்படைக்க வேண் டும் என்று பிரதமர் அலுவல கம் கேட்டுக்கொண்டதை தமி ழகத்தின் மத்திய அமைச்சர்கள் இதுவரை அலட்சியப்படுத்தி வருவதாக ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர் பாக அவர் வெளியிட்ட அறிக் கையில்

'தமிழ்நாட்டைச் சேர்ந்த மத் திய அமைச்சர்கள் முரசொலி மாறன், பசிதம்பரம், என்.சோமு, டி.ஆர்.பாலு, ஜெயந்தி நடராஜன், தனுஷ்கோடி ஆதித்தன் ஆகி யோர் தங்கள் சொத்துக் கண க்கை இதுவரை பிரதமர் அலு வலகத்தில் சமர்ப்பிக்கவில்லை.

இந்த உத்தம புத்திரர்கள் இது வரை சொத்துக்கணக்கை அளிக் காமல் பிறரைத் தூற்றுவது வெட்கக்கேடாகத் தெரியவில் லையா? இவர்கள் தமிழ் நாட் டில் உத்தம முகமூடி அணிந்து கொண்டு இரட்டைவேடம் போடுகின்றார்கள். உங்களிடம் வருமானத்திற்குத் தக்கசொத்து இருப்பில் இருந்தால் சொத்துக் கணக்கை தாக்கல் செய்வதில் தாமதம் ஏன்? உலக மகா யோக்கியர்கள் என்று கூறித்திரி யும் இந்த போலி வேடதாரிக ளின் சுய ரூபத்தை சொத்துக் கணக்கை தாக்கல் செய்யாமல் கால தாமதம் செய்வதிலிருந்தே நாட்டு மக்கள் புரிந்துகொள் வார்கள் என்றும் தெரிவித்துள் ளார்.

# கட்டாய கல்விக்கு குழந்தைகள் ஆதரவு

குழந்தைகளுக்கான கல்வி யினை புகட்டுவதை அடிப் படை உரிமையாக்கும், 83-வது அரசியல் சட்ட திருத்தத்திற்கு ஆதரவைத் தெரிவித்து 800 மாணவர்கள் புதுடில்லியில் அமைந்திருக்கும் குழந்தைகள் பூங்காவில் ஒன்று கூடினார்கள். மும்பை மாவட்டத்தைச் சேர் ந்த வாய்ஸ் ஆப் இந்தியா என்ற அமைப்பு இத்தகைய பிரச்சா ரத்தை ஆரம்பித்து முதல்தடவையாக 6 வயது முதல் 14 வயது வரையுள்ள மாணவர்க ளுக்கு ஆரம்பக் கல்வி கற்பிக்கப் பட வேண்டும் என்றும், குழந் தைகள் ஆர்வமாக கல்வியைத் தொடரவுள்ளனர் எனவும், பாரா ளுமன்றத்திற்கு தெரியப்படுத் தும் முகமாக சிறார்களிடமி ருந்து கையொப்பங்கள் பெறப் பட்டன.

பாராளுமன்றத்தின் குளிர் காலக்கூட்டத் தொடரின் கல் வியை அடிப்படை உரிமை யாக்கும் சட்டத்தை நடைமு றைக்குக் கொண்டுவருவதற்காக இவ் நடவடிக்கை எடுக்கப்பட் டது என்பது குறிப்பிடத்தக்கது.

# 13 ரூபாய்க்காக 14 ஆண்டுகள் நடைபெற்ற வழக்கு

சென்னை உயர்நீதி மன்றத் தில் 13 ரூபாய்க்காக தமிழக அரசு தாக்கல் செய்த வழக்கு 14 ஆண்டுகால விசாரணையின் பின் தள்ளுபடி செய்யப்பட்டது.

மாமல்லபுரம் அருகே கல் பாக்கத்தில் அணுமின் நிலையம் அமைக்க 1968-ம் ஆண்டு நிலங் கள் கையகப்படுத்தப்பட்டு நில உரிமையாளர்களுக்கு இழப்பீடு கொடுக்கப்பட்டது. ஒரே குடும் பத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சொந்தமான 134 சதுர அடி நிலமும் கையகப்படுத்தப்பட் டது. ஒரே குடும்பத்தைச் சேர்ந் தவர்களுக்கு மொத்தமாக 1738 ரூபா 25 சதம் இழப்பீடு கொடுக் கப்பட்டது.

இதை எதிர்த்து நீதி மன்றத் தில் 1969-ம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவ் வழக்கை விசாரித்த நீதிபதி அவ் வழக்கை 9ரூபாய் 97 சதம் அதிகமாக நிர்ணயித்து 1976-ம் ஆண்டு தீர்ப்புக் கூறியதுடன் 4 சதவீத வட்டியும் கொடுக்க உத் தரவிட்டிருந்தார். அதாவது நிர் ணயித்த விலையை விட 13 ரூபா 59 சதம் கூடக்கொடுக்க உத்தரவிடப்பட்டது. இவ் உத்த ரவை எதிர்த்து 1983-ம் ஆண்டு உயர் நீதி மன்றத்தில் வழக்கு தாக்குதல் செய்யப்பட்டது. தொடர்ந்து 14 ஆண்டுகளாக நிலுவையிலிருந்த இவ வழக்கை கடந்த வாரம் விசாரித்த நீதி பதி சிறுதொகைக்காக தொடர் ந்து வழக்கை இழுபடி செய்வ தைக் கண்டித்து வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

# ☺ வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும் ☹

☺ 'ராஜீவ்காந்தி கொலைச் சதியில் தமிழக முதல்வர் கருணாநிதிக்கு நிச்சயமாக எந்தத் தொடர்பும் இல்லை. கருணாநிதி குற்றம் அற்ற வர்'

— முன்னாள் புலனாய்வுத்துறை கே.மகாதேவன்.

☺ ☺ ☺

☺ 'வீரப்பன் சரண் அடைந்துவிடு. நானே நேரில்வந்து அழைத்து செல் கிறேன். உன்னை அதிரடிப்படையினர் சுற்றி வளைத்துள்ளனர்.

— நக்கீரன் ஆசிரியர் கோபால்

☺ ☺ ☺

☺ 'காங்கிரஸ் கட்சியை விட்டு விலக நினைப்பவர்கள், விலகிப் போக லாம். எமக்கு ஆட்சேபனை இல்லை'

— சீதாராம் கேசரி

☺ ☺ ☺

☺ 'ஜெயின் ஆணைக்குழு இடைக்கால அறிக்கையைத் தாக்கல் செய் வதை தாமதப்படுத்த காங்கிரசும், ஐக்கிய முன்னணியும் சதி செய்கின்றது'

— யஸ்வந்த் சின்ஹா

☺ ☺ ☺

☺ 'ராஜீவ் கொலைச் சதியின் பின்னணி குறித்து விசாரிக்கும் ஜெயின் ஆணைக்குழு மக்கள் பணத்தையும், நேரத்தையும் விரயடிப்பதை தவிர வேறு எதுவும் செய்யவில்லை'

— மாதவன்

☺ ☺ ☺

☺ 'ஜெயின் ஆணைக்குழு இடைக்கால அறிக்கையை நாடாளுமன்றத் தில் அரசு சமர்ப்பிக்கும் முன், ஐக்கிய முன்னணியிலிருந்து தி.மு.க.வை வெளியேற்ற வேண்டும்

— பிரணாப் முகர்ஜி

☺ ☺ ☺

**அப்படியே அமுக்கிட்டாங்க!**

☹ தி.மு.க. அரசு தமிழகத்தில் பதவியேற்றவுடன் முதன்முறையாக டெல்லிக்கு வந்த கருணாநிதி, தமிழ்நாடு இல்லச் சாப்பாட்டைச் சுவைத்துவிட்டு, 'நன்றாகவே இல்லையே! ஆந்திரா பவனில் சாப் பாடு அருமையாக இருக்கிறது...' என்று காமெண்ட் அடித்தார். ஆந் திரா பவன் சிற்றுண்டிச்சாலையை தனியார்கள் நடத்துவதால்தான் நல்ல 'சுவையாக' இருக்கிறது என்பதை பின்பு அறிந்துகொண்ட தமி ழக முதல்வர், டெல்லி தமிழ்நாடு இல்லத்திலும் அதே பாணியைப் பின்பற்றி, சிற்றுண்டிச்சாலையை தனியார் மயமாக்கலாம் என்று யோசனை தெரிவித்தார்.

இதுசம்பந்தமாக டெல்லியில் உள்ள மற்ற மாநில அரசு இல்லங்க ளில் சிற்றுண்டிச்சாலை எப்படி நடாத்தப்படுகிறது என்பதை ஆராய் ந்து, தமிழ்நாடு இல்லத்தில் சிற்றுண்டிச்சாலை தனியார் மயமாக்க லாம் என்று யோசனை தெரிவித்தார்.

இது சம்பந்தமாக டெல்லியில் உள்ள மற்ற மாநில அரசு இல்லங்க ளில் சிற்றுண்டிச்சாலையைத் தனியார் வசம் ஒப்படைக்க ஃபைல் தயார் செய்து சென்னைக்கு அனுப்பப்பட்டது. இப்படி ஒரு ஃபைலைப் பார்த்ததுமே ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் அரண்டு போனார்கள். பிரைவேட் ஆட்களிடம் சிற்றுண்டிச்சாலை போய்விட்டால் நம் ஆட்களுக்கு இலவ சமாக சாப்பாடு தரப்படாது. சிற்றுண்டிச்சாலையில் நம்முடைய அதிகா ரம் போய்விடும் என்று எண்ணி ஃபைலை அப்படியே அமுக்கிவிட்டார் கள். வழக்கமான அதிகார வர்க்கத்தின் வார்த்தைகளான, 'இந்தத் தனி யார் திட்டம் ஒத்துவராது' என்று ஃபைலில் எழுதிவிட்டதாகச் சொல்லப் படுகிறது. ஆனால், இந்த விவகாரம் முதல்வருக்குத் தெரியாதாம்!

— ஜூனியர் விகடன்

☺ ☺ ☺

**யானைக்குப் பொய்ப் பல்!**

'மருதநாயகம்' படத் துவக்கவிழாவில் ராணி எலிசபெத்தை வர வேற்க காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை வீரர்கள் அணி வகுத்து இருந்தார்கள். ராணியை வரவேற்கும் நிகழ்ச்சிக்கு வரவழைக் கப்பட்ட யானைகளில் ஒன்றுக்கு தந்தம் இல்லாதிருந்ததை கண்ட சிலர், கமலிடம் விஷயத்தை சுட்டிக்காட்டினார்கள். 'ராணியின் வரவேற்பின் போது சிறு குறைகூட இருக்கக்கூடாது' என்று கமல் கண்டிப்பாக சொல் லிவிட, அவசர அவசரமாக அலைந்து திரிந்து, அந்த யானைக்கு போலி யாகத் தந்தம் செய்து உண்மைத் தந்தத்தோடு இணைத்தார்கள்.

— ஜூனியர் விகடன்




நன்றி: நக்கீரன்

# வெளிவந்துவிட்டது!

செவ்வந்திப்பூவே
உன் தேகம்
தொட்ட தென்றல்
என் தேசம் வந்து
நெஞ்சை
அள்ளியதே....

இதயத்தை வருடும்
இளமை வரிகளும்
இதமான இன்னிசையும்

அழகான தமிழீழம்
எதிர்காலம்
உருவாகும்
அங்கே நம் காதல்
இணை சேருமோ?

## இவன்

கண்ணே நீயும்
கண்ணடிச்சா இந்த
கண்ணனுக்கும்
காதல் காய்ச்சல்
வரும்....

சிந்தும் மழை நீர்
பூமிக்கு சொந்தம்
இங்கே எனக்கு யார்
சொந்தம்..?

உயிரே... உயிரே
நினைவுகள்
வந்தாடுதே குறும்பு
விழிகள் எனது
மனதை
பந்தாடுதே...

RAMIY RECORDS

மண்ணில்
வாழ்கின்ற
மணித்துளி
ஒவ்வொன்றும்
மனிதன் வாழ்க்கை
சொந்தமல்லவா!...

தமிழ் இசைத்தட்டு வரலாற்றில் முப்பதுனாயிரம்
இசைத்தட்டுகளில் முதன்முதவாக வெளிவருகிறது...
கலைபண்பாட்டுக்கழகத்தின்...




**S.P. பாலசுப்பிரமனியம், ஹரிகரன், உன்னிகிருஷ்னன், சுவர்னலதா, சித்ரா, கிருஷ்னராஜ், ஜானகி இன்னும் பல ரக இனிய குரல்கள் அடங்கிய இசைத்தட்டு**

**ரமி; ஈழத்தமிழர்களின் நம்பிக்கை நிறுவனம்**

# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

பகுதி II

(41)

# தமிழரசுக் கட்சியின் வெளிவேசம்

சங்கானையில் நடந்த சாதி ஒழிப்புப் போராட்டம் குடாநாடு முழுவதிலுமிருந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மிகப் பெரிய உத்வேகத்தைக் கொடுத்தது. நா.சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி, S.T.N. நாகரத்தினம் தலைமையில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஒன்றை ஆரம்பித்தது. இவ்வியக்கம் குடாநாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மூன்று இலக்குகளைக் குறி வைத்து தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தியது.

> தமிழர்களை தமிழர்களே அடக்கும் இழிவு செய்யும், இரண்டாந்தரப் பிரசைகளாக நடாத்தும் சாதி அமைப்பையும், தீண்டாமையையும் ஒழிப்பதற்கு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் நடத்திய போராட்டத்திற்கு, தமிழரசுக்கட்சி தமிழ் மக்களுடைய 'எதிர்கால நலனின் அக்கறையுள்ள கட்சியாக இருந்திருந்தால்' நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியிருக்க வேண்டும்.

அவையாவன,

1. **தேநீர்க்கடைகள்.**
2. **இந்து ஆலயங்கள்.**
3. **தண்ணீர்க் கிணறுகள்.**

அந்தக் கால கட்டத்தில் (1960—70) குடாநாட்டிலிருந்த சகல தேநீர்க் கடைகளிலும், சாப்பாட்டு கடைகளிலும் சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றைய உயர் சாதியினருக்குச் சமமாக இருந்து தேநீர் அருந்துவதற்கும், உணவருந்துவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. அவர்கள் உணவருந்துவதற்கென்று பெரிய சாப்பாட்டுக் கடைகளில் ஒரு ஓரத்தில் ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கே இருக்கைகளும் மேசைகளும கிடையாது. அவர்கள் தரையில் இருந்தே உணவு உண்ண வேண்டும். துருப்பிடித்த மூக்குப்பேணி, அல்லது சோடாப் போத்தல்களில்தான் அவர்கள் தண்ணீர் அல்லது தேநீர் குடிக்க வேண்டும. சாதி குறைந்த ஒருவர் தன்னுடைய சொந்த ஊரை விட்டு வெளியே செல்லும் போது தன்னுடைய சாதிப் பெயரையும் மறைத்து, உயர் சாதியினருக்குச சமமாக அவர்களுக்குரிய இடத்திலிருந்து உணவருந்துவது கண்டு பிடிக்கப்பட்டால் அவருக்கு கடும் தண்டனை வழங்கப்படும். 1966—ம் ஆண்டில் வடமராட்சிப பிரதேசத்தைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட இளைஞர், ஒருவா யாழ்ப்பாண நகரத்தில் உள்ள பிரபல சைவ உணவு விடுதி ஒன்றில் உயர் சாதிக்காரருக்குரியவர்களுக்குரிய இடத்தில் இருந்து உணவருந்தியபோது அவரது கைகளில் இருந்த 'காய்ப்பு' அடையாளத்தை வைத்து, அவர் மரமேறுபவர் என்று கண்டு பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டதுடன், மூன்று நாட்கள் வெறும் தண்ணீரை மட்டும் குடித்துக்கொண்டு ஒரு 'லோட்டு' விறகை கொத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட சம்பவம் நடந்தது.

எனவே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் தங்களுடைய முதல் இலக்காக இந்த தேநீர்க்கடை மற்றும் சாப்பாட்டுக் கடைகளை தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு எதிரான போராட்டத்தை தொடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் முக்கியமாக தமிழரசுக் கட்சியினரின் பாத்திரமும், அதன தலைவர்களது வர்க்கக் குணாமசமும் திட்டமிட்டு மூடி மறைக்கப்பட்டு வந்திருக்கிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் மாபெரும் சாதி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்ற காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, அரசாங்கத்தில் 'அங்கம்' வகித்தது.

தமிழர்களை தமிழர்களே அடக்கும் இழிவு செய்யும், இரண்டாந்தரப் பிரசைகளாக நடாத்தும் சாதி அமைப்பையும், தீண்டாமையையும் ஒழிப்பதற்கு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் நடத்திய போராட்டத்திற்கு, தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுடைய 'எதிர்கால நலனின் அக்கறையுள்ள கட்சியாக இருந்திருந்தால்' நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் தமிழரசுக் கட்சி அவ்வாறு செய்யவில்லை. அது வெளியில் தீண்டாமைக்கும் சாதி அமைப்புக்கும் எதிரான கட்சியாக தன்னைக் காட்டிக் கொண்டு, உள்ளூர் சாதி அமைப்பை காப்பாற்றுபவர்களின் நலன்களுக்கு வக்காலத்து வாங்கும் கட்சியாக இருந்தது.

தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் பலரும் 'சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின்' வாக்குகளைப் பெறுவதற்காக வெளியிடத்தில் அந்த மக்களிடம் அன்பொழுகப் பேசினார்கள். தங்கள் வீட்டுக்குள் அவர்கள் வந்த போது உதவியாளர்களிடம் சொல்லி அவர்களை கேற்றுக்கு வெளியிலேயே நிற்க வைத்து 'ஐயா வீட்டில் இல்லை' என்று பொய் சொல்லி அனுப்பி வைக்கும் வேடதாரிகளாகவே இருந்தார்கள்.

> தன்னுடைய உரிமையைத் தட்டிக் கேட்கச் சென்றவனை பிடித்து வந்து சிறையில் அடைத்து சித்திரவதை செய்து 'சிறுநீர் பருக்கிய' உதவிப் பொலீஸ் அதிகாரியின் நடத்தை, காவல் துறை எவ்வாறு சாதியக் கனவான்களின் பக்கம் நின்று செயற்பட்டது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சங்கானைப் போராட்டம் தொடர்பாக தமிழரசுக் கட்சியின் தளபதி என்று மார்தட்டிக்கொண்ட அ.அமிர்தலிங்கம் தெரிவித்த கருத்துக்களும் பாராளுமன்றத்தில் பேசிய பேச்சும் அவரது சாதிய வர்க்க நலனை மட்டுமல்ல, அவர் சார்ந்த கட்சியினது சாதிய வர்க்க நலனையும் பிரதி பலிப்பதாக இருந்தது.

சண்முகதாசனும், அவரது சகாக்களும் சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு என்ற பெயரில் ஆயுதக் கலாச்சாரத்தை வளர்த்துவிட்டு, தமிழர்கள் மத்தியில் அமைதியின்மையை உருவாக்க முயல்கிறார்கள் என்று தமிழரசுக் கட்சித் தலைவர்கள் டட்லி சேனநாயக்காவின் அரசாங்கத்திற்கு முறைப்பாடு செய்திருந்தார்கள்.

உண்மையில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், காந்தி வழி; அகிம்சைவழி என்று சொல்லிக்கொண்டு 'ஐயாமார்களே நீங்கள் எங்களுக்கு அடியுங்கள், உதையுங்கள், எங்கள் வீடுகளை நெருப்பு வைத்துக் கொளுத்துங்கள், எங்கள் பெண்களை மானபங்கப் படுத்துங்கள். ஏனென்றால் பிறப்பால் நீங்கள் உயர்ந்தவர்கள்; நாங்கள் தாழ்ந்தவர்கள். நீங்கள் எது செய்தாலும் நாங்கள் எதிர்த்து ஒன்றும் செய்யக் கூடாது. ஆனால் தயவு செய்து எங்களுக்கு போத்தலிலும், கறள் பிடித்த மூக்குப் பேணியிலும் தேநீர் தராதீர்கள். எங்களை கோவிலுக்கு வெளியே நிற்கவிடாதீர்கள்', என்றெல்லாம் கெஞ்சி இரந்து நிற்கவில்லை.

அத்துடன் பிறப்பினால் யாரும உயர்ந்தவரும இல்லை. தாழ்ந்தவரும் இல்லை. உங்களுக்குள்ள உரிமை எங்களுக்கும் வேண்டும். நீங்கள் அதை தர மறுத்தால் நாங்கள் அதை எடுக்க வேண்டிய விதத்தில் எடுத்துக் கொள்வோம் என்று சவால் விட்டதுடன், சாதி அமைப்பை தகர்த்தெறிவதற்கான ஆயுதப் போருக்கும் அது தயாராகி வந்தது.

எப்போதுமே அடக்கு முறையாளர்களான சாதியக் கனவான்கள், ஆயுதபாணிகளாகவே இருந்தார்கள். அவர்கள் தங்களைச் சுற்றி ஆயுதம் தரித்த காடையர்கள் கூட்டம் ஒன்றையும் உருவாக்கியே வைத்திருந்தார்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் சாதிககட்டுப்பாடுகளை மீறுகின்ற போது சாராயத்தையும், பணத்தையும் கொடுதது இந்தக் காடையர் கூட்டத்தை அனுப்பி அந்த மக்களுக்கு 'பாடம் படிப்பித்த வரலாறுகள்' நிறையவே உண்டு.

அது மட்டுமல்லாது அன்று குடாநாட்டில் இருந்த அரச காவல்துறை என்பது சாதியக் கனவான்களுக்கு சேவகம் செய்த காவல் துறையாகவே இருந்தது. சங்கானை, நிற்சாமம் போராட்டத்தில் சாதி அமைப்புக்கு வக்காலத்து வாங்குவதில் முன்னின்று செயற்பட்ட (தமிழரசுக் கட்சி அபிமானியான) ஒரு உதவி பொலீஸ் அதிகாரியின் செயற்பாடு, இதற்கு ஒரு தலை சிறந்த உதாரணமாகும்.



தன்னுடைய உரிமையைத் தட்டிக் கேட்கச் சென்றவனை பிடித்து வந்து சிறையில் அடைத்து சித்திரவதை செய்து 'சிறுநீர பருக்கிய' இந்த உதவிப் பொலீஸ் அதிகாரியின் நடத்தை, காவல் துறை எவ்வாறு சாதியக் கனவான்களின் பக்கம் நின்று செயற்பட்டது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஆயுதம் தரித்த அடக்கு முறையாளர்களையும், அவர்களுக்குப் பின்நிற்கும் ஆயுத பாணிகளான பொலீஸ் படையையும் எதிர்கொள்வதற்கு கொள்கை உறுதியும், மனோ பலமும், ஆயுத பலமும் தேவை என்று தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் முடிவெடுத்ததில் தவறில்லை.

**- நக்கீரன்**

## சிறுகதை

# தர்ம அடி

**எஸ். ரீ. அருள்**

விமானம் டென்மார்க்கின் எல்லைக்குள் புகுந்து கொப்பனாகன் விமானத்தளத்தில் தரையிறங்கிக் கொண்டிருந்த போதும் பார்வதியின் நினைவுகள் வன்னியைவிட்டு நீங்கவில்லை, பேரப்பிள்ளைகளைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையில் உந்தப்பட்டு தமிழீழத் தாயகத்தை விட்டு டென்மார்க்கில் மூன்று மாதங்கள் வாழ்வதற்காக வந்துகொண்டிருந்தபோதும் வன்னியில் புலிக்கொடியின் நிழலில் சுதந்திரமாக வாழ்ந்த வாழ்வு எப்போது மீண்டும் வருமென்று எண்ணிக்கொண்டு, பார்வதி தான் அமர்ந்திருந்த விமானத்தின் பக்கமாகவுள்ள யன்னாலூடாக வெளியே பார்த்தாள், அப்போது விமானத்திலிருந்து பயணிகள் இறங்கிக்கொண்டிருந்தனர், விமானத் தளமெங்கும் பனியால் மூடப்பட்டு, புகார் மண்டலமாகக் காணப்பட்டது. விமானத்தினுள்ளே வந்த் குளிர்காற்றும் அவளின் உடலை நடுங்கச் செய்தது. பார்வதியும் தனது குளிர்ச்சட்டையை அணிந்துகொண்டு, தாயகப் பிரிவுத் துயரத்தை மனதில் சுமந்துகொண்டு விமானத்தை விட்டு இறங்கினாள்.

பார்வதியும் சுங்கப் பரிசோதனையை முடித்துக்கொண்டு வெளியே வந்தபோது, விமானப் பயணிகள் தங்குமிடத்தில் தமிழர்களைக் காணமுடியவில்லை, அவள் நின்ற இடத்திலிருந்து பல யார்களுக்கப்பால் நாலைந்து கறுப்புத் தலைகள் தெரிந்தன. பார்வதியும் அவர்களை நோக்கி நடந்தாள், அந்தக் கறுப்புத் தலைகளும் பார்வதியை நோக்கி விரைந்து வந்துகொண்டிருக்க, அவளை நோக்கி வந்துகொண்டிருந்தவர்களில் ஒருவர் குரல் 'அம்மா! அம்மா!' என்று அழைத்த வண்ணம் பார்வதியைக் கட்டித் தழுவிக்கொண்டது. பார்வதியின் மருமகள் கயல்விழியும் தனது மாமியிடமிருந்து கையிலுள்ள தோற் பையை வாங்கினாள், பார்வதியின் பேரப்பிள்ளைகளும் 'ஹாய் பெஸ்ற மோவா' என்று அழைத்த வண்ணம் பார்வதிக்கு கிட்ட ஓடி வந்தார்கள். பார்வதி தனது சொந்தங்களைக் கண்டதும் தன்னை மறந்து சந்தோஷத்தில் ஆழ்ந்துவிட்டாள், ஆனால் அந்த சந்தோஷம் ஒரு சில நிமிடங்கள் கூட நிலைக்கவில்லை. பார்வதியின் பார்வை கயல்விழியின் பக்கம் திரும்பியது. நெற்றியில் குங்குமமுமில்லை, தனது மகன் கட்டிய தாலியும் கயல்விழியின் கழுத்தில் காணவில்லை, சுமங்கலியாக வாழும் பெண்ணுக்குரிய அடையாளச் சின்னங்களை இழந்து காணப்பட்டாள், மறுபுறம் தனது பேரப்பிள்ளைகள் தமிழைப் பேசாது டெனிஷ் மொழியைப் பேசிக்கொண்டிருந்தார்கள். இந்தக் காட்சிகளைப் பார்ப்பதற்காகவா இவ்வளவு தூரம் ஓடோடி வந்தேனென்று திகைத்துப் போய் நின்றாள் பார்வதி. அப்போது மகன் சுந்தரம் தனது பிள்ளைகள் விமலையும், ரவியையும் அப்பாச்சியைக் கூட்டிக்கொண்டு தங்கள் வாகனம் நிற்கும் இடத்திற்குப் போகச் சொல்லிவிட்டு தானும், மனைவியும் தாய் கொண்டுவந்த ஏனைய பொதிகளையும் விமான நிலையத்திலிருந்து பெற்றுக்கொண்டு வாகனத்தில் வந்து ஏறினான். யாவரையும் ஏற்றிக்கொண்டு வாகனம் வீட்டை நோக்கிப் புறப்பட்டது. வாகனத்தில் சுந்தரமும், மனைவியும், பிள்ளைகளும் டெனிஸ் மொழியில் உரையாடினார்கள். இடைக்கிடையே சுந்தரமும், கயல்விழியும் பார்வதியுடன் தமிழில் உரையாடினார்கள், இப்படியாக மூன்று மணித்தியாலங்களுக்குமேல் பனி படர்ந்த மரங்களையும், பனி நிறைந்து கிடக்கும் வீதிகளையும் பார்த்தபடியே வந்த பார்வதியைச் சுமந்து வந்த வாகனம் வீதியோரத்தில் அடுக்கு மாடிகள் நிறைந்த இடத்தில் வந்து நின்றது. வாகனத்தை விட்டு யாவரும் இறங்கி, முப்பது படிகளுக்கு மேல் ஏறி மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியபடியே யாவரும் வீட்டினுள் நுழைந்தனர்.

அவர்கள் வீட்டினுள் வந்து அமர்ந்த மறுநிமிடமே வீட்டின் வெளிவாசல் மணியை யாரோ அடிக்கும் சத்தம் கேட்டது. உடனே சுந்தரம் எழுந்து சென்று வந்தவர்களை டெனிஷ் மொழியில் வரவேற்று, தன் தாயிடம் வந்திருப்பவர்கள், தனது டெனிஷ் தமிழ் தோழமை ஒன்றிய நண்பர்களென்றும், தமிழர்களின் நல்வாழ்விற்காக டென்மார்க்கில் குரல்கொடுத்துக்கொண்டிருப்பவர்களென்றும் அறிமுகப்படுத்தினான். பார்வதியும் வந்தவர்களை தமிழர்களின் பண்பாட்டிற்கு ஏற்றபடி அன்பாக வரவேற்றாள். அவர்களும் டெனிஷ் மொழியில் பார்வதிக்கு நன்றிகூறி, கையிலிருந்த பூச்செண்டுகளை பார்வதியிடம் கொடுத்துவிட்டு மண்டபத்தினுள் வந்து அமர்ந்தனர். வந்தவர்கள் பார்வதியிடம் தாயக மண்ணைப்பற்றி ஏதும் விசாரிக்கவில்லை. சுந்தரத்துடன் டெனிஷ் மொழியில் உரையாடிக்கொண்டிருந்தனர். அப்போது கயல்விழி எல்லோருக்கும் தோடம்பழசாற்றைப் பரிமாறினாள். பார்வதியும் தோடம்பழச் சாற்றைக் குடித்துக்கொண்டு நித்திரைக்குப் போகும் வரைக்கும் தமிழைப் பேசி மகிழ்ந்து வந்த தனக்கு, தன் தாய மொழியை பேசமுடியாமல் இருக்கிறதேயென்று எண்ணிக்கொண்டு மனவருத்தத்துடன் இருந்தாள். அப்போது சுந்தரம் எல்லோரையும் சாப்பிட அழைத்தான். பார்வதியும் வந்த களைப்புத் தீரக் குளித்துவிட்டு சாப்பிடுவதற்கு சாப்பாட்டு மேசையில் வந்து அமர்ந்தாள். அந்த மேசையில் கோழிப் புரியாணியும், கறிகளும், மதுப்புட்டிகளும் கிடந்தன. சுந்தரம் மதுப்புட்டிகளை உடைத்து ஆண்கள் இருந்த பக்கம் உள்ள கிளாஸ்களில் வைனை ஊற்றிக்கொண்டு தாயைப்பார்த்து 'அம்மா இது மதுபானமில்லை திராட்சைப்பழரசம்' என்று கூறிக்கொண்டு தானும் ஒரு கிளாசை எடுத்துக் குடித்துக்கொண்டு சாப்பிடத்தொடங்கினான். அவர்களுடன் வந்திருக்கும் பெண்களும் சாப்பிடத் தொடங்கினார்கள். பார்வதி தனது மகன் தன் முன்னாலே குடிப்பதை தடுக்க முடியாமல் இருக்கிறதே, தாயகத்திலை குடிக்கிறவங்களை புலிப்பெடியள் திருத்தி மனிதனாக்கிறாங்கள் இஞ்சை குடிச்சக் குடிச்சவராப் போற காரியை அவங்கடை பெண்டாட்டிமாரும் பார்த்துக்கொண்டிருக்கிறாளுகளே, ஏன் இப்பிடியொரு கேவலமான வாழ்க்கையைத் தன்ரை மகன் வாழ்றானென்று கவலைப்பட்டுக்கொண்டு சோற்றில் கையை வைத்தாள். எல்லோரும் சாப்பிட்டு முடித்து இரவுக்கோப்பியும் குடித்தனர். இரவு பத்து மணியளவில் வந்தவர்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள். சுந்தரமும் தாயிடம் அவளின் படுக்கையறைக்காட்டி, அந்த வீட்டை தான் விலைக்கு வாங்கியிருப்பதாக பெருமையாகக் கூறினான். பார்வதியும் அந்தப் புறாக்கூடு போலவுள்ள அறையுள் சென்று சிறைக் கதவுகளை மூடிக்கொள்வது போல் மூடிக்கொண்டு, அறையின் மின்விளக்குகளை அணைத்துவிட்டு, டென்மார்க்கின் முதல் நாள் வாழ்வே தனக்கு துயரம் நிறைந்ததாய் அமைந்துவிட்டதேயென்று எண்ணிக்கொண்டு கட்டிலில் சாய்ந்தாள்.

காலைச் சூரியன் கிழக்கு வானத்திலிருந்து மெல்ல எழுந்து, பார்வதியின் அறையை ஒளிபரப்பியபோது, பார்வதியின் அறைக் கதவுகளை சுந்தரம் தட்டினான். பார்வதியும் எழும்பிச் சென்று கதவைத் திறந்தபோது எல்லோரும் 'குட்மோன்' என்று கூறினார்கள். யாவரும் எங்கேயோ வெளியில் புறப்படத்தயாராகவுள்ளதை உணர்ந்துகொண்டாள். அப்போது சுந்தரம் 'அம்மா நாங்க வேலைக்குப் போகிறோம், உங்களுக்குத் தேவையான சாப்பாடு மேசையிலிருக்கு' எனக்கூறிக்கொண்டு தனது பிள்ளைகளையும் பெண்சாதியையும் கூட்டிக்கொண்டு வெளியில் சென்றான். பார்வதியும் பேரப்பிள்ளைகளைப் பார்க்க ஆவலோடு ஓடிவந்த தனக்கு பேரப்பிள்ளைகளோடு கதைக்க அவர்களுக்கு தமிழ் தெரியவில்லையே. தமிழ் கதைக்கத் தெரிந்தவர்களும் இங்கே டெனிஷ் மொழியில் தானே உரையாடுகிறார்களே, எதற்காக இப்படி இவர்கள் வாழ்கிறார்கள். தாயகத்தில் தான் யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்து சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையால் வன்னிக்கு இடம்பெயர்ந்து வாழ்ந்த போது தன்னை முன்பு அறியாதவர்கள் எல்லாம் 'அம்மா! அம்மா!' என்று அழைத்து உதவிசெய்து பாசமும், பண்பும் நிறைந்து வாழ்ந்தார்களே அப்படியான ஓர் நிம்மதியான வாழ்வை விட்டு விட்டு வந்து இந்த டென்மார்க் சிறையில் அடைபட்டுவிட்டேனே என்று கலங்கியபடி முகம் கழுவச் சென்றாள். காலைக் கடனை முடித்துக்கொண்டு, சாப்பாட்டு மேசையிலிருந்து கோப்பியையும், வெள்ளைப் பணிசையும் சாப்பிட்டு மதியப்பொழுதைக் கழித்துக்கொண்டாள்.

சுமார் நான்கு மணியளவில் எல்லோரும் வீட்டிற்கு வந்தார்கள், கயல்விழியும் அடுப்பில் உலையை ஏற்றி, ஓர் கறியும் சமைத்தாள், யாவரும் அவசர அவசரமாக அதைச் சாப்பிட்டார்கள். பார்வதியும் யாவற்றையும் பார்த்த வண்ணம் சாப்பிட்டுக்கொண்டிருந்தாள். பிள்ளைகள் இருவரும் விளையாட்டு உடைகள் அணிந்துகொண்டு, துவிச்சக்கரவண்டியில் ஏறிச்சென்றனர். சுந்தரமும் தான் நட்புறவுச் சங்க அலுவலாக செல்வதாக தாய்க்குச் சொல்லிக்கொண்டு வெளியில் புறப்பட்டான். சிறிது நேரத்தில் கயல் விழியும் பார்வதியிடம் தனக்கு மாதர் சங்கக் கூட்டம் இருப்பதாகக் கூறிவிட்டு வெளியே புறப்பட்டாள். பார்வதி மீளவும் தனிமையானாள். இப்படியாக பார்வதியின் தனிமை வாழ்வு தொடர்கிறது. பார்வதியும் தனது தனிமை வாழ்விலிருந்து விடுபட்டு வாழ்வதற்காக தொலைக்காட்சிப் பெட்டியை நண்பனாக்கினாள். அதை ஆவலாகப் பார்க்கத் தொடங்கியும், சமையலையும் செய்து, தனது பொழுதைப் போக்கத் தொடங்கினாள். இப்படியாக இடைக்கிடை வெளியில் மகனுடன் கடைகளுக்குச் சென்று தனது பொழுதைப் போக்கிக்கொண்டு ஒரு மாத காலங்களைத் தாண்டி வாழ்ந்துகொண்டிருந்தபோது, ஒருநாள் வீட்டின் வாசல் கதவடியில் யாரோ தமிழர்களின் குரல் கேட்பதுபோல் இருந்தது. பார்வதியும் எழுந்து ஓடிச்சென்றாள். அப்போது கதவிலுள்ள தபால் போடும் வாசலூடாக வெள்ளைத் தாளில் தமிழில் எழுதிய பிரசுரம் ஒன்றைப் போட்டார்கள், அந்த ஒற்றையைப் பார்வதி எடுத்து வாசித்தாள். அதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் டென்மார்க் கிளையினரால் விடுதலைப் படம் காண்பிக்க இருப்பதாக செய்தியிருந்தது. அந்த விளம்பரத் துண்டுப் பிரசுரம் பார்வதியின் மனதில் ஓர் புதுத் தெம்பை ஏற்படுத்தியது. பார்வதியும் வெளி வாசல் கதவைத் திறந்து 'தம்பிமாரே! தம்பிமாரே! இஞ்சை வாங்கோ'

(தொடர்ச்சி 20-ம் பக்கம்)






# தமிழ் சினிமா பற்றிய இரண்டு புத்தகங்கள்

**யமுனா ராஜேந்திரன்**

(சென்ற வாரத் தொடர்ச்சி)

சு. சண்முகசுந்தரம் 400 பக்க அளவிலான விரிவான தமிழ்ச் சினிமா ஆவணமொன்றைத் தொகுத்தளித்திருக்கிறார்.

பாரதிராஜா தனிப் புத்தகம் போடும் அளவுக்கு மட்டுமல்ல, தனித்தனிப் படங்கள் பற்றியும் புத்தகம் போடும்மளவு தகுதியானவர். எந்த மூன்றாம் உலகின் Native படங்களைத் தந்த



இயக்குனரோடும் வைத்து பேசத் தக்கவர்தான் பாரதிராஜா. அதில் சந்தேகமில்லை. அவ்வகையில் பாரதிராஜா பற்றி வந்திருக்கிற இப் புத்தகம் வரவேற்புக்குரியது.

இப் புத்தகத்தில் இரண்டே இரண்டு அத்தியாயங்கள்தான் ஆய்வுக் கண்ணோட்டத்துடனும், பாரதிராஜா படங்களின் தனிக் குணங்களைப் பற்றியும் பேசுவதாக அமைந்திருக்கிறது.

**1. பாரதிராஜாவின் படைப்புக்கள்**
**2. பாரதிராஜா: மண்ணும் மக்களும்**



மற்றபடியான அத்தியாயங்கள் தமிழ் மற்றும் இந்திய/ உலக சினிமாவின் பல்வேறு விவரங்களை பாரதிராஜாவின் படங்களுடன் வைத்துப் பேச வேண்டும் என்பதற்கு அப்பால் நூலின் கட்டமைப்புக்குள் வரவில்லை. இரண்டு அத்தியாயங்களிலும் மிகக் காத்திரமான அலசலான அத்தியாயமாக இருப்பது ஒன்றே ஒன்றுதான். அது பாரதிராஜா: மண்ணும் மக்களும் அத்தியாயம்.

கிராமப்புற மக்களின் வாழ்வை வெகுஜன சினிமாவில் பாரதிராஜா போல் சொன்னவர் வேறு எவருமேயில்லை என திச்சயமாக சொல்லலாம். இந்தியாவின் தீவிர சினிமா சார்ந்த பல்வேறு இயக்குனர்கள் கிராமிய வாழ்வு பற்றி சிற்சில படங்களைக் கொடுத்திருக்கிறார்கள். பதேர் பாஞ்சாலி, ஒரிடத்து, செலுவி, நிஷாந், தகரா என்ற படங்களை குறிப்பிட்டுச் சொல்லலாம். ஆனால் தனது தனித்துவமான படைப்பாளுமைக்குள் கணிசமான கிராமியப்படங்களை, கிராமிய வாழ்வின் பல்வேறு உறவுச சிக்கல்களை சொன்னவர் பாரதிராஜாதான்.

பாரதிராஜாவின் கிராமப் படங்களில் முக்கியத்துவம் பெறுவது கிராமிய வாழ்வின் உறவுச் சிக்கல்களும், உறவுகளின் மேன்மைகளும்தான். கிராமிய வாழ்வின் இந்த பண்பாட்டுத் தனித்துவம்தான், பிற கலாச்சாரங்களிலிருந்தும், பிற உலகின் மனிதர்களிடமிருந்தும் தம்மை வித்தியாசப்படுத்தும் தனித்துவமான அடையாளங்களாக அமைகிறது. தாய் -மகன் உறவு, தகப்பன் மகள் உறவு, அண்ணன், தங்கை உறவு, மாமன் உறவு, அத்தை உறவு போன்றவற்றில் இயங்கும் உணர்ச்சிகரமான நிகழ்வான அன்பையும், அழுத்தத்தையும் இழந்துவிட்டால் அநேகமாக நமது பண்பாடு என்பது ஏதுமற்றதாக ஆகிவிடும். இந்த உறவுகளின் இயல்பையும், நெகிழ்வையும், வன்முறையையும்தான் பாரதிராஜாவின் படங்கள் சித்தரிக்கின்றன.

பண்பாட்டு வகையிலான இவைகளுக்கு ஏற்படும் நெருக்கடிகள் அரசியல், நகர்க் கலாச்சாரம் போன்றவற்றாலும் நேர்கிறது. இத்தகைய நெருக்கடிகள் பாரதிராஜாவின் படங்களிலுமுண்டு.

நகர்ப்புறமும் அரசியல் அதிகாரமும் கிராமத்தின் ஜாதிய ஆதிக்க சக்திகளோடு சேரும் போது உருவாகும் வர்க்க/ பொருவியல் பாலியல் வன்முறைகளை பாரதிராஜா சித்தரிப்பதில்லை.

பாரதிராஜாவின் உயிர்ப்புள்ள கிராமங்கள் நிலவும் கிராமங்கள்தான். ஆனால் மாறி வரும் கிராமங்கள் இல்லை, பாரதிராஜாவின் கிராம மனிதர்களின் விழிப்புணர்வு 'வெளியாட்களால்தான்' உருவாகிறதேயல்லாமல் 'உள்ளிருந்து' உருவாவதில்லை.

கிராமத்துமொழி, பழமொழிகள், மருத்துவம், சடங்குகள், பண்டிகைகள், வசவுகள், மரபுகள், தெய்வங்கள், உணவுமுறை, தொழில், சாதியமைப்பு, கிராமங்களின் இயற்கை அழகு, வட்டார மணம், நாட்டுப்புறக் கலைஞர்கள் போன்ற அம்சங்கள் பாரதிராஜா படங்களின் உயிர்த்தன்மைக்குக் காரணமாகின்றன.

கிராமிய உறவுகளின் மேன்மையை அழகாக, உணர்ச்சிகரமாகச் சொல்லும் பாரதிராஜா, இவற்றினுள் நிலவும் கிராமியப் பதட்டங்களை இதுவரையில் சொல்லவில்லை. இவைகளையும் பாரதிராஜா சொல்லத் தொடங்கும்போது மூன்றாம் உலகின் Native படங்களில் அவரவர் பண்பாடுகள், போராட்டங்களைச் சொன்ன சாஞ்சினோஸ், செம்பேன் போன்றவர்களின் உலகத் தரமான கிராமியப் படங்களாக பாரதிராஜாவின் படங்கள் மலரும்.

பாரதிராஜா ஒரு கலைஞனாக கிராமியப் படங்களைக் கூட உணர்ச்சி பூர்வமான அறிவுத் தளத்தில் நின்று பார்க்க முடியுமானால், சமகால நகர மாந்தர்களின் வாழ்வு பற்றிக் கூட ஆய்வு நிறைந்த விமர்சன பூர்வமான படங்களைத் தர முடியும். ஒரு கலைஞன் தன்னை எப்போதும் தொடர்ந்து உடைத்துக்கொண்டே இருக்கவேண்டும். அத்தகைய விழிப்பை பாரதிராஜா கொண்டிருக்கிறார் என்பதற்கான சான்றுகளாக ஜெயகாந்தன் பற்றிய கட்டுரை உட்பட பல்வேறு கட்டுரைகளை குறிப்பிட முடியும்.

மிருணாள்சென், சத்யஜித் ராய் போன்றவர்களின் படங்களோடு, குரோஸாவாவின் சமுராய் படங்கள் பற்றியும் சண்முக சுந்தரம் குறிப்பிட்டிருக்கிறார்.

1. சத்யஜித்ராயின் கிராமிய மக்கள் துயருறும் மக்கள் — வறுமையில் மரணித்த மக்கள் — வறுமையினுள்ளும் அன்பும் அழகும், உயிரும் கொண்ட மக்கள்.
2. மிருணாள்சென்னின் கிராமிய மக்கள் எதிர்ப்புக் குணம் கொண்ட கிராமிய மக்கள் — மிருக்யா நாயகன் எதிர்ப்புக் குணம் உள்ளவன். 'ஒக ஊரி கதா' ஒடுக்கப்பட்ட விவசாயிகளின் எழுச்சி பற்றியது. சென்னின் கிராம மனிதர்கள் போராடும் மனிதர்கள்.
3. அகிரா குரோஸோவாவின் சமுராய்கள் வரலாற்று ரீதியில் பலவீனமான விவசாயிகளுக்காக தார்மீக அடிப்படையில் போராடிப்போனவர்கள். வியாபார நோக்குக் கொண்ட வன்முறையாளர்களை கண்டோடு அழிக்கப்போனவர்கள். தார்மீகப் பண்பும் போராடும் குணமுமே குரோஸோவாவின் சமுராய்களின் தனித்தன்மை.





பாரதிராஜாவின் தனித்தன்மை கிராமிய மனிதர்களுக்கிடையில் செயல்படும் உறவுகளின் உன்னதமும் நெகிழ்ச்சியும், உறவுச் சிக்கல்களும் பண்பாட்டு உயிர்ப்புடன் பேசப்படுவதுதான்.

பாரதிராஜாவின் சிந்தனை மற்றும் கதை சொல்லும் முறைமைக்குள் குரோஸோவாவின், ரேயின், சென்னின் கிராமிய மனிதர்கள் நுழையும்போது தமிழ்ச் சினிமாவில் புதிய கிராமிய மனிதர்கள் பிரவேசிப்பார்கள்.

சண்முகசுந்தரத்தின் புத்தகம் நிச்சயமாக அத்தகைய விழிப்புணர்வின் தடங்களை தன் பக்கங்களுக்குள் கொண்டிருக்கிறது.

**பாரதிராஜாவின் உயிர்ப்புள்ள கிராமங்கள் நிலவும் கிராமங்கள்தான். ஆனால் மாறி வரும் கிராமங்கள் இல்லை. பாரதிராஜாவின் கிராம மனிதர்களின் விழிப்புணர்வு 'வெளியாட்களால்தான்' உருவாகிறதேயல்லாமல் 'உள்ளிருந்து' உருவாவதில்லை.**

## புத்தக விபரங்கள்:

1. **The Eye of The Serpent**
280 Pages
Rs 195 ரூபா
East West Books (Madras) Pvt.Ltd
62-A Omes Road,
Klpark Madras 600 010.

2. பாரதிராஜா: **மண்ணும் மக்களும்**
பக்கம்: 366
விலை: ரூபா 125
வெளியீடு: காவ்யா
16, 17 E தெரு
இந்திரா நகர்,
பெங்களூர் —560 038.

இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் **செல்வன் சி.நிஜந்தனை** பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## இவ்வாரக் கைவண்ணம்




செல்வன் சிவநாதன் ஜெயந்தன்

வயது: 10 (15.5.87)
இடம்: Frauenfeld, Switzerland.

சுறா

சுறா மீன் வகையைச்சேர்ந்தது. சுறாக்கள் 350 மில்லியன் ஆண்டுகளாக உலகில் வாழ்ந்து வருகின்றன. சுறாக்கள் மெல்லிய குருத்தெலும்பால் ஆனவை. மங்கலான வெளிச்சத்தில்தான் பார்வை அதிகம். இவை குட்டி போடும் இனம். தாய் தன் குட்டிகளைத் தின்னாது. மற்ற சுறாக்களின் குட்டிகளைத் தின்னும். இதற்கு பற்கள் நான்கு வரிசைகள் உண்டு. புதிய பற்கள் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை முளைக்கும். சில வகை சுறாக்களுக்கு பற்களே கிடையாது. சுறாமீன்களில் கொழுப்பும் விட்டமின் A யும் நிறைய உண்டு. லெமன் சுறா 15-20 மீட்டர் வரை வளரும்.




## தேசிய மாவீரர் நாள்


எழுதி அனுப்பிவர்: செல்வி லக்சாயினி சந்திரன்

வயது: 10 – இடம்: 1350 Orbe, Swiss.

தேசிய மாவீரர் நாள்

நவம்பர் 21ம் திகதி மாவீரர் நாளின் தொடக்கநாளாகும். நவம்பர் 27ம் திகதி எமது சுதந்திர இயக்கத்தின் சரித்திரசிற்பிகளான விடுதலை வீரர்களை நாம் நினைவு கூரும் நன்னாள். எமது வீர சுதந்திர வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கிறது. [illegible] தேசிய இனமான எங்களுக்கு தன்னாட்சி உரிமை உண்டு. இந்த தன்னாட்சி உரிமையை நிலைநாட்ட, நாம் [illegible] போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது. என்பதனை மஞ்சள் நிறம் சுட்டி நிற்கிறது. [illegible] பெண் அடிமை நிலைமைகள் [illegible] புரட்சிகர மாற்றங்களை கொண்ட சமநீதி, சமதர்மம், சமத்துவ சமுதாயமாக விளங்கும், என்பதனை சிவப்பு நிறம் குறியீடு செய்கிறது. விடுதலைப் பாதை நீண்டதானது. [illegible] தாங்கொணாத் துயரங்களும் நிறைந்தது. இதனைத் தாங்கும் இதயம் அசையாத நம்பிக்கை தளராத உறுதி இலட்சிய அவசியத்தை [illegible] நிறம்.

எமது சரித்திரத்தை இயக்கும் உந்து சக்திதான் மாவீரரின் சாவு! எனவே இந் நன்னாளில் அந்நிய நாட்டில் புலம் பெயர்ந்து வாழும் நாமும் 'அஞ்சலி' மலர் அஞ்சலி! அஞ்சலி தீப அஞ்சலி! செலுத்துவோமாக...




## குட்டிக்கதை படிப்போம்

### சோம்பேறி ஆந்தை

ஆந்தை ஒன்று காட்டில் உட்கார்ந்து தனக்குள் பாட்டொன்றை முணு முணுத்துக் கொண்டிருந்தது. அப்போது டொக்... டொக் என்று எங்கிருந்தோ சத்தம் கேட்டது. அந்தச் சத்தம் ஆந்தைக்கு எரிச்சலை உண்டாக்கிற்று. சத்தம் வந்த திக்கை நோக்கி அது சென்று, ஒரு மரத்துக்கு அருகே நின்றது. அந்த மரங்கொத்திப் பறவை கொத்திக்கொண்டிருந்தது.

'என் அமைதியை நீ குலைக்கிறாய்?' என்று ஆந்தை சத்தம் போட்டது.

'நான் எனக்கு கூடு செய்து கொண்டிருக்கிறேன். உன்னோடு பேச எனக்கு நேரமில்லை' என்றது மரங்கொத்திப் பறவை, தன் பாட்டிற்குத் தனது கூரிய அலகால் அது மரத்தைக் கொத்திக் கொண்டிருந்தது.

ஆந்தை கோபத்துடன் அந்த இடத்தை விட்டுச் சென்றது.

வழியிலே சின்னஞ்சிறு குருவி ஒன்றைக் கண்டது ஆந்தை. அது புல் வெளியில் அங்குமிங்குமாய்ச் சென்று கொண்டிருந்தது.

ஆந்தை அதை வழி மறித்தது.

'ஏ குருவியே! என்ன செய்து கொண்டிருக்கிறாய்?' என்றது ஆந்தை.

'நான் எனக்கு கூடு கட்டுவதற்காக குச்சிகள் தேடிக்கொண்டிருக்கிறேன். வரட்டுமா?' என்று கூறிவிட்டு அந்தச் சின்னக் குருவி அங்கிருந்து சென்று விட்டது.

ஆந்தை ஒரு மரக்கிளையில் உட்கார்ந்து கொண்டது. அப்போது ஏதோ சத்தம் கேட்டது. ஆந்தை அந்த இடத்திற்குச் சென்று பார்த்தது. இரண்டு சிட்டுக்குருவிகள் தானியங்களைச் சேகரித்துக் கொண்டிருந்தன.

ஒரு சிட்டுக் குருவி மற்ற சிட்டுக் குருவியைப் பார்த்துச் சொன்னது:

'கூடு கட்டிவிட்டோம். தானியமும் சேகரித்து விட்டோம். இனி மழை காலத்திற்குப் பயமே இல்லை.'

'ஆமாம் ஆமாம்' என்றது மற்ற குருவி.

ஆந்தை மீண்டும் மரக்கிளையில் வந்து அமர்ந்தது. சோம்பலாக இருந்தது. மரக்கிளையில் உட்கார்ந்தபடியே தூங்க ஆரம்பித்தது.

கொஞ்ச நேரத்தில் 'ரீக் ரீக்' என்ற ஓசை கேட்டது. ஆந்தையின் தூக்கம் கலைந்தது. கீழே பார்த்தது. புல்வெளியில் வண்டு ஒன்றும் வண்ணத்துப்பூச்சி ஒன்றும் புல்லை நறுக்கி தனக்கு உணவுக்கு எடுத்துக் கொண்டிருந்தது. அது தன் வேலையிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தது.

'ஏய் தம்பிகளா, என்ன செய்கிறீர்கள்?' என்று அவர்களைப் பார்த்துக் கேட்டது ஆந்தை. வண்டு ஆந்தையைப் பார்த்தது.

'பெரியண்ணா,நான் எனக்கு உணவு தேடுகிறேன். இது தெரியவில்லையா?'

வண்ணத்துப்பூச்சி விர்ரென்று இன்னொரு பூவை நோக்கிப் பறந்தது.



'உன்னோடு பேச எனக்கு நேரமில்லை அண்ணா...' என்றவாறு சென்றுவிட்டது வண்ணத்துப்பூச்சி.

ஆந்தை மீண்டும் இன்னொரு மரக்கிளையில் உட்கார்ந்தது.

'சின்னஞ்சிறு வண்டிலிருந்து பெரிய மரங்கொத்திப் பறவை வரை கூடுகட்டி வாழ்கின்றன. என்னால் மட்டும் இது முடியாதா?' என்று அது தனக்குத்தானே சொல்லிக்கொண்டது. பிறகு 'சரி சரி இப்போது என்ன அவசரம். கொஞ்ச நேரம தூங்கிவிட்டு அப்புறம் கூடு கட்டுவதைப்பற்றி யோசிக்கலாம்' என்று சத்தமாகச் சொல்லிற்று. சொல்லிவிட்டு குறட்டை விட்டுத் தூங்க ஆரம்பித்தது.

ஒவ்வொரு முறையும் இப்படியே சொல்லிவிட்டு ஆந்தை தூங்கத் தொடங்கிவிடும்.

அதனால்தான் இன்று வரை ஆந்தை தனக்கென்று ஒரு கூடு இல்லாமல் மரக்கிளையில் இருக்கிறது.

*செ.யோகநாதன். (இளந்தென்றல்)*

## அறிந்துகொள்வோம்

| நூல்களும் | ஆசிரியர்களும் |
|---|---|
| சிலப்பதிகாரம் | இளங்கோ அடிகள் |
| ஆத்திசூடி | ஔவையார் |
| இராமாயணம் தமிழில் | கம்பர் |
| பெரியபுராணம் | சேக்கிழார் |
| மகாபரதம் தமிழில் | வில்லிபுத்தூரார் |
| திருவாசகம் | மாணிக்கவாசகர் |
| பாஞ்சாலிசபதம் | சுப்பிரமணியபாரதியார் |
| நற்சிந்தனை | யோகர்சுவாமிகள் |
| யாழ். நூல் | சுவாமிவிபுலானந்தர் |
| நளவெண்பா | புகழேந்தி |
| நீதி நூல்கள் | ஔவையார் |
| மணிமேகலை | சீத்தலைச்சாத்தனார் |
| தொல்காப்பியம் | தொல்காப்பியர் |
| சிந்தாமணி | திருத்தக்கதேவர் |

## கவிதை பாடுவோம்

### பூக்கள்



*வண்ண வண்ணப் பூக்கள் –மணத்தை*
*வாரியிறைக்கும் பூக்கள்*
*கண்ணைக் கவரும் பூக்கள்–எங்கும்*
*காட்சியளிக்கும் பூக்கள்*

*காலை மலரும் பூக்கள் –அந்திக்*
*கருக்கலில் பூக்கும் பூக்கள்*
*சோலையில் குலுங்கும் பூக்கள் –தேன்*
*துளிர்க்கும் பலவகைப் பூக்கள்*

*கொடிகளில் தவழும் பூக்கள்– மரக்*
*கொம்பில் சிரிக்கும் பூக்கள்*
*செடிகளில் விளங்கும் பூக்கள் –எழில்*
*திகழும் பூக்கள்! பூக்கள்!!*

*திட்டக்குடி முத்து முருகன்*
*தமிழகம்*




# விளையாட்டுத் துறையில் நொருங்கும் ஆணாதிக்கம்

விளையாட்டுத்துறை ஆண்களின் ஆதிக்க பூமியாகவே திகழ்ந்தது. உலகம் தழுவிய பிரபலமான விளையாட்டுகள் மற்றும் விளையாட்டுத்துறை நாயகர்களாக ஆண்களே திகழ்ந்தனர். இதன் காரணமாக விளையாட்டுத்துறை சார்ந்த வர்த்தகம், விளம்பரம் என்பன கூட ஆணாதிக்க துறைகளாகவே திகழ்ந்தன. அமெரிக்காவில் 1970-ம் ஆண்டு 27 பெண்களுக்கு ஒரு பெண் மாத்திரமே விளையாட்டுத்துறையில் ஆர்வம் காட்ட சந்தர்ப்பம் வழங்கப்



பட்டிருந்தது. பிற நாடுகளில் இவ் விகிதாசாரம் அதிகமானதாகும். 1972-ம் ஆண்டு அமெரிக்க சிவில் உரிமைகள் தலைப்பு IX திருத்தப்பட்டு ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் விளையாட்டுத்துறை வாய்ப்புக்களை வழங்குமாறு பாடசாலைகள் நிர்ப்பந்திக்கப்பட்டன. 25 வருடங்களின் பின் மூன்றுக்கு ஒரு பெண் விளையாட்டுத்துறையில் ஈடுபட்டுள்ளதுடன் தம்மை ஒரு சமுதாய முன்னோடியாக (Role Model) இனம் காட்டி வருகின்றனர்.

இதுவரை காலமும் அழகான பெண்களை வெறும் கவர்ச்சிக்காக மட்டும் விளம்பரங்களில் பயன்படுத்திவந்த உலக வர்த்தக நிறுவனங்கள், தற்போது பெண் வீராங்கனைகளை தமது விளம்பரங்களில் ஆணுக்கு நிகராகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். நீபொக், ரைதக் போன்ற விளையாட்டுத்துறை சார்ந்த நிறுவனங்கள் பெண் வீராங்கனைகளை தமது விளம்பர மாதிரிகளாகப் பயன் படுத்துகின்றன.

சில நிறுவனங்கள், 100 மில்லியன் டொலர்கள் செலவில் பெண்கள் விளையாட்டுக்களை நடாத்தி அவற்றில் தமது விளம்பரங்கள் பெண் வாடிக்கையாளர்களை சென்றடைய வைக்கின்றனர். அமெரிக்க முதலாளித்துவ அமைப்பில் பெண் தன்னை கவர்ச்சியானவள் என்னும் ஸ்தானத்திலிருந்து சமூக முன்னோடியாக இடம் மாற்றிக் கொள்வதுடன், அதன் பிரதிபலிப்பாக பெண்களை 'அடையாளப்படுத்தி' வர்த்தக விளம்பரத் துறைகள் வளர்ச்சியடைவதும் இயல்பானதாகும். ஏனென்றால் பெண்கள் பொருளாதார அமைப்பில் அரைப்பகுதியினர்.

அவர்கள் தமமை உணர்ந்து கொண்டால் பெண்களைத் தாழ்மைப்படுத்தும் சந்தையை நிராகரிக்கலாம். ஆனால் புலம் பெயர்ந்து வாழும் தமிழ்ப் பெண்கள் எங்கே நிற்கின்றனர்?!

# உதவ மனமுண்டால் அதைச் செய்ய வழியா இல்லை?

உதவி செய்வதற்கு பலபேர் முன் வருவர். ஆனால் அப்பணியைத் தொடர ஏதோ ஒரு பலைப் பலத்தைத்தான் ஆதாரமாகக் கொள்வார். ஆனால் சாலை மாணிக்கம் என்கிற இப்பெண் வேறுமாதிரி, சென்னையில் பிறந்து வளர்ந்தபோதும் அன்ன வாசல் என்ற முஸ்லிம் மக்கள் செறிந்த இடத்திலேயே வாழ்க்கைப்பட்டார். அங்கு மதக்கட்டுப்பாட்டால் வெளியே வரமுடியாத பல பெண்கள் தொழில் ஏதுமின்றி வறுமையில் வாடுவதைக் கண்டு இரங்கிவார். உடனே, தான் கைத்தொழிற் பயிற்சி அளிக்க முன்வர, யாரும் அதைத் தொடரவில்லை. காரணம் ஏற்கனவே சொன்ன மதகட்டுப்பாடு என்பதை அறிந்ததும் நேரே மத போதகர்களிடம் சென்று நிலைமையை விளக்கி, ஒவ்வொருத்தரின் வீட்டுக்கும் தானே சென்றே பயிற்சியை வழங்கினார். இதன் பலனால் இன்று 200 பேர் கொண்ட பெண்



கள் கூட்டத்தையே உருவாக்கி 'இன்யா சரன்ஸ்' என்ற கையுறைக் காகிதங்களில் பட்டு நூல் கொண்டு 'எம்ப்ராய்டரி' வேலைகள் செய்வதில் பேர்பெற்ற ஓர் அமைப்பையே உருவாக்கிவிட்டார். ஆரம்பத்தில் இவரின் பொருளை 'இளக்காரமாக எண்ணி' பலபேர் வாங்கி விற்க முன்வரவில்லை. பின் இப் பெண் ஒரு கடையில் முடிந்தளவு கெஞ்சி 2 நாட்கள் மட்டும் வைத்துவிட்டு, விற்காமல்போனால் திரும்ப பெறுவதாகக் கூறியதால் சம்மதம் தரப்பட்டது. என்ன அதிசயம்! மறுநாள் காலையில் மேலும் 300 'கார்ட்' தேவையென தகவல் வந்தது. இன்று இவர்களின் வாழ்த்து மடல்கள் அரபு நாட்டு அந்தப்புரம் வரை பிரபல்யம் ஆகிவிட்டன. தீராத உழைப்பிற்கு சிறந்த பலனைக் கண்டு கொண்டார் சாலை மாணிக்கம் என்ற இந்தச் சிறந்த பெண்.

# இந்தியாவின் முதல்பெண் புகையிரதச் சாரதி

பெண் என்றால் குறிப்பிட்ட ஒரு சில வேலைகளை விட வேறெதுவும் செய்யமுடியாதா? என்ற கேள்விக்கு, முடியும் என்கிறார் மும்தாஜ் என்ற 25 வயது இளம் பெண். இவர் வேறு யாருமில்லை இந்தியாவின் முதல்பெண் புகையிரதச் சாரதி. இவரது தந்தையாரும் புகையிரதத் துறையிலேயே



வேலை செய்து வந்ததால் மும்தாஜின் சிறு வயது ஆசையே இதுவாகி விட்டது. ஆரம்பத்தில் இத் தொழிலைச் செய்யப் போவதாகக் கூறியதும், இவரை எல்லோருமே அதிசயமாகப் பார்த்தனர். காரணம் ஒரு ஆண் பிள்ளையின் தொழிலை இப் பெண் செய்துகொள்ளுமா என்ற சந்தேகம். ஆனால் எல்லா ஊதாசீனங்களையும் பொருட்படுத்தாது மும்தாஜ் பிடிவாதமாக இத் தொழிலில் இணைந்து கொண்டார். முதல் நாளே இவரின் வண்டியில் 1 மனிதன் தற்கொலை பண்ணிக்கொள்ளவும் உள்ளம் நொந்துபோய் விட்டார். பின் மனதைத் தேற்றிக்கொண்டு தொடர்ந்தும் இப் பணியை மேற்கொள்ளவே, இன்று இவரின் கையில் புகை வண்டியின் நெளிவு சுழிவெல்லாம் ஒரு சாதாரண விடயமாகிவிட்டது. மணிக்கு 80 அல்லது 90 கிலோ மீற்றர் வேகத்தில் வண்டியை இயக்கி பறப்பது தனக்கு பிடிக்கும் என்கிற மும்தாஜ், இப்போது மின்சார ரயில் ஓட்டவும் பழகிக்கொள்கிறார். இதை விட இந்தியாவில் மும்பைக்கும் புனேக்கும் நடுவில் ஓடும் இரயில்தான படுவேகம். அதைத்தான் முதன்மைச் சாரதியாக நின்று ஓட்டிச் சென்றால்தான் தன் முழு இலட்சியமும் நிறைவேறும் என்கிறார் மும்தாஜ்.

# ஒரு பாடல்

புனிதத் துறவிகள் மண்ணைப் பார்க்கின்றனர்
மண் பொன்னாகிறது...
எனது காதலனோ வித்தியாசமானவன்
அவன் என்னைப் பொன்னே என்கிறான்
ஆனால் அவனது பார்வையோ என்னைச்
சாம்பலாக்குகிறது...

எனது கடவுள் நீதிமான்
ஆம்! அவர் நீதிமான்தான்
அவர் என்னை அழித்துவிட்டார்...
ஆம்! என்னை அழித்துவிட்டார்...

எனது காதலன் வேறு மலர்களின் வாசத்தை
ருசித்துக் கொண்டிருக்கிறான்
அருகில் பூத்துள்ள இந்த மஞ்சள் பூவைப்பற்றி
அவனுக்கு ஒன்றும் தெரியாது...

குளிர்ச்சியான காபூல் நகரத்தில்
கோடைக்காலம் முழுவதையும் நீ கழித்தாய்
இலையுதிர் காலத்தில் திரும்பி வருகிறாய்
உனது மலர் மட்டும் அப்படியே இருக்க வேண்டும் என
விரும்புகிறாயா?
அம்மா எனது முடியை வளரவிடு
அதை வெட்டாதே...
குச்சிக்கிளைகள் வெட்டப்பட்ட மரம்
பாடும் பறவைகளுக்கு உகந்த இடம் அல்ல!

இது ஆப்கானிஸ்தானிலுள்ள பஷ்டடோ (Pashto) மொழி பேசும் இளப் பெண்களிடையே வழங்கிவரும் ஒரு மரபான நாட்டுப்பாடல். இதன் ஆங்கில மொழியாக்கம் இடம் பெற்றுள்ள நூல்: The Penguin Book of Women Poets, London 1981

# குழந்தையின் வளர்ப்பிற்கும் கவனத்திற்கும் தேவையானவை

முதல் குழந்தையை பெற்றெடுத்த தாய் போதுமான அளவு நித்திரையை பெறமாட்டார். அதே நேரத்தில் அவளுடைய குழந்தைக்கு 'தேவைக்கு அதிகமான அளவு' நித்திரை தேவைப்படுகின்றது. சில வாரங்களுக்குப் பின் போதுமான அளவு உணவும், நித்திரையும் தேவைப்படுகின்றது. அந்த நேரத்தில் தாயானவள் மிகவும் களைப்பாக காணப்படுகிறாள். ஏனெனில் குழந்தையின் நித்திரை நேரத்தை தாயுடன் ஒப்பிட முடியாது. தாயானவள் விரும்பாத பட்சத்திலும், குழந்தையானது தனக்கு தேவையான நித்திரையை முடித்து விட்டுத்தான் கண் திறக்கும்.

### எவ்வளவு நேரம் நித்திரை வேண்டும்

அனைவரையும் போலவே குழந்தைக்கு போதுமான அளவு நித்திரை தேவைப்படுகின்றது. குழந்தைக்கு பசி உண்டானால் விழித்துக் கொள்ளும். போதுமான அளவு உணவினாலும், வசதியினாலும் குழந்தை நித்திரை செய்யும்.

அதிகமான குழந்தைகள் குறிப்பிட்ட ஒரு காலத்தில் மற்றவர்கள்,



பேசுவதை, நடமாடுவதைப் பார்த்து மகிழ்ச்சி அடையும் குழந்தை வளர வளர, நித்திரை குறைந்துகொண்டே போகும். குழந்தை 3 மாதம், 4 மாதம் ஆனவுடன் நித்திரையால் 2, 3 முறை விழித்துக்கொள்ளும், அப்பொழுது 2,3 முறை உள்ளாடைகளை (நப்கின்) மாற்ற வேண்டும். குழந்தைக்கு இரண்டரை, மூன்று வயதானவுடன் பகல் நேரத்தில் நித்திரை அவசியம்.

### குழந்தையுடன் பேசுவது

குழந்தையின் தலையை உங்களை பார்க்கும்படி வைத்து முதுகுப் பகுதியை கைகளில் தாங்க வேண்டும். குழந்தையினுடைய முகம் உங்களை கவரக்கூடியதாக இருத்தல் வேண்டும். அதனுடைய அமைதிக்காக கதையுங்கள், குழந்தை உங்களைப் பார்த்துத் தலையை ஆட்டி கண்களை விழித்துச் சிரிக்கும். உங்கள் முயற்சியால் உங்கள் குழந்தை 6 மாதத்தில் சத்தம் போடவும், கதைக்கவும் தொடங்கும். உங்கள் குரலின் சத்தத்தைக் கேட்டு குழந்தை உங்களைத் திரும்பிப் பார்க்கும்.

(தொடரும்)

# சாளரம்

'அப்பா, கதை சொல்லுங்கோ'

தினமும் இரவில் தூங்கச் செல்லும்போது, எனது மகனின் கடைசி வேண்டுதல் இது. வழமையைப் போல நானும் அவனருகில் படுத்திருந்து கதை சொல்லத் தொடங்குவேன். 'முன்னொரு காலத்திலே ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார்' என்று நான் தொடங்க,

'உந்தக் கதை வேண்டாமப்பா, வேற கதை சொல்லுங்கோ' என்பான் மகன்.

ளால் வாழ்வில் உள்ளதை உள்ளபடி பார்க்கவும், ஏற்றுக்கொள்ளவும் முடிகிறது. எனவே, இந்தக் குழந்தைகளாலும், சிறுவர்களாலும் அவர்கள் வாழும் சூழலைப் புரிந்துகொள்ளவும், அக் கலாசாரத்தின பண்புகளை உள்வாங்கிக்கொள்ளவும் முடிகிறது.

ஆனால், எங்கள் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் நாம் சொல்லிக்கொடுக்கின்ற இலக்கியம் எப்படி அமைகிறது? அவை யதார்த்தமான இலக்கியங்களா?

# சிறுவர் இலக்கியம்

## புலம் பெயர்ந்த சூழலில் இன்னொரு கேள்வி

பிறகு, நான் 'ஒரு பெரிய காட்டிலே ஒரு சிங்கம் இருந்தது. அதுக்கு..' என்று நான் சொல்லத் தொடங்க

'அப்பா, இந்தக் கதையும் வேண்டாம்' என்பான் மகன்.



எனக்கோ சங்கடமாகவிருக்கும். என்ன செய்ய? இதுவரை காலமும் நான் அறிந்த, வாசித்த, கேட்ட சிறுவர் இலக்கியங்களிலே ராஜாவும், சிங்கமும் இல்லாமல் ஒரு கதை இருக்கிறதா? நீதி புகட்டாத கதைகள் என்று ஏதாவது இருக்கிறதா? தொடர்ந்த சிந்தனையில் என் மனம் என்னைக் கேட்ட கேள்வி...

இந்தப் புலம் பெயர்ந்த வாழ்நிலையில் எங்கள் குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் யதார்த்தமான இலக்கியங்களை எப்படி வழங்க முடியும்? அதுவும், புலம்பெயர்ந்து வாழும் தம் குழந்தைகள், சிறுவர்களிற்கு அல்லது இங்கேயே பிறந்து, வளர்ந்து வரும் குழந்தைகளிற்கு எங்களைப் போலில்லாது இந்தக் கலாச்சார இடைவெளியென்பது ஒரு 'நீளம் பாயும் விளையாட்டாகவே' அமைகிறது. இவர்க

முதலில், அரிச்சுவடிகளை எடுத்துக்கொள்வோம், இலங்கையில் நாங்கள் பாவித்த அரிச் சுவடியை அப்படியே நாம் இங்கு எங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுப்பது எந்தளவுக்குச் சரி? 'உ' என்றால் உரல் என்றும் 'ஔ' என்றால் ஔடதம் என்றும் நாம் கற்றதையே மீள எமது குழந்தைகளுக்கு கற்றுக்கொடுப்பது சரியா?

ஆத்திசூடியும், திருக்குறளும் எங்கள் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் ஒரு யதார்த்தமான இலக்கியமாக எந்தளவுக்கு இருக்கிறது? — இல்லையேல் அரைத்தமாவை அரைத்துத்தான் என்ன பயன் என இவைகளை நம் குழந்தைகள், சிறுவர்களிடமிருந்து பிரித்துவிடுவது சரியா?

தமது குழந்தைகளும் சிறுவர்களும் எப்படி சிருஸ்டிக்கப்படவேண்டும் என்ற முன்கூட்டிய எண்ணத்தின் வெளிப்பாடாய் சிறுவர் இலக்கியம் அமைவது சரியா? அல்லது அவர்கள் எந்த யதார்த்



தத்தில் வாழ்கின்றனர் என்பதை அடிப்படையாக வைத்து அவர்கள் இலக்கியம் படைக்கப்படுவது சரியா?

இலக்கியம் என்பது மண்ணைச் சார்ந்த விடயம். எமது குழந்தைகளும், சிறுவர்களும் எதைப் பார்த்து எந்தக் கலாச்சாரத்தினை தம்மையறியாமல் உள்வாங்கிக்கொள்கின்றனரோ அதனுடன் ஒத்திசையக் கூடியவகையில் சிறுவர் இலக்கியம் இருக்கவேண்டும். ஆனால், புலம்பெயர் சூழலில் நமது சிறுவர்களுக்கும், குழந்தைகளுக்கும் நமது மொழியில் ஏதாவது இலக்கியம் தோற்றம் பெற்றுவிட்டதா? இல்லையெனில், அதுவரை மொழிபெயர்ப்பு இலக்கியங்கள்தான் வழியா?

சுவீடன் நாட்டில் சிறுவர் இலக்கியத்திற்கு பெயர் பெற்ற 90 வயது நிரம்பிய பெண் 'அஸ்டிரிட் லின்ட்கிரன' னின் 'பிப்பி' (Pippi) என்ற சிறு



பெண், சிறுவர் இலக்கியத்தில் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பவள். எந்தக் குழந்தையும் ஆகா- ஓகோவென விரும்பிப் பார்க்கக்கூடிய வகையில் இவ் இலக்கியம் சிறுவர்களுக்கான திரைப்படமாகவும், தற்போது கார்ட்டூன் படமாகவும் வந்திருப்பதை நாமறிவோம். ஐம்பதிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இவ் இலக்கியத்திற்கு அடிப்படையாக அமைந்தவர் அஸ்டிரிட் லின்ட்கிரனின் மகள். பல ஆண்டுகளுக்கு முன் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த மகளுக்கு கதை சொல்ல முற்பட்டபோது, அஸ்டிரிக் லின்ட்கிரன தன் மனதில் வாழ்ந்த சிறுமிக்கு உயிர்கொடுத்தார். விளைவு 'பிப்பி' என்ற இலக்கியம் படைக்கப்பட்டது.

ஆனால், பிப்பி என்ற இந்த இலக்கியத்தில் வரும் கறபனைத்தனங்கள், வீரசாகசங்கள், வஞ்சகமும் போரும், சூழவாழும் எங்கள் சிறுவர்களுக்கு என்னவுணர்வை ஏற்படுத்தும்? நேர்மையற்ற இவ் உலகில் வாழும் இச் சிறுவர்களுக்கு பிப்பியின் வீரசாகசங்கள் எத்தளவு பயனளிக்கும்?

சிறுவர் இலக்கியங்கள் நாம் வாழ்கின்ற ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் வெகுவாக வளர்ந்து வருகின்றன. இத்தகைய முயற்சியில் எம்மாலும் முடியும் என்பது எப்போது சாத்தியம்?

எங்கள் குழந்தைகளையும், சிறுவர்களையும் நற்குடிமக்களாக்க, அவர்களை சமூக மயமாக்கக் கூடிய யதார்த்தமான இலக்கியத்தினை நாங்கள் எப்போது படைக்கப்போகிறோம்?

தொகுப்பு: வர்மன்

தமிழீழத்தில் பிரசித்தி பெற்ற
REEGAL VIDEO MOVIES
றீகல் வீடியோ மூவிஸ்
தமிழ் வீடியோ துறையில் 'கொம்பியூட்டர் எடிட்டிங்' முதல் முறையாக அறிமுகப்படுத்துவோம்.
தொலைபேசி: 06 60 94 75 91 / 01 49 88 93 15
மேலதிக விபரங்களுக்கு:
THAVAM VIDEO CENTER
64, Rue louis Blanc, 75010 Paris. M°: La Chapelle
தொலைபேசி: 01 42 09 35 53
ஹாப்பி ரெக்ஸ்
தொலைபேசி: 01 40 05 08 09
பாரீஸ் மாநகரில் மக்களுக்கு அரிய சேவையாற்றுகிறது

# 'சமத்துவ' புரத்திற்கு சரியான வழி..

– பாமரன்

ஆகஸ்ட் ஆறில் சென்னையில் ஒரு பேரணியை தலித்துகள்...

அறிவித்தாலும் அறிவித்தார்கள்...

அரசும் – காவல்துறையும் – பத்திரிகைகளும்

பொதுமக்கள் 'நலனிற்காக' பொங்கி எழுந்து தங்களது

புடம் போட்ட பொறுப்புணர்ச்சியைப் பறைசாற்றத் தொடங்கி விட்டன.

அதுவும் பல நாட்களுக்கு முன்னமே...

'வன்முறை தலை தூக்கும்'

'காவல் துறை கடும் எச்சரிக்கை'

'நீதி மன்றம் நிபந்தனை'

மொத்தத்தில் வன்முறை வருகிறதோ இல்லையோ–

இத்தகைய அறிவிப்புகளால் அநேகருக்கும்

ஒரு சந்தேகம் வந்தது

இத்தகைய அறிவிப்புகள் பயத்தால் எழுந்தவையா?

அல்லது

பயமுறுத்தலுக்காக எழுப்பப்பட்டவையா?

ஒரு வாரத்துக்கு முன்னமே போலீஸ் கமிஷனரிடமிருந்து உதிர்ந்த முத்துக்கள்:

'வேறு மாநிலத்திலிருந்து காவலர்கள் இறக்குமதி–

தயார் நிலையில் போலீஸ்...

செக் போஸ்ட்டுகளில் கடும் சோதனை...

ரையட் கண்ட்ரோல் வேன் (வன்முறைத் தடுப்பு வாகனம்)

தயார் நிலையில்...

அழியாத மை கலந்த நீரைப் பீய்ச்சியடிக்க

தீயணைப்பு வாகனங்கள்....

கண்ணீர் புகைக் குண்டுகளைக் கக்க கவச வாகனங்கள்...'



நவீன முறை முறியடிப்பு நடவடிக்கைகள்...

ஒரு சின்ன சந்தேகம்...

நடக்கப்போவது பேரணியா... இல்லை படையெடுப்பா...

எந்த ஊர்வலமானாலும், பேரணியானாலும்

இவைகள் அனைத்துமே தயார் நிலையில்

இருக்க வேண்டியதுதானே நியாயம்?

பிறரது பேரணிகளுக்கும் இவர்கள் இப்படித்தான்

அறிக்கைகளும், எச்சரிக்கைகளும் விடுக்கிறார்களா?

இவைகள் பேரணிக்கு வருபவர்களைக் காட்டிலும்

பொது மக்களையே பீதிக்குள்ளாக்குகிறது

என்பதுதான் நிஜம்.

அப்படியானால்....

பேரணியாளர்களைக் காட்டி பொதுமக்களைப் பீதி கொள்ள வைப்பதும்...

'தலித்துகளது கோரிக்கைகள் இவர்கள் காதில் விழுந்துவிடக் கூடாது' என்று இவர்கள் எண்ணுவதும் நிஜம்தான் போலிருக்கிறது.

இத்தகைய எச்சரிக்கைகளும் – அறிக்கைகளும் பிள்ளையார் பெயரால் நடத்தப்பட இருக்கிற ஊர்வலங்களுக்கும் வெளியிடப்படுமா? தண்ணீர்ப்புகை, கண்ணீர்புகை, அறிக்கைப்புகை எழுப்பப்படுமா? எழுப்பப்படுமெனில்... அவைகள் இப்போது துள்ளிக்குதிக்கிற அநேக பத்திரிக்கைகளால் அதே அளவுக்கு முதல் பக்க செய்தியாக வெளியிடப்படுமா?

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல

இறுதியாக வந்த நிபந்தனைகள்தான் சிரிப்பையும்...

தலித்துகளுக்கு ஆதரவாக பிற்படுத்தப்பட்டோரையும், மனிதாபிமானம் உள்ளோரையும் களம் குதிக்கத் தூண்டியுள்ளன.

கொஞ்சக் காலங்களுக்கு முன்னர் போராடிய வன்னியர்கள் அனைவருமே வன்முறையாளர்களாய் மீடியாவாலும், அப்போதைய அரசுகளாலும் சித்தரிக்கப்பட்டதும்...

பிற பிற்படுத்தப்பட்டோரும், தலித்துகளும் வன்னியரினது நியாயமான கோரிக்கைகளை செவிமடுத்து விடாதபடிக்கு சிரசாசன முயற்சிகள் நடைபெற்றதையும்...

தற்போது தலித்துகளது கோரிக்கைகள் பிற பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கு எட்டிவிடாதபடிக்கு தலித்துகளை

வன்முறையாளர்களாய்ச் சித்தரிக்கும் போக்கினையும்...

ஈழப்பிரச்சினை, இந்திப் பிரச்சினை, இடஒதுக்கீட்டுப் பிரச்சினை, காவிரிப்பிரச்சினை போன்றவற்றிற்காக ஒருமித்த குரல் எழும்பும்போது ஒட்டுமொத்த தமிழினமே வன்முறை இனமாய் இனங்காட்டப்படுவதையும் இணைத்துப் பார்க்கும் பொழுது...

இவைகள் காலம் காலமாய் திட்டமிடப்பட்டு விதைக்கப்படும் விஷவித்துக்கள் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டிய தருணம் இது.

'தமிழர்களாய் ஒன்றுபடுங்கள்' என்று வெற்றுக் கூச்சல் இடுவதைக் காட்டிலும்... அதற்கான முன் நிபந்தனையாக தலித்துகள் – பிற்படுத்தப்பட்டோர் இணைப்பினையே முதலாவதாக வைக்கவேண்டும்.

தலித்துகள் 'பேரணியில் [illegible] கொண்டு செல்லக் கூடாது'

சரி

'பாட்டில்' கொண்டு செல்லக்கூடாது.

அதுவும் சரி.

'பல்பு' கொண்டு செல்லக்கூடாது.

மிகவும் சரி!

கல் எடுத்துக்கொண்டு செல்லக்கூடாது.

மிக மிகச்சரி!!

ஆனால்...

பை கொண்டு செல்லக்கூடாது...


நடந்துதான் செல்ல வேண்டும்...

சாப்பிடுவதற்காக ஓட்டல்களுக்குச் செல்லக் கூடாது..

யாருடைய வீடுகளுக்கும் செல்லக்கூடாது...

மனு கொடுத்தவுடன் சென்னையைவிட்டு கிளம்பிவிடவேண்டும்...

ஊர்வலத்தின் குறுக்கே 10 நிமிடங்களுக்கு ஒரு முறை



பாதசாரிகளை கடந்து செல்ல அனுமதிக்க வேண்டும்...

500 பேருக்கிடையே இடைவெளி இருக்க வேண்டும்....

இதற்கு மேல் சொல்ல வாயும்...எழுத கையும் வலிக்கும்.

ஒரு சின்ன கேள்வி....

இத்தகைய சட்ட திட்டங்கள் தலித்துகளுக்கு மட்டுமா...

இல்லை..

தி.மு.க, அதி.மு.க, மதி.மு.க, தா.மா.கா, பா.ஜ.க, அ.இ.கா, தே.பே, வி.இ.ப, கா.கா.தே.கா

முதல் ஃ வரைக்குமா....?

விளக்குவார்களா?

இத்தனை அறிவிப்புகள் வெளியிட்டவர்கள்...

தலித்துகள் செருப்புப் போட்டுக்கொண்டு வரக் கூடாது...

தோளில் துண்டு போட்டுக்கொண்டு வரக்கூடாது...

'டீ'குடிக்க கூடவே, ஒரு கொட்டாங்குச்சியையும்

'மலம்' கழிக்க ஒரு டப்பாவையும் கொண்டு வரச் சொல்லியிருந்தால்...

சட்டம், ஒழுங்கைக் காப்பாற்றியது மாதிரியும் இருந்திருக்கும்!

தமிழகமே ஒரு 'சமத்துவபுரமான' விசயத்தைத் தெளிவாகத் தெரிவித்தமாதிரியும் இருந்திருக்கும்!!

மொத்தத்தில் நாம் சுதந்திரமடைந்துவிட்டோம் என்பதற்கான பொன்விழா ஆண்டுதான் இது.

**நம்பு தம்பி நம்பு.**


**நினைவுகள் எப்போதும்**
**நினைவுகள் அல்ல**
**அவை வரலாற்றுப் பதிவுகள்**

உங்கள் அன்புக்குரியவர்களின்

* பிறந்தநாள் வாழ்த்து
* திருமண அழைப்பிதழ்
* நிகழ்ச்சி அரங்கேற்றங்கள்
* மரண அறிவித்தல்/ நினைவஞ்சலிகள்

என்பவற்றை வரலாற்றுப் பதிவாக்க நாங்கள் தயாராக உள்ளோம்.

ஈழமுரசு

வேலை செய்ய வதிவிட அனுமதி வேண்டும். வியாபாரம் செய்ய விளம்பரம் வேண்டும். உங்களுக்காக நாங்கள் விளம்பரம் செய்யக் காத்திருக்கின்றோம்.

உங்கள் விளம்பரங்கள் மற்றும் வரலாற்றுப் பதிவுகளை ஈழமுரசின் ஐரோப்பிய பதிப்புக்களில் மட்டுமன்றி கனடாவில் அதிஉயர் விற்பனையிலுள்ள 'உலகத் தமிழர்' இலும் ஒரே செலவில் பிரசுரிக்கும் வாய்ப்பு!

ஈழமுரசு சர்வதேசத் தமிழர்களின் உரிமை முரசு

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை
நிருவாக ஆசிரியர்:
அமரா க. சிவேந்திரன்
ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு
பாரிஸ்:
Tel.: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
போ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83

டென்மார்க்:
S.E. மகேந்திரன்
SPURVE VEJ-20,
7200 GRINSTED.
Tel + Fax: 75310546

சுவிஸ்: மக்கள் கடை
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
தவிபாலசிங்கம்
Tel: 076 5425804


# கிபீர் தாக்குதலில் மாங்குளத் தேவாலயம் சேதம்

மாங்குளம் பகுதியில் சிறீ லங்கா விமானப்படையினருக்கு சொந்தமான கிபீர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன. கடந்த 15-ம் திகதி நடைபெற்றுள்ள இக்குண்டு வீச்சுத் தாக்குதலில் அப்பகுதியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று கடுமையாக சேதமடைந்ததுடன் பல வீடுகள் அழிக்கப்பட்டுமுள்ளன.

கனகராயன் குளப்பகுதியில் விடுதலைப் புலிகளினால் சிறீ லங்காப் படையினரின் முன்னரங்க நிலைகள் தாக்கப்பட்டதன் பின்னரே விமானங்கள் தமது வெறித்தனத்தை பொது மக்களின் குடியிருப்புக்களின் மேல் காட்டியுள்ளன. இத்தாக்குதலில் குடிமக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புக்கள் பற்றிய செய்திகள் இதுவரை கிடைக்கவில்லை.

# ஜெயசிக்குறுய் படையினர் 300 பேருக்கு மஞ்சள் காய்ச்சல்

ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடும் சிறீ லங்காப் படையினரில் 300 சிப்பாய்கள், மஞ்சட் காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்ட நிலையில் அனுராதபுர இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

நெடுங்கேணி, ஓமந்தை படை நிலைகளில் பணி புரிந்த படையினரே மஞ்சட் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்களாவர். இவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியர்கள், இச் சிப்பாய்கள் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு கட்டாய லீவில் அனுப்பப்பட வேண்டும் என்று இராணுவ தலைமைப்பீடத்திற்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை ஜெயசிக்குறு III-ம் கட்டத்தில் ஈடுபட பீதியடைந்துள்ள படையினர் பலரும் தமக்கும் இந்த நோயின் அறிகுறிகள் காணப்படுவதாக இராணுவ வைத்தியரிடம் கூறி வருகின்றனராம்.

# மாவீரர் குடும்பங்களுக்கு ஓர் வேண்டுகோள்

சுவிற்சர்லாந்திலுள்ள மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அனைவரையும். தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பணியகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தொலைபேசி இலக்கம்: 012733407**

# புல்மோட்டையில் படையினர் மீது தாக்குதல்

திருமலை புல்மோட்டை வீதியில் 13-வது மைல் கல்லடியில் சிறீலங்கா ரோந்துப் படையணி ஒன்றினை விடுதலைப் புலிகள் வழிமறித்து தாக்குதல் நடாத்தியுள்ளனர். இத்தாக்குதலில் அவ்விடத்திலேயே மூன்று சிப்பாய்கள் பலியாகியதுடன், மேலும் பலர் படுகாயப்படுத்தப்பட்டனர்.

புலிகளின் தாக்குதலைத் சமாளிக்க முடியாத படையணி சிதறத் தொடங்கியதுடன் பின்னர், பின்வாங்கிச் சென்றுமுள்ளது. இத்தாக்குதலில் மூன்று சிப்பாய்கள் அவ்விடத்திலேயே பலியாகியுள்ளனர். அவர்களிடமிருந்த ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றிச் சென்றுள்ளனர்.

தமது தரப்பில் ஒரு போராளி வீரமரணமடைந்துள்ளதாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### நொண்டமானாறு...

போது இராணுவ தரப்பில் சில உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. முழுமையான விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை. இதேவேளை இரண்டு இளைஞர்களின் சடலங்களை மந்திகை வைத்தியசாலையில் சிறீலங்கா இராணுவத்தினர் கையளித்துள்ளனர். இவை மோதல்களின்போது கொல்லப்பட்ட போராளிகளின் சடலங்கள் என இராணுவத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பதுளையில் 3 மின் மாற்றிகள் குண்டு வைத்து தகர்ப்பு

கொழும்பு களனியிலுள்ள மின் நிலையத்தின் மீது குண்டுத்தாக்குதல் நடாத்தப்படுவதற்கு சுமார் ஒன்றரை மணித்தியாலத்திற்கு முன்னர், பதுளை பகுதியில் சிறீலங்கா மின்சார சபைக்குச் சொந்தமான 3 மின் மாற்றிகள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளன.

ஒவ்வொன்றும் அறுபத்தியாறாயிரம் மெகாவாட் வலு கொண்ட இந்த மின் மாற்றிகள், பதுளை சிறைச்சாலைக்கு அருகில் இருக்கும் கொட்டுவ உப மின்நிலையத்தில் அமைந்திருந்தன.

அதிகாலை மூன்று மணியளவில் இந்த நிலையத்திலுள் பாரிய குண்டுகள் வெடித்ததனால் மூன்று மின் மாற்றிகளும் தகர்க்கப்பட்டுள்ளன. தகர்க்கப்பட்டுள்ள மின் மாற்றிகளின் மொத்தப் பெறுமதி 10 மில்லியன்களுக்கும் அதிகமானதென சிறீலங்கா மின்சாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இச் சம்பவத்தை அடுத்து பதுளை பகுதியில் பாதுகாப்பு படையினர் பெரும் பரபரப்புடன் காணப்பட்டுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### புளியங்குளம்...

சிறீலங்கா இராணுவத்தின் நகர்வு முயற்சிகள் எமது படையணிகளின் எதிர்த் தாக்குதல்களால் முறியடிக்கப்பட்டு இராணுவத்தினர் அதிக உயிரிழப்புக்களுடன் பின்வாங்கவைக்கப்பட்டனர் எனவும் புலிகளின் குரல் வானொலி மேலும் அறிவித்துள்ளது.

சிறீலங்கா அரச தரப்பை ஆதாரம் காட்டி ஞாயிறு அன்று வெளியிடப்பட்ட செய்திகளில் புளியங்குளம் 'மையப் பகுதி' இராணுவத்தால் கைப்பற்றப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது மேலும் திங்களன்று, சிறீலங்கா தேசிய தொலைக்காட்சி சிறீலங்கா இராணுவம் புளியங்குளத்திற்குள் நுழைந்துள்ளதாக செய்தி வெளியிட்டிருந்தது. சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் உத்தியோக செய்திக்குறிப்பு, புளியங்குளம் தொடர்பான செய்திகளை 'முற்றாக' மறைத்துவிட்டது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### நுணாவில்...

படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

மற்றைய தாக்குதல்கள் இரண்டு கடந்த 14-ம் திகதி வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. 1-வது தாக்குதல் காலை 5.30 மணியளவில் சாவகச்சேரி சங்கத்தானை பகுதியில் நடாத்தப்பட்டது. வீதிச் சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிப்பாய்களின் மீதே புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இதில் 4 படையினர் கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

அடுத்த தாக்குதல், வதிரிப் பகுதியில் காலை 9.30 மணியளவில் நடாத்தப்பட்டது. இத்தாக்குதலின் போது இரண்டு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் தேடுதல் மேற்கொண்ட படையினர், 5 அப்பாவிப் பொது மக்களைக் கைதுசெய்து தம்முடன் கொண்டு சென்றுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### கனகராயன்குளம்...

மையாக தாக்கப்பட்டுவரும் அதேவேளை 53-வது பிரிகேட் கரிப்பட்டுமுறிப்பில் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை சிறீலங்கா விமானப்படையினர் மாங்குளம், கனகராயன்குளம், பனிச்சங்குளம் ஆகிய பகுதிகள் மீது கடுமையான குண்டுவீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் அப்பகுதிகளைச் சூழவுள்ள ஏராளமான குடிமனைகள் தரைமட்டமாகியுள்ளதுடன் வழிபாட்டிடங்களும் சேதமடைந்துள்ளன.

இப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள விடுதலைப் புலிகளின் சிறப்புப் படையணிகள் கரந்தடித் தாக்குதல்களை இராணுவ நிலைகள் மீது தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### மாவிட்டபுரம்...

துள்ள சிறீலங்கா படைகள் 200 பக்தர்களை மதிய பூசைக்கு செல்லாமென அறிவித்திருந்தனர். இதனால் தெல்லிப்பளை இராணுவ தலைமையகம், கோவிலுக்கு செல்லும் பக்தர்களை 'கணக்கெடுக்கும்' பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### வடமராட்சி...

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 18 கிராமசேவகர் பிரிவுகளில் 15 தொடக்கம் 35 வயது வரையான எந்த இளைஞர்களும் அப் பகுதிகளை விட்டு வெளியேறவோ, அன்றி உள்ளே வரவோ முடியாது. மேலும், இப் பகுதிகளிற்கான உணவு விநியோகங்களும் மிகக் கட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
### 8 விடுதலைப்...

டினட் செல்வறி (குறுப்பையா வசந்தி), வீரவேங்கைகள் புவீந்திரன், ஸ்ரீபவான், மேகதூதன் ஆகியோரே மேற்படி போராளிகள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தேவேளை கரிப்பட்டு முறிப்பில் வீரவேங்கைகள் ஆனந்தராஜன், ஆனந்தன், துங்கரன் ஆகியோர் வீரச்சாவை அடைந்துள்ளனர்.


*லாச் சப்பலில்* குறைந்த செலவில் நிறைந்த பிரயாணச் சேவை

**ERRANCES TRAVELS**

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39 - Li: 075 95 01 37
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900[Frs.] |
| Delhi | - | 3,900[Frs.] |
| Bangkok | - | 3,400[Frs.] |
| Colombo | - | 3,950[Frs.] |
| Singapour | - | 3,900[Frs.] |
| Madras | - | 4,300[Frs.] |

| | | |
|---|---|---|
| Londres | - | 790[Frs.] |
| New york | - | 2,600[Frs.] |
| Montreal | - | 2,800[Frs.] |
| Oslo | - | 2,010[Frs.] |
| Toronto | - | 2,800[Frs.] |
| Nepal | - | 4,820[Frs.] |

*மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது*

# இத்தால் அறிவிப்பது...
# சித்துவும்; தோசமும்
# தகர்ந்த தங்கக் கனவு

'இத்தால் வர்த்தகர்களுக்கு அறிவிப்பது என்னவென்றால், எனது சகோதரனான உபாலி திசாநாயகாவின் நிறுவனத்தில் தரமான, இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. கொழும்பில் உள்ள அவரது நிறுவனத்திடமிருந்து நீங்கள் மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்தால் அது என்னால் மிகவும் விரும்பக் கூடியதாக இருக்கும்.'

[அடப்பாவி... மனுசா... உமக்கு இப்படி ஒரு 'உறவு' இருப்பது எமக்குத் தெரியாது போய்விட்டதே?... தெரியாத்தனமாக, உமது கிறுக்கல்களை வேறு வாசித்துத் தொலைத்துவிட்டோமே...மை..ய்யா]

கொஞ்சம் பொறுங்கள்... கொஞ்சம் பொறுங்கள்... அஃதாகப்பட்டது, இப்படியான விசயங்களைக் கொண்ட திருமுகமொன்றினை பலாலி படைத்தளத்தினுள் பதுங்கியிருக்கும் படையணித்தலைவர் [பிரிகேடியர்] எஸ். திசாநாயக்க யாழ். குடாவிலுள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்துள்ள புதினத்தை சொல்லவருகின்றோமப்பா!

கொழும்பிலுள்ள படைப் பெரிசுகள் ஆயுதக் கொள்வனவுகள் மூலம் பெ...ரி..ய்ய பணக்காரர்களாக வரும்போது, தன் உடன் பிறந்தானுடைய நிறுவனத்திலிருக்கும் மட்டமான சரக்குகளை தமிழர்கள் தலையில், 'தான் கட்டியாடிக்கக்கூடாதா?' என எண்ணினாரோ என்னவோ அண்ணார் இவ்வாறான திருமுகங்களை யாழ் வர்த்தகர்களுக்கு அனுப்பியுள்ளார்.

தலையாரியின், மேற்படி திருமுகங்கள் கிடைக்கப்பெற்ற வர்த்தகர்களின் முகங்கள் தற்போது கலக்கத்தில் இருக்கின்றனவாம். படையவருடைய வேண்டுதலையும் மீறி வேறிடங்களில் மோட்டார் உந்துவண்டிகளை கொள்வனவு செய்தால் நன்றாக 'கவனிக்கப்பட்டு' விடுவோமோ என்ற அச்சம்கூட அவர்களை வாட்டுகின்றதாம். யாரிடம் இதனை முறையிட முடியும் என்று மனதிற்குள் புழுங்கிக்கொள்வதை தவிர அவர்களால் வேறு என்னதான் செய்ய முடியும்?

இது மட்டுமல்ல.. யாழ். குடா நாட்டில் காணப்படும் கடற் செல்வங்களிலும் இந்த ப[ா]டைத் தலையாரிகளின் பாழாய்ப் போன கண்கள் தற்பொழுது விழுந்துவிட்டன. தமக்கு இசைவான 'தெமில்' முதலாளிகளின் உதவியுடன் கடலட்டைகளைப் பிடித்து அவற்றை கொழும்பிற்கு 'ஏற்றுமதி' செய்து வருகின்றனர். தமக்கு கடலட்டை.. பிடித்து தருபவர்களுக்கு மட்டுமே மீன்பிடிக்க முன்னுரிமை தரப்படும் என்ற உத்தரவும் ப[ா]டையினரால் போடப்பட்டுள்ளதால் வேறுவழியில்லாத ஏழைத் தொழிலாளர்களும் விதியை நொந்தபடி இதற்குத் துணைபோகின்றனராம்.

வடக்கே இந்தக் க[ா]தையானால், தென்தமிழீழ மீனவர்களின் கதையோ வித்தியாசமானது, கடலரக்கர்களின் கண்களிலிருந்து தப்பி செத்துப் பிழைத்து கொஞ்ச நஞ்ச மீன்களைப் பிடித்து வந்தால், கரையில் காத்திருக்கும் ப[ா]டையினர் அவற்றினை அள்ளிக் கொண்டு போய்விடுகின்றனராம்.

எந்தர்கள் கையில் எம் தாயகம் படும் பாடுதான் என்னே..! என்னே....!!

❀ ❀ ❀

கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா...?
கலையெல்லாம் கண்கள் சொல்லும் கலையாகுமா...?
**சொல்லெல்லாம் தூய தமிழ் சொல்லாகுமா?**

மூன்றாவது வரியைக் கொஞ்சம் உரத்துக் கத்தியவாறே (ஒருவேளை பாடினாரோ?) எண்ணைப் பன்ந்து கண்களை சிமிட்டிக்கொண்டே வந்தார் 'கை' யார். அவர் மாணிக்கக் கல்லைப் பற்றிபாடியவுடனே எனக்கும் மாணிக்கமானவருடைய புதினத்தை கொஞ்சம் உங்களுக்கு சொல்லவேண்டுமென ஆசை உதித்தது.

வவுனியா நகரில் குடிகொண்டு குடிமக்களின் நிம்மதியைக் கெடுக்கும் தண்டல் கும்பல்களில் ஒன்றினை 'சித்து' ஆர்த்தமானவரும், மாணிக்க [தே]தாசமானவரும் இயக்கி வருகின்றனர். அக் கும்பலுக்கு சித்து தலைவராம்! தேசம் இராணுவப்பொறுப்பாளராம்[!?]

தற்பொழுது சித்துக்கும், தோசத்திற்கும் இடையில் 'நுள்ளுப்பிறாண்டு.... கிள்ளுப் பிறாண்டு' விளையாட்டுக்கள் அதி உச்ச கட்டத்தில் நடைபெறுவதான புதினம் மோனையாருக்குக் கிடைத்துள்ளது. தோசமானவருடைய கைகளில் ஆயுதக் குண்டர்கள் படை இருப்பதால் சித்து ஆனவர் கொஞ்சம் சித்தமடங்கி வாசிக்கிறாராம்.

சீமை நாட்டில் கல்வி கற்றபோதிலும் நல்லுடைய 'வித்துவம்' தோசத்திடம் எடுபடவில்லையே என்பதிலும் சித்துக்கு பெரும்




பவும் கவலையாம் [சொச்...சொச்...சோ]. அது... சரி... இந்த 'நு.பி...கி.பி' விளையாட்டிற்கு காரணமென்ன தெரியுமோ?

சித்துவானவர் 'சி' னா அரசியல்வாதிகளுடன் உறவுப் பாலம்[!?] அமைக்க தற்போது மிகத் தீவிரமாக முயற்சித்து வருகிறார். சந்திரிகாவின் பரியலங்களாகட்டும் அல்லது, ரணிலின் பரிவலங்களாகட்டும்ஒரு விழா வைத்தால் அண்ணார் அங்கு பிரசன்னமாகி அவர்களின் உறவுக்குக்'கை' கொடுப்பார். இந்தக் கை கொடுக்கும் விளையாட்டு அவரது தந்தையிடமிருந்து சித்துவிற்கு கிடைத்த 'பரம்பரைப் பரிசாகும்'.

சித்துவினுடைய 'தரும இலிங்க' தந்தை 'கொழும்பு பார் + ஆரு, மன்றத்தில் கதிரையை நிரப்பிய காலங்களில் [1960 - 1983] சிங்கள அரசியல்வாதிகளின் குடும்பங்களில் ஏதாவது பிணக்குத் தோன்றினால்கூட அண்ணார். தரும[ர்]திருப்பணி செய்து அவற்றைப் பரைமைத்துவிடுவாரென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். தற்போது அந்தத் திருப்பணி மகனிடமும் தலைதூக்கியுள்ளது.

.....இவ்வாறாக சித்து, 'சி'னா கரூடான் குலாவி புகழெடுப்பது தோசத்திற்கு மிகவும் எரிச்சலாம். தனது இரத்தத்தில் 'சி' னா கலப்பு ஓடினாலும் சித்து தன்னைவிட 'சி'னாக்கருடன் குலாவுவது இன்னும் எரிச்சலோ எரிச்சல். தோசத்தின் அன்னை ஒரு 'சி' னா பெண்மணி. கொல்லப்பட்ட ஜே.வி.பி. உபதிஸ்ஸ கமநாயக்காவிற்கு தோசம் நெருங்கிய உறவுக்காரரும் கூட. இவ்வாறான இரத்த உறவு கொண்ட 'தேசத்தினால்', கொல்லப்பட்ட அப்பாவித்தமிழர்களின் தொகை கணக்கில் அடங்காதது. அதுமட்டுமல்ல தோசத்தின் கண்காணிப்பில் வவுனியாவில் பல சித்திரவதைக் கூடங்கள் கூட உண்டு. அதற்குள் அனுப்பப்பட்ட அப்பாவிகள் இதுவரை திரும்பிவந்தது கிடையாது. ஆனால் செய்தித்தாள்களில் 'சூட்டுக்காயங்களுடன் சடலம் கண்டெடுப்பு' என்ற செய்தி மட்டும் வரும்.

இவ்வாறான 'கைங்கரியங்களின்' பின்னணி வரலாற்றைக் கொண்ட தோசம், சித்துவைத் தள்ளிவிட்டு கும்பலின் சர்வ அதிகாரங்களையும் தான் எடுத்துவிட வேண்டும் என்ற முனைப்புடன் தற்போது செயல் ஆற்றுகிறார். கூடவே யாழ்ப்பாண நகர முதல்வராகிவிட வேண்டும் என்ற உபரி ஆசையும் அவருக்கு முளைத்துவிட்டது... பிரச்சினை கொஞ்சம் பெரிதாகி வெடித்தால் கும்பலுக்குள் கொஞ்சம் தலைகள் உருளும் என்றும் வவுனியாவில் மக்கள் கிசுகிசுத்தும் கொள்கிறார்களாம்.

❀ ❀ ❀

**'எம் சிங்கள துவீபத்தை ஒளிரச் செய்த தங்கப் பெண்ணே! ஒலிம்பிக்கில் தங்கம் எடுக்கப்போகும் தாரகையே!!'**

கொஞ்ச நாட்களுக்கு முன்னர் கிரேக்கத் தலைநகரில் நடந்த விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற சிறீலங்காவின் ஓட்டப்பந்தய வீராங்கனை சுசந்திகாவினைப் பார்த்து இவ்வாறாக புளுகித்தள்ளிய சிறீலங்காவின் விளையாட்டுத்துறை அமைச்சு அதிகாரிகள், இன்று அதே சுசாந்திகாவைப் பார்த்து பேராசைக்காரி... பொம் பேசும் பெண் என்றெல்லாம் தூற்றித்திரிகின்றார்கள். அதன் சூட்சுமம் என்னவென்று நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்.

சுசாந்திகா வெள்ளிப் பதக்கத்துடன் விமானத்தைவிட்டு இறங்கியவுடன், பல்வேறு அன்பளிப்பு அறிவிப்புக்களுடன் விமான நிலையத்தில் அவரை வரவேற்ற அதிகாரிகள் பின்னர் தமது 'திருவிளையாடல்களை' அவரிடம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

சுசாந்திகா ஏற்கனவே திருமணமானவர் என்ற போதிலும் இந்த 'விளையாட்டுப் பையன்கள்' அவருக்கு 'கா'.... வலை வீசியுள்ளனர். அது சரிவராமற் போகவே; குடும்பத்தில் கணவன் இருந்தால் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்ல முடியாது. எனவே கணவரை விவாகரத்து செய்துவிடும்படியான ஒரு அம்பினைக் கூட சுசாந்திகாவை நோக்கி வீசியுள்ளனர். அதுவும் சரிவராமற் போகவே கணவருக்கு கொலை மிரட்டல்கள் பறந்துள்ளன.

தனது துணைவரைக் காப்பாற்றுவதற்காக கடந்த மூன்று மாதகாலமாக தனது விளையாட்டுப் பயிற்சிகளை, ஒலிம்பிக் தங்கக் கனவினை மறந்து வீட்டுக்குள்ளே அடைத்து கிடக்கிறார் சுசாந்திகா. தனது மனக்குறைகளை எல்லாம் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் கொட்டியுள்ள சுசாந்திகா, அரசாங்கம் வாக்குறுதி செய்தபடி நிதி உதவிகள் எதுவுமே கிடைக்கவில்லை எனவும், தனது கணவரது உயிரை 'விளையாட்டுப் பையன்களிடமிருந்து' காப்பாற்ற வேண்டியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இதற்காகத் தானா எனது நாட்டிற்கு வெள்ளிப் பதக்கம் வென்றேன் என்றுகூட புலம்பியுள்ளார்.

தற்போது, சுசாந்திகாவிற்கு அவரது வைத்தியரால் மனோ சிகிச்சை [!] வழங்கப்படுகிறதாம். இதற்கிடையில், தனக்குக் கீழேயுள்ள விளையாட்டுப் பையன்கள் இப்படியெல்லாம் நடந்து கொண்டார்களா என்பது பற்றி பெரிய விளையாட்டுப் பையனை ஆ..மைச்சர் திசாநாயக்க, விசாரணை ஒன்றினை நடாத்தப்போகிறாராம். அட...டே... அதற்கிடையில் முடியைப் பிய்த்துக் கொண்டு சுசாந்திகா வீதியில் ஓடாதிருந்தால் சரிதான்!

அது..சரி..என்ன இந்த முறை உமது பக்கத்தில் முழு 'சி' னா சங்கதி வாடை கொஞ்சம் கூட அடிக்கிறதே? வேண்டாம் இந்த விளையாட்டு... இப்படியே தொடர்ந்தால் வாசகக் கண்மணிகளான நாம் உம்மை வீதியில் ஓட வைப்போம் புரிந்து கொள்ளும். ஹி...ஹி...! [ஹி...ஹி... சொல்ல எங்களாலும் முடியுமாக்கும்]

❀ ❀ ❀

[14-ம் பக்கத் தொடர்ச்சி]

## தர்ம அடி

என்று அன்பாக அழைத்தாள். மாடிப்படிகளில் இறங்கிக் கொண்டிருந்த முரளிக்கும், சேரனுக்கும் அந்த அழைப்பு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. வழமையாக தங்களைக் கண்டால் சுந்தரம் அண்ணரே வீட்டுக் கதவைப் பூட்டுவார். தற்சமயம் நாம் அவர்களை நேரில் சந்திச்சால் தாங்கள் தமிழீழ மக்களின் துயர்துடைக்க வேறுவழிகளில் பணம் அனுப்புவதாகக்கூறித் தப்பிக்கொள்வார்களேயென்று நினைத்துக்கொண்டு மேல் நோக்கி விரைந்தபோது, .வாசலில் நின்ற பார்வதி அவர்களுக்கு தான் சுந்திரத்தின் தாயென்றும் மூன்று மாத விசாவில் டென்மார்க் வந்திருப்பதாகவும் கூறி, இருவரையும் உள்ளே வந்து கோப்பி குடித்துவிட்டுப் போகும்படி அழைத்தாள். அந்த அன்பான தாயின் அழைப்பைத் தட்டிக்கழிக்கவும் முடியவில்லை, அதே வேளை உள்ளே போகும்போது சுந்தரம் அண்ணன் ஏதும் மனதிற்கு துயரம் தரக்கூடிய வார்த்தைகளைக் கொட்டிவிடலாமென்ற எண்ணமும் அவர்கள் மனதில் எழுந்ததால், பார்வதியிடம் தாங்கள் தாம் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களென்பதையும், தாம் சுந்தரம் அண்ணையிடம் தமிழீழ விடுதலைக்காக ஆதரவுதந்து, பங்கெடுப்புக்களைச் செய்யுங்கோவென்று பலமுறை நாடிவந்தும், அவர்கள் தங்களுக்கு ஆதரவுதரவில்லை, அத்தோடை எங்களைக் கண்டாலும் அவருக்குப் பிடிக்காது. அதாலை நாங்கள் உள்ளே வர மனதிற்கு இடைஞ்சலாக இருக்கென்று பார்வதியிடம் அவர்கள் கூறினார்கள். பார்வதியும் அவர்கள் சொன்னதைக்கேட்டுச் சிரித்துவிட்டு, 'நாட்டிலை உங்களைப் போலை புலிக்கு வேலைசெய்யிற பெடியளைக்கண்டால் சனங்களெல்லாம் எவ்வளவு மரியாதை கொடுப்பாங்க, அது மாத்திரமே அங்கேயுள்ள பெரியவர்கள் தங்க சொந்தப்பிள்ளையைப் போல் புலிக்கு வேலை செய்யிற பெடியளிட்டை தங்கடை மனத்துயரங்களைச் சொல்லி ஆறுவினம். இஞ்சை உங்களைக் கண்டால் கதவைப் பூட்டினவையோ நல்ல வேடிக்கையாயிருக்கு' என்று கூறி, ஒருத்தரும் வீட்டிலையில்லை வாங்கோ உள்ளேயென்று அழைத்தாள். மீளவும் அழைத்த பார்வதியின் மனத்தைத் துன்புறுத்தக்கூடாதென்ற எண்ணத்துடன் அவர்கள் உள்ளே சென்றனர்.

பார்வதியும் சுடுதண்ணிப் போத்தலிலுள்ள கோப்பியை 'கப்பன் சோசரில்' விட்டு, அவர்களுக்கு குடிக்கக் கொடுத்துவிட்டு, தாயகத்தில் புலிகளின் எழுச்சியையும் எடுத்துக்கூறி, சற்றில் தான் டென்மார்க்கில் தமிழைப் பேசமுடியாமல் வாழ்வதையும் தனது மகன் தாயகத்தின் எண்ணமே இல்லாமல் வாழ்வதால் தங்கள் சந்ததியின் வாழ்வே அழியப்போகிற அபாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதை சொல்லிக் கலங்கினாள். பார்வதியின் துயரத்தைத் தீர்க்கக்கூடிய வழியில் அவர்களால் மனவாறுதல் கூறமுடியவில்லை. அவர்களால் பார்வதிக்கு ஒரே ஒரு வழியில்தான் உதவி செய்யமுடிந்தது. தாயகத்தின் செய்திகள் நிறைந்த செய்தித் தாள்களையும், ஒலி,ஒளி நாடாக்களையும் கொடுத்து, 'இதைப் பார்த்து எங்கட தேசத்தில் வாழ்கிற உணர்வோடை வாழுங்கம்மா, சுந்தரம் அண்ணைக்கும் என்டைக்காவது ஒருநாள் தாய் நாட்டின் மீது பற்று வரும். கவலைப்படாதீங்கள்' என்று ஆறுதல் வார்த்தை சொல்லி, உங்களுக்கேதாவது உதவி தேவைப்பட்டா அலுவலகத்திற்கு தொலைபேசி அடிக்கச் சொல்லி தொலைபேசி இலக்கத்தையும் கொடுத்துவிட்டுச் சென்றார்கள்.

(மிகுதி அடுத்த வாரம்)

# காயத்திரி தொலைத்தொடர்பு நிலையம்
# Gayathree Mobile Communication LTD

குறைந்த செலவில் சர்வதேச தொலைபேசி தொடர்புகளுக்கும் மலிவான அழைப்பு அட்டைகளுக்கும் உங்கள் நினைவில் இருக்கவேண்டியது காயத்திரி தொலை தொடர்பு நிலையம்

NEW



**MOTOROLA MEMPHIS**
**£9.99**
தற்போது இலவசம்



**NOKIA 1620**
**£19.99**
தற்போது இலவசம்



**ERICSSON GF768**
**£149.99**
பல கவர்ச்சிகரமான சலுகைகளுடன்



**ERICSSON PH388**
**£49.99**
தற்போது **£44.99**



**NOKIA 8146**
**£99.99**
தற்போது **£79.99**



**STAR TAC MOTOROLA**
**£149.99**
**£10** கழிவு (ஈழமுரசு வாசகர்களுக்கு மட்டும்)

**சர்வதேச அழைப்பு கட்டணங்கள்**

| | |
|---|---|
| சிறீலங்கா | – 60 p. நிமிடத்திற்கு |
| பாகிஸ்தான் | – 57 p. நிமிடத்திற்கு |
| இந்தியா | – 49 p. நிமிடத்திற்கு |
| பங்களாதேஷ் | – 60 p. நிமிடத்திற்கு |
| அமெரிக்கா | – 20 p. நிமிடத்திற்கு |
| சோமாலியா | – 70 p. நிமிடத்திற்கு |
| ஈகுவடோர் | – 49 p. நிமிடத்திற்கு |
| கொலம்பியா | – 45 p. நிமிடத்திற்கு |

ஏனைய நாடுகளுக்கும் குறைந்த கட்டணமே

விரைவில் எமது நிலையத்தில் E-Mail சேவையும் ஆரம்பிக்கப்படவுள்ளது. சகல கைத்தொலைபேசி இணைப்புப் பாகங்களும் எம்மிடம் கிடைக்கும்

GMS & Voda One 2 One

*291A High Street North Manor Park E 12*

**Tel: 0181 552 9113**

Mobile 0958632428
Fax 0181 552 9313

Pub

---

# சங்கர் அன் கோ
# மாபெரும் மலிவு விற்பனை

டிசம்பர் முதலாம் திகதி முதல் ஜனவரி 14 ஆம் திகதி வரை




**GRAND SALE**



**Tamil, Hindi, Punjabi & Sinhala**

* *Films Songs*
* *Devotional songs*
* *Classical Vocal & Intruments*
* *Christian Songs*






**CDs from.................. .99P**
**Audio cassetts from. .50P**
**Video cds from.........£6.00**
**Videos from..............£1.99**

தமிழ், ஹிந்தி, பஞ்சாபி, சிங்களம் ஆகிய மொழிகளில்

சினிமாப் பாடல்கள், பக்திப் பாடல்கள்,
சாஸ்திரிய சங்கீதம்,
– வாய்ப்பாடு
– வாத்தியங்கள்
கிறிஸ்தவப் பாடல்கள்

# SHANKAR & CO

231, NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDLESEX
HAZ SMN
Tel: 0181 - 42 68 960
Fax: 0181 - 86 15 248




**ALL SRILANKAN PRODUCTS AT WHOLE SALE PRICES**

Pub

# உலகச் செய்திகள்



## உலக நினைவலைகளில்

## எமது நாட்டின் விடுதலைக்காக உழைத்த எம்மிடையே கட்சி பேதப்போர் மீண்டும் ஆரம்பித்துவிட்டது என்றால் இதனைச் சகிக்க முடியாதுள்ளது. 20.01.1946

பிரான்சை ஹிட்லரின் படைகள் ஆக்கிரமித்தபோது, வாளாதிருந்த பலரைப் பார்த்து 'எதிரியை எதிர்கொள்ளாது சும்மாயிருப்பது எதிரிக்கு வெற்றியைத்தான் தரும்' என தெரிவித்த ஜெனரல் சார்ள்ஸ் து ஹோல் பிரித்தானியாவுக்குத் தப்பியோடி, அங்கிருந்து படை திரட்டி BBC வானொலியூடாக நடாத்திய பேருரைகளூடாக ஹிட்லரின் படைகளுக்கு ஒத்தூதியவர்களையே தன்பக்கம் திருப்பி பிரான்சை மீட்டது மட்டுமல்லாமல், இரண்டாம் உலகப் போருக்கும் ஹிட்லர் என்ற அரக்கனுக்கும் முடிவு கட்டியவர்.

பிரான்ஸ் விடுவிக்கப்பட்ட ஒரு வருடத்தில் அவரை விரக்தியின் விளிம்புக்குத் தள்ளினர் 'கட்சிக் குரோதம் பேணும் சதிகாரர்கள்.' அந்நாள் 20 -ம் திகதி தைமாதம் 1947-ம் ஆண்டு ஆகும்.

19.01.1946 அன்று மாவட்ட பொறுப்பதிகாரிகளை அழைத்த சார்ள் து ஹோல் பின்வருமாறு தெரிவித்தார்.

'Peu à peu nous retombons dans la confusion d'antant qui nous a fait tant de mal. je suis oblige de coloborer avec les ministres que m'ont donne's les partis les ministres arrivent hélas! pour la plupart, a s'inspirer plutôt des consignes qu'ils reçovent de leur partis que des interet véritable de France:'



'முற்காலத்தில் எமக்கு பெரும் தீங்கிழைத்த குழப்பகரமான சூழ்நிலைக்கு மீண்டும் நாம் மெல்ல, மெல்ல சென்று கொண்டிருக்கின்றோம். தமது கட்சியிடம் இருந்து கிடைக்கும் ஆலோசனைப்படி செயற்படுபவர்களுடன் நான் செயற்படவேண்டியுள்ளது. இவர்கள் பிரான்சின் வளர்ச்சி பற்றி கொஞ்சம் கூட அக்கறையற்றவர்களாக இல்லாது கட்சி பேதம் பேணுகின்றார்கள். எனது பணியை என்னால் முழுமையாக நிறைவேற்றமுடியாதுள்ளது. எனவே நிலைமைகளுக்கேற்ப முடிவெடுக்க பழக்கப்பட்டநான் பிரெஞ்சு அரசியலில் இருந்து விலகிக் கொள்கின்றேன். உங்கள் அனைவருக்கும் நன்றி'

அதற்கு அடுத்தநாள் ஞாயிறன்று (20.01.1946) தனது மந்திரிகளை அழைத்த சார்ள்ஸ் டி ஹோல் பின்வருமாறு தெரிவித்தார்.

'Le régime exclusif des partis à réaparu, je le réprouve mais, à moin d'établir par la force une dictature dout je ne veux pas et qui, sans dout tournerait mal, je n'ai pas les moyens d'empecher cette expérience. Il me faut dont me retirer'

பாரம்பரிய கட்சி பேதம் மீண்டும் புகுந்துவிட்டது. நான் இதனை கடுமையாக எதிர்க்கின்றேன், ஆனால் சர்வாதிகாரத்தின் மூலம் என்னால் இதனை வெல்லமுடியும். நான் அதனை விரும்பவில்லை, அத்தகைய சர்வாதிகார முயற்சி தீமையையே தரும். இதனைத் தடுக்க எனக்கு வேறு வழி தெரியவில்லை, எனவே விலகிச் செல்வது நல்லது என முடிவு செய்கின்றேன்.

தனது விலகல் பற்றி பகிரங்கமாக வானொலி பத்திரிகைகளுக்கு எதுவும் தெரிவிக்காது அஞ்ஞாதவாசம் சென்ற ஹோல் 'நினைவலைகள்' memoires என்ற புத்தகத்தை பின்னர் எழுதினார்.

# இரண்டாம் உலகப்போர் போர்க்குற்றம் தொடர்பான வழக்கு ஆரம்பம்

## போர்தோ நீதிமன்றத்தில் விசாரணை

இரண்டாம் உலகப் போர் காலத்தில் பிரான்சில் ஆண், பெண் வயது வேறுபாடின்றி யூதர்களைக் கைது செய்து ஹிட்லரின் படைகளிடம் ஒப்படைத்த 'Vichy' ஆட்சியின் ஒரு பொலிஸ் ஆணையாளரான (Prefet) மொறிஸ் பப்பன் மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு விசாரணை Bordeaux நீதிமன்றத்தில் கடந்த 13.11.97 வியாழனன்று ஆரம்பித்துள்ளது.

இவ் விசாரணைகளில் எதிரியாக பொலிஸ் ஆணையாளர் மொறிஸ் பப்பனும் வழக்காளிகளாக ஹிட்லரிடம் ஒப்படைக்கப்பட்டு நச்சுவாயு அறைகளில் பலியானவர்களின் உறவினர்களில் சிலரும் பங்கு கொண்டனர்.

விசாரணைகளில் தனது பக்க நியாயத்தை தெரிவித்த மொறிஸ் பப்பன், தனது மேலிடம் வழங்கிய கட்டளைகளின் படியே ஆண், பெண் வயது வேறுபாடின்றி யூதர்களைக் கைதுசெய்து ஹிட்லரின் படைகளிடம் ஒப்படைத்தேன் எனவும் தெரிவித்தார்.

Secretaire General de police Mr. Rene Bosquet இடம் இருந்து எனக்கு பின்வருமாறு கடிதம் வந்தது எனத்தெரிவித்த அவர் அக் கடிதத்தில்

*'le service de sürete' allemand m'a demande' d'assurer la preparation pour la semane prochaine vraisenblement Mercredi 26 août dans le quel compris tous les juifs des deux sex, de tout age et toute nationalité'*

'ஆண், பெண், வயது பிரஜா உரிமை வேறுபாடின்றி சகல யூதர்களையும் கைது செய்து ஹிட்லரிடம் அடுத்தவாரம் ஒப்படைக்க நடவடிக்கைகளை உறுதிப்படுத்தவும்' எனத் தெரிவிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

இதேவேளை, எப்பவோ நடந்த விடயத்தை இப்ப ஏன் கிளற வேண்டும்? என்ற பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்கு, தன் பாட்டனாரை பலி கொடுத்த பேத்தி Marin பதிலளிக்கையில்,

'எனது பாட்டன் அழகாக உடை தரித்து தன்னை ஒரு பிரெஞ்சுப் பிரஜையாக நினைத்து வாழ்ந்தவர். 10.01.1934 அன்று நான்கு சகோதரருடன் நான் சினிமாவுக்குச் சென்றிருந்தேன். திரும்பி வரும்போது எமது வீடு பிரெஞ்சுப் பொலிசாரால் சீல் வைக்கப்பட்டிருந்தது. எனது தாத்தா யூதர் என்பதால் கைது செய்துவிட்டார்கள் என்பதை அயலவர்கள் தெரிவித்தார்கள். ஜன்னலை உடைத்துக் கொண்டு உட்சென்ற என் சகோதரர், சில உடுப்புகளை எடுத்துவந்தார். நாம் தப்பியோடினோம்.

இந்த சோக வரலாறு அறியாத வரலாறு எழுதும் பலர் இன்னமும் இருக்கின்றார்கள். இந்த வரலாறு அறியப்பட வேண்டும் என்பதற்காக மட்டுமே இந்த வழக்கைத் தொடுத்துள்ளோம்.

வஞ்சம் தீர்ப்பது என்ற நோக்கம் தவிர மற்றெல்லா நோக்கத்திற்கும் இந்த வழக்கு பயன்படட்டும் எனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் அனைவரும் உண்மையில் அறிய இந்த பதிவு பயன்படட்டும் என அவர் தெரிவித்துள்ளார். வழக்கு விசாரணை மீண்டும் 17.11.97 திங்களன்று நடைபெறும்

இந்த வழக்கு தொடர்பாக பிரெஞ்சு பத்திரிகைகள் முழுச் செய்தி வெளியிட்டு வருகின்றன. பிரெஞ்சு மக்கள் மத்தியில் இவ் விடயம் மீண்டும் பேசப்படுவதால், பாராளுமன்றத்தில் இது பற்றி கருத்து வெளியிடும் நிலைக்கு பிரதமர் ஜொஸ்பன் தள்ளப்பட்டார். கடந்தவாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் 'இந்த குற்றத்துக்கு பிரெஞ்சு மக்களல்ல, முன்னைய பிரெஞ்சு அரசே பொறுப்பு' எனத் தெரிவித்துள்ளார்.

# அரபாத்தின் உடல்நிலை மேலும் மோசமடைகின்றது

கடந்த 15.11.97 சனிகன்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் மடலின் அல்பிரைட்டை ஜெனீவாவில் சந்தித்து பாலஸ்தீன இஸ்ரேல் சமாதான ஒப்பந்தத்தின் இன்றைய நிலை தொடர்பாக ஆராய்ந்த யசீர் அரபாத் பின்னர் பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்தார்.

பத்திரிகைகளுக்கு பேட்டியளித்த அரபாத்தின் பேச்சு வழமைக்கு மாறாக மிக மெதுவாகவும், தடங்கல்கள் உள்ளதாகவும் காணப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

1992 இல் விமான விபத்துக்குள்ளாகியதால் ஏற்பட்ட பாதிப்பும், 68 வயதான அரபாத்திற்கு முதிர்ச்சியால் ஏற்பட்ட களைப்பும் இதற்குக் காரணம் என அவரது உதவியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# இஸ்ரேலை- பேச்சுவார்த்தை மூலம் திருத்தவும் ஈராக்கை இராணுவ பலம் கொண்டு அடக்கவும் முடிவு

பாலஸ்தீனர்களின் நிலங்களை ஆக்கிரமித்து இஸ்ரேலியர்களை குடியேற்றிவரும் பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகுவின் அரசு, பாலஸ்தீன இஸ்ரேல் சமாதான ஒப்பந்தத்தை மீறுவதோடு ஐ.நா. தீர்மானத்திற்கு கட்டுப்பட மறுக்கின்றது இஸ்ரேல் அரசின் இந்தப்போக்கு கவலை தருவதாக உள்ளதாகத் தெரிவித்த அமெரிக்க இராஜாங்க அமைச்சர் திருமதி மடலின் அல்பிரைட், கடந்தவாரம் இஸ்ரேலியப் பிரதமரை பிரிதானியாவில் சந்தித்து தன் கவலையை வெளியிட்டார்.

இது ஒருபுறமிருக்க, அந்நிய நாடுகளின் ஆக்கிரமிப்பில் இருந்து தன்னைப்பாதுகாக்க தனது இராணுவ பலத்தை அதிகரிக்க ஈராக்கிற்கு அதிகாரமளிக்க ஐ.நா. சபை மறுத்துள்ளது. அத்தகைய ஆயுத தயாரிப்பு அண்டை நாடுகளுக்கு ஆபத்து எனக்கருதுவதால் அமெரிக்காவின் வேவு விமானங்களை அனுப்பி வேவு பார்த்து வருகின்றது ஐ.நா.

இந்த நடவடிக்கைக்கு ஈராக் பணிய மறுத்தால் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என ஐ.நா.வும் அமெரிக்காவும் தெரிவித்து வருகின்றன. அத்தகைய இராணுவ நடவடிக்கைக்கு பிரான்சும் தனது உதவிகளை செய்யும் என பிரெஞ்சு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை இராணுவ பலம் கொண்டு தடுக்காதிருக்கும் ஐ.நா. சபையும் அமெரிக்காவும், ஈராக் மீது மட்டும் இவ்வளவு வேகமாக தீர்மானங்கள் இயற்றுவது வேடிக்கையாகவுள்ளது என அரபுலக இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பிரான்சுக்கு வெளிநாட்டார் வருகையை தடுக்கும் பொறுப்பு சாமிநாயரிடம்

பிரான்சில் குடியேற முனையும் வெளிநாட்டவர்களைத் தடுக்கும் பொருட்டு, குறிப்பிட்ட அந்த நாடுகளுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கும் பொறுப்புகள் சாமிநாயர் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பிரெஞ்சு பிரதமராலுவலகச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

'எமது நாட்டுடன் தொடர்புடைய நாடுகளின் அபிவிருத்தியில் பங்கு கொள்வதன் மூலம் அவர்கள் பிரான்சுக்கு வருவதைத் தடுக்க முடியும் என பிரதமர் லியனல் ஜொஸ்பன், நாயருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதோடு அதற்கான திட்டமொன்றை தயாரிக்கும் படியும் பணித்துள்ளார்.

இத்திட்டத்தின் முதலாவது சட்ட அறிக்கையை 10.12.1997 இற்குமுன் சமர்ப்பிக்குமாறு லியனல் ஜொஸ்பன் நாயரிடம் பணித்துள்ளார்.

# அந்நியர்களின் குழந்தைகள் 13வது வயதில் பிரசா உரிமை கோரலாம்

பிரான்சில் வாழும் வெளிநாட்டவர்களுக்கு பிரான்சில் பிறக்கும் குழந்தைகள் தமது 13-வது வயதில் பிரசா உரிமை கோரும் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம் என ஆளும் சோசலிசக் கட்சியின் மந்திரி சபை தீர்மானித்துள்ளது.

1851ம் ஆண்டில் இருந்து அமுலில் இருந்து வந்த Droit De Sol எனப்படும் பிரான்சில் பிறக்கும் அனைத்து குழந்தைகளும் பிறப்பால் பிரசா உரிமை பெறும் உரிமை, 1993ம் ஆண்டு வலதுசாரிக் கட்சியின் உள்நாட்டமைச்சர் Mehaginerie இன் மெஹ்னெரி சட்டத்தால் இல்லாதொழிக்கப்பட்டது.

பிரான்சில் பிறக்கும் அனைத்து குழந்தைகளும் 18 வயது வரை பிரசா உரிமையற்றவர்களாகவும் விண்ணப்பம் சமர்ப்பித்து பிரசா உரிமை பெறுபவர்களாகவும், நிராகரிக்கப்பட்டால் பிரான்சில் பிறந்து பிரான்சில் வளர்ந்து பிரெஞ்சு மொழிமட்டும் தெரிந்த அவர்கள் நிர்க்கதியானவர்களாகும் நிலை உருவாகியது.



நன்றி லுமோன்ட்

# பாப்பரசரை கொல்ல முனைந்தவருக்கு ஆயுள் கால சிறைத் தண்டனை

1981-ம் ஆண்டு ரோமில் வைத்து பாப்பரசரைக்கொலை செய்ய முயன்றவருக்கு இத்தாலிய நீதிமன்றம் ஆயுள் காலச் சிறைத் தண்டனை விதித்திருந்தது தெரிந்ததே.

மொகமத் அலி எனப் பெயர் கொண்ட துருக்கியப் பிரசையான மேற்படி நபரின் சகோதரியான அட்னாரை கடந்த 12.11.97 புதனன்று பாப்பரசர் சந்தித்தார். இச்சந்திப்பில் போது ஆயுள்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் தனது சகோதரரை மன்னித்து விடுதலை செய்யுமாறு இத்தாலிய அரசுக்கு சிபாரிசு வழங்குமாறு பாப்பரசரிடம் அட்னா கோரிக்கை விடுத்ததாகவும், அதற்கு பதிலளித்த பாப்பரசர்,

தன்னாலானவற்றை தான் செய்து விட்டதாகவும் மொகமத் அலி உண்மை முழுவதையும் இன்னும் தெரிவிக்காததால் அவரது விடுதலை இப்போதைக்கு சாத்தியமெனக் கருதவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

## ஐ.நா வுக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்த அமெரிக்கா மறுப்பு

கடந்த 13.11.97 வியாழனன்று ஐ.நா வுக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்துவதில்லை என அமெரிக்க காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

100 கோடிக்கும் அதிகமான தொகையை ஐநாவுக்குச் செலுத்த வேண்டியுள்ள அமெரிக்கா, ஈராக்கின் மீது இராணுவ தாக்குதல் நடாத்த முனைந்துள்ள வேளையில் அமெரிக்க காங்கிரசின் இத் தீர்மானம் வெளியாகியுள்ளது.

இது குறித்து ஐநா செயலா கொபி அனான் விடுத்த அறிக்கையில் சமாதானப் பணியில் ஈடுபட்ட படையினருக்கான கொடுப்பனவுகளை செய்ய முடியாத நிலையில ஐநா உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

## ஜோர்ச் மார்சே காலமானார்

பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் செயலாளர் ஜோர்ச் மார்சே கடந்த 16.11.97 ஞாயிறு காலை காலமானார். 77 வயதுடைய ஜோர்ச் மார்சே, தனது 27-வது வயதில் 1947 ஆம் ஆண்டு பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார்.

1972-ல் கட்சியின் பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்ட இவர், 1994 வரை அப் பதவியில் இருந்தார். Val De Marne பகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக தொடர்ந்து கால் நூற்றாண்டு காலம் இருந்த இவர் ரஷ்யாவுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்த போதும், சமவுடமைக் கொள்கையில் மாற்றங்களைக் கொண்டு வர முயற்சித்தவர். சோசலிசக் கட்சியுடன் கூட்டாட்சி கூட்டு வைக்க ஒப்பந்தங்களையும் இவர் செய்திருந்தார்.

## துருக்கிய இஸ்லாமியக் கட்சியை தடைசெய்ய நீதிமன்றத்தில் முயற்சி

அமெரிக்காவில் கல்வி கற்று துருக்கியில் பதவிக்கு வந்த திருமதி தான்சு சில்லரைத் தோற்கடித்து பதவிக்கு வந்த துருக்கிய இஸ்லாமியக் கட்சியை சட்ட மூலம் தடைசெய்யும் நோக்குடன் வழக்கொன்று துருக்கிய நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளது.

நெக்மத்தின் 'எர்பக்கான்' தலைமையிலான இஸ்லாமியக் கட்சியினுள் இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள் செயற்படுவதாகக் குற்றம் சாட்டப்பட்டே மேற்படி வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

இத் தீவிரவாதக் குழுக்கள் துருக்கியில் நிலவும் மதச் சார்பற்ற ஆட்சியை நிலைகுலையச் செய்யும் நோக்கில் செயற்படுகின்றன என சட்டமா அதிபர் திணைக்களம் சமர்ப்பித்த வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குண்டுத்தாக்குதல் விவகாரம் அல்ஜீரிய தூதுவர் மறுப்பு அறிக்கை

பிரான்சில் Saint michel நிலக்கீழ் போக்குவரத்துச் சேவை நிலைய உட்பட பல இடங்களில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல்களுக்கும், அல்ஜீரியாவில் இடம் பெற்ற பல கொலைகளுக்கும் பின்னணியில் அல்ஜீரிய உளவு நிறுவனமே இருந்ததாக அல்ஜீரிய உளவு நிறுவன அதிகாரிகள் இருவர் தெரிவித்த ஒப்புதல் வாக்குமூலம் உண்மைக்குப்புறம்பானது என பிரான்சுக்கான அல்ஜீரியத் தூதுவர் அறிக்கையொன்றின் மூலம் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

'எவர் மீதும் குற்றம் சாட்டுவது இலகு, ஆதாரம் சமர்ப்பிக்காத குற்றச் சாட்டுக்கள் அர்த்தமற்றவை' என அவர் தெரிவித்துள்ளார்.

# வாரக் குறிப்பு

### 09.11.97 ஞாயிற்றுக்கிழமை

- ஜேர்மனி வங்கியின் தற்போதைய தலைவரான Hans ஐ ஐரோப்பிய வங்கியின் (BUE) தலைவராக நியமிப்பது 'சிறந்தமுடிவு' என இத்தாலிய நிதி மந்திரி தெரிவித்துள்ளார். பிரான்ஸ் தனது பிரதிநிதி ஒருவரை ஐரோப்பிய வங்கியின் தலைவராக நியமிக்க முயற்சி செய்கின்றது.
- நைஜீரியா ஆட்சியாளர்களை விமர்சித்து எழுதிய The news என்ற பத்திரிகை ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளதாக 'த கார்டியன்' தெரிவித்துள்ளது.
- தாய்லாந்து எதிர்க்கட்சித் தலைவர் Chua Leeazai புதிய பிரதமராக பதவியேற்றார். பணச் சந்தைச் சரிவைத் தொடர்ந்து பிரதமர் பதவி விலகினார்.

### 10.11.97 திங்கட்கிழமை

- ஈராக்கிடம் உயிரியல் ஆயுதம் இருப்பதற்கான ஆதாரங்களைக்கண்டு பிடிப்பதில் தமது குழு பாரிய முன்னேற்றத்தைக் கண்டறிந்துள்ளதாக ஐ.நா. வின் ஆயுதப் பரிசோதனைக் குழுவின் தலைவரான அமெரிக்கர் தெரிவித்துள்ளார்.
- வியட்னாமில் உள்ள கத்தோலிக்க சபைகள் இணைந்து ஆட்சியாளர்களைக் கண்டிக்கும் ஊர்வலம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.
- நைஜீரிய பத்திரிகையான TELL இன் ஆசிரியர் இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளார். இராணுவ ஆட்சியாளர்களின் 'ஏஜெண்டுகளே' கடத்தலைப் புரிந்துள்ளதாக பத்திரிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
- கென்ய பாராளுமன்றம் ஜனாதிபதியால் கலைக்கப்பட்டுள்ளது. மூன்று மாதத்திற்குள் தேர்தல் நடாத்தப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

### 11.11.97 செவ்வாய்க்கிழமை

- பிரெஞ்சு ஆட்சியாளர்கள் நிதித்துறை, பொலிஸ் போன்ற துறைகளில் மாற்றம் கொண்டுவர முயற்சி செய்யும் என பிரதமர் தெரிவித்துள்ளார்.
- போலந்து அரசு தனியார் மயமாக்கலை தீவிரப்படுத்த உள்ளதாக அறிவித்துள்ளது.
- பல்கேரியாவில் 1944 ல் பதவிக்கு வந்த சமவுடமைக் கட்சியால் தேசிய மயமாக்கப்பட்ட சொத்துக்களை உரியவர்களிடம் மீள ஒப்படைப்பதென 1991-ல் பதவிக்கு வந்த வலதுசாரிகள் முடிவு செய்துள்ளனர்.
- கட்டார் நாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள அரபுலக மாநாட்டை பல நாடுகள் பகிஷ்கரிக்க போவதாக அறிவித்துள்ளன. பாலஸ்தீன இஸ்ரேல் ஒப்பந்தம் முடக்கப்பட்டுள்ளதைக் கண்டித்தே இப் பகிஷ்கரிப்பு.

### 12.11.97 புதன்கிழமை

- இஸ்ரேலில் பொலிசார் சித்திரவதை நடவடிக்கைகளை தொடர்ந்து கடைப்பிடிப்பது கவலை தருவதாக ஐ.நா தீர்மானமொன்று தெரிவித்துள்ளது.
- பொஸ்னியாவில் சர்வதேச படைகள் தொடர்ந்து இருப்பது அவசியம் என அமெரிக்க பிரதிநிதி தெரிவித்துள்ளார். ஜூன் 1998-ல் பொஸ்னியாவில் உள்ள அமெரிக்கப் படைகள் வெளியேறவேண்டும்.
- மத்திய ஆசியாவில் சுற்றுப் பயணமொன்றை மேற்கொள்ளும் திருமதி கிளின்டன் கஜகஸ்தான் வந்தடைந்தார்.

### 13.11.97 வியாழக்கிழமை

- இரண்டாம் உலகப்போர் முடிவடையும்போது பேர்லின் நகரில் ரஷ்யப் படைகளால் மீட்கப்பட்ட பிரெஞ்சு ஆவணங்களை பிரான்சிடம் ஒப்படைக்க ரஷ்யா முடிவு. இவ்வாவணங்களில் முன்னாள் ஜனாதிபதி Leon Blum தொடர்பான தகவல்களும் உண்டு.
- பாகிஸ்தானில் நான்கு அமெரிக்கர்கள் சுட்டுக்கொலை, Mir Aimal என பாகிஸ்தானியருக்கு அமெரிக்காவில் மரண தண்டனை விதிக்கப்பட்டதன் எதிரொலி.
- நோய்வாய்ப்பட்டிருக்கும் பாப்பரசர் வழக்கமான பிரார்த்தனை நடவடிக்கைகளை முழுமையாக நிறைவேற்றவில்லை.
- 1998-ம் ஆண்டு ஆபிரிக்காவில் நான்கு இராணுவ பயிற்சி முகாம்களை பிரான்ஸ் நிறுவும் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 14.11.97 வெள்ளிக்கிழமை

- அமெரிக்காவில் நலன்களைப் பாதிக்கும் விதத்தில் இஸ்ரேல் நடந்து கொள்வதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.
- பிரெஞ்சு மொழிபேசும் நாடுகளின் ஏழாவது மாநாட்டை வியட்னாமில் ஆரம்பித்து வைத்து பேசிய பிரெஞ்சு ஜனாதிபதி தனதுரையில் 'மொழி ரீதியான பிணைப்புகள் 21-ம் நூற்றாண்டின் அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும்' எனத் தெரிவித்துள்ளார். பிரெஞ்சு மொழி பரப்பல் திட்டம் காலனியாதிக்கத்தின் இன்னொரு அங்கம் என புரட்சித்தந்தை சேகுவேராவுடன் வாழ்ந்த கொங்கோ ஜனநாயக குடியரசின் தலைவர் கபிலா தெரிவித்துள்ளார்.
- 35 ஆண்டு கால வரலாற்றில் காணாத பெருவெள்ளம் சோமாலியாவில் ஏற்பட்டுள்ளது. ஆயிரக் கணக்கானோர் பலி.

### 15.11.97 சனிக்கிழமை

- பிரான்சில் நடைபெறவுள்ள சர்வதேச கால்பந்தாட்ட போட்டியில் கலந்து கொள்ளும் 32 அணிகளில் ஒன்றாக இத்தாலி தெரிவாகியுள்ளது. இத்தாலியில் நடைபெற்ற ரஷ்யாவுடனான மோதலில் இத்தாலி 1-0 என வெற்றி பெற்றது.
- சுவிற்சர்லாந்தில் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் திருமதி மடலின் அல்பிரைட்டை சந்தித்த பின் பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது நிலை குலைந்தவராகக் காணப்பட்ட யசிர் அரபாத்தை பரிசோதித்த வைத்தியர்கள், அவர் நரம்பியல் நோயான 'பார்க்கின்சன்' நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.
- அல்ஜீரிய அரசின் மோசடியான தேர்தல் வெற்றியை கண்டித்த அணியில் பிளவு. RCD கட்சி கண்டன ஊர்வலத்தில் கலந்துகொள்ளவில்லை.

# "தலைப்பு வேணும்... தலைப்பு வேணும் பயஸ்கோப்பு படத்துக்கொரு தலைப்பு வேணும்"

## ஆருக்குச் சொல்லி அழ?

**பெடியள் ஒரு கொப்பியைக் கொண்டந்து 'நவாலிப் படுகொலை, போட்டுப் பாருங்கோ' எண்டு குடுத்தவையள் அவை 'உதை இஞ்ச போட்டால் எங்கட பிள்ளையள் பயந்திடும்...... நாங்களும் பாத்தா சாப்பிட முடியாது' எண்டு சொல்லி திருப்பி விட்டிட்டினம். எனக்கெல்லோ தெரியும் அவையளின்ர பிள்ளையள் பாக்கிறது... வெடிகுண்டே வெடிக்காத 'ரம்போ'வும்! துவக்குச்சத்தமே கேக்காத 'ரெர்மினற்ர'ருமெண்டு!!**

வெயிலும்போய் குளிரும் தொடங்கி விட்டுது. ஐஞ்சாறு மாசமாய் வெக்கை வெக்கை எண்டு ஓடித் திரிஞ்சனாங்கள். எனி குளிருது குளிரு எண்டு போத்துக் கட்டிக்கொண்டு வீட்டுக்குள்ளை எல்லோ அடைஞ்சு கிடக்கவேணும். அப்ப பொழுது போறதுக்கு என்ன வழி....? சினிமாப் படமும் 'சின்னத்திரை' தொடருகளும் தான். அதைவிட்டா எங்களுக்கு வேறவழி இருக்கே பிள்ளையள்....? அதுதான் இந்த குளிரோட குளிரா ஒரு 'சின்னத்திரை' தொடர் படமொண்டு எடுப்பமெண்டு பாக்கிறன். இப்ப குறைஞ்ச முதலைனத்தோட கனக்க லாபம் தாறது உந்தத் தொழில்போலதான் கிடக்குது! அதுதான் உங்கின ஆரும் நடிக்கிறதுக்கு வந்தால், தொடரை எடுத்துப் போடுவன். நடிக்க வாறவை நடிப்பில பெரிய பட்டங்கள் எடுத்திருக்க வேணுமெண்ட கட்டாயம் இல்லை, 'கமரா'வுக்கு முன்னால முகத்தை மட்டும் காட்டினாப்போதும். கை, கால் உடம்புகளையெல்லாம் 'கொம்பியூட்டர்'லேயே உருவாக்கிப் போடுவம். முகத்தையும் உருவாக்கலாம் பிறகு விமர்சகர்மார் 'காட் டுன்' எண்டெல்லோ விமர்சிச்சுப் போடுவினம். அதுதான் உங்களுக்குத் தெரிஞ்ச ஆராவது நடிக்க விருப்பமிருந்தா அனுப்பிவிடுங்கோ பிள்ளையள். மொழி கூட தெரிஞ்சிருக்க வேணுமெண்டு கட்டாயமில்லை. 'டப்பிங்'கில அதையும் சரி செய்து போடலாம்.

எல்லாருக்கும் சரியான யோசனை.......! அருமையர் உண்மையில படம் எடுக்கத்தான் போறாரோவெண்டு? ஓம் பிள்ளையள் உங்கின 'வீடியோக் கிளப்'புகள் வழிய போய் நிண்டெல்லோ பாக்கவேணும். வாறவையெல்லாம் அந்தத் தொடர் வந்திட்டுதோ..... இந்தத் தொடர் வந்துட்டுதோ.... எண்டு கேட்டு அடம்பிடிக்கிறதை! தொடர் எண்டா என்ன ரெண்டு மூண்டு கொப்பியில முடிஞ்சிடும் எண்டு நினைக்கிறியளே? அதுதான் இல்லை! எப்ப முடியுதோ அப்ப பாத்துக்கொள்ள வேண்டியதுதான். இப்பிடியே குறைஞ்சது பத்துப் பதினைஞ்செண்டு நீண்டு கொண்டே போகும். அதப்பாத்து முடிக்கிறதுக்கு நூறு இருநூறு பிராங்கெண்டாலும் வேணும் பிள்ளையள். ஏன் இப்ப எந்த வீட்டையும் போய்ப்பாருங்கோ உந்தச் 'சின்னத்திரை' தொடருகளைப் பற்றித்தான் கதை. சிலபேர் இருக்கினம் வாற ஒரு தொடரும் தவற விடா.....மல் எடுப்பினம். அதுவும் கொஞ்சநாளா உந்தச் சினிமாக்காரற்றை 'பகிஷ்கரிப்புகளால' உந்த தொடருகளுக்குத்தான் பெரும் மதிப்பு! உதால சினிமாப்படங்கள் வராதோவெண்டு கன ரசிகர்மார் மண்டையில கைவைச்சிட்டினம். தீபாவளியோட சும்மா போலவெண்டு புளியம்பழம் கொட்டுண்ட மாதிரி கொட்டுண்டாப்பிறகுதான் அவையின்ர நெஞ்சுக்க எப்பவெண்டாலும் தண்ணி வந்திருக்கும் பிள்ளையள். எனி இவ்வளத்தையும் பாத்து முடிக்க எவ்வளவு வேணும்....?

உண்மையில இப்ப வாற சில படங்களைப் பாக்கிறதுக்கு சரியான பொறுமை வேணும் கண்டியளோ. 'எங்க சின்னப் பொண்ணு' எண்டொரு படம். கதையுமில்லாமல் நடிப்புமில்லாமல்..... உந்தப் படம் வெளிவாறதுக்கு முதல், எடுத்த அந்த மகராசனை நேரில கண்டிருந்தனெண்டா, உதை எடுக்கிறதுக்கு செலவழிச்சதை விட ஒரு பத்தை இருவதைக் கூடக்குடுத்தெண்டாலும் வெளிவராமல் திப்பாட்டியிருப்பன். அதைவிட இன்னொண்டு 'அபூர்வ உதயங்கள்'. ஏன்தான் எடுத்தார்களோ தெரியாது. உங்க நிறையப் பேர் இருக்கினம், ரண்டு ரண்டரை மணித்தியாலப் படங்களை கூட ஒரு மணித்தியாலத்தில பாத்து முடிச்சுப்போடுவினம்! என்னெண்டு கேட்டா பாட்டுக் கொப்பியில பாட்டைப்பாக்கலாம் எண்டுபோட்டு பாட்டை ஓடவிடுறது. சண்டை பாக்கிறதேயில்லை. ஏன் நகைச்சுவையும் தனியாத்தானே வருது. அதையும் ஓடவிட்டா அரை மணித்தியாலத்திலேயே முடிச்சுப் போடலாம் எல்லோ. நகைச்சுவை எண்டு சொல்லத்தான் எனக்கொரு கதை ஞாபகத்துக்கு வருகுது பிள்ளையள்.

அந்த சினிமாப்படம் எடுக்கிறவர், வழக்கம்போல தன்ர ரெண்டாவது பட வெளியீட்டு விழாவுக்கும் பெரியவையளை, அறிஞர்களை அழைச்சு படத்தைக் காட்டியிருக்கிறார். எல்லாரும் படம் முடிஞ்சு போகேக்க சிரிச்சுக்கொண்டு போச்சினமாம். படமெடுத்தவருக்கு அதிர்ச்சி! 'முன்னை படத்தைப் பாத்துட்டு சிரிச்சுக்கொண்டு போறியள்?' எண்டொருத்தரை கேக்க..... 'போனமுறை உங்கட படத்தைப் பாத்துட்டு சிரிக்கேலை எண்டு வருத்தப் பட்டனீங்கள். அதுதான் இந்தமுறை நல்லா சிரிச்சனாங்கள்' எண்டாராம். படமெடுத்தவர் தலையில கை வைச்சிட்டார்! போனமுறை எடுத்தது நகைச்சுவைப்படம். இந்தமுறை எடுத்தது சோகப்படமெண்டு அவருக்கு மட்டும்தானே தெரியும்! இப்பிடிப் பிள்ளையள்..... என்னெண்டே விளங்காமல் சில படங்கள்!

அதுவும் 'குடும்பச் சங்கிலி' மாதிரி சில படங்கள் வந்தாக்காணும். அதில நடிக்கிறவைதான் காசைவாங்கிப்போட்டு அழுகிற மாதிரி நடிக்கினமெண்டா, தொடங்கி முடியும் வரைக்கும் காசையும் குடுத்திட்டெல்லோ உண்மையில கண்ணீர் விட்டு அழவேண்டிக்கிடக்கு! உப்பிடித்தான் ஒரு வீட்டில நிக்கேக்க பெடியள் ஒரு கொப்பியைக் கொண்டந்து 'நவாலிப் படுகொலை, போட்டுப் பாருங்கோ' எண்டு குடுத்தவையள். அவை 'உதை இஞ்ச போட்டால் எங்கட பிள்ளையள் பயந்திடும்...... நாங்களும் பாத்தா சாப்பிட முடியாது' எண்டு சொல்லி திருப்பி விட்டிட்டினம். எனக்கெல்லோ தெரியும் அவையளின்ர பிள்ளையள் பாக்கிறது.., வெடிகுண்டே வெடிக்காத 'ரம்போ'வும்! துவக்குச்சத்தமே கேக்காத 'ரெர்மினற்ர'ருமெண்டு!! அந்தச் சின்னனுகளைக் கேட்டுப் பாருங்கோ 'எங்களுக்கு அடிபாட்டுப் படம்தான் பிடிக்கும்' என்னுங்கள்.

அண்டைக்கு இப்பிடித்தான் நாட்டில நடந்த தாக்குதலொண்டு இங்கை போட்டவை. பாத்து முடிஞ்சு வெளியில வரேக்க ரெண்டு இளசுகள் கதைச்சுக்கொண்டு போகுது.... 'அடிபாடு நல்லாத்தான் இருக்கு அதை 'கமரா' எடுத்தாக்கள்தான் சரியில்லை! 'கமரா' அங்கையும் இங்கையும் ஆடிக் கொண்டிருக்கு'தாம். ம்...... உதுகளுக்கெனி நான் எப்பிடி விளங்கப்படுத்துறது பிள்ளையள்....?

சரி உந்தச் சினிமாக்களை பாத்தாலும் அதோட முடிஞ்சு போகுதே? அதில வாற பாட்டுகள் இளசுகளை படுத்திற பாடிருக்கே......! அங்கையொரு சின்னப் பெடியனிருக்கிறான். 'அழகிய லைலா அழகிய லைலா' எண்ட பாட்டைக் கேட்டானெண்டாக் காணும்..... பாட்டுத் தொடங்க முதலே 'வையர்' குடுத்து விட்ட மாதிரி இவனுக்கு உடம்பு நெளியத் தொடங்கிவிடும். 'பெடியன் வளந்து பிரபுதேவா மாதிரித்தான் வரப்போறான்' எண்டு தாய்க்காரி சொல்லுவா. இப்பிடி இளசுகளை மயக்கிறதுக்கு கனக்கப் பாட்டுக்கள் இன்னும் வந்து கொண்டுதான் இருக்குது. அதைவிட வயசு வந்த ஆம்பிளையளுக்கு. அவையள் மட்டும் ரசிச்சு, ருசிச்சுச் சாப்பிடுற மாதிரி குஷ்பு இட்டலி, ரம்பா தோசை, நக்மா ரொட்டி, ஜோதிமீனா இடியப்பம். இப்பிடியே சொல்லிக் கொண்டு போகலாம் பிள்ளையள். இதெல்லாம் ஆம்பிளையளுக்கு மட்டும்தான்... பொம்பிளையள் இதுகளை சாப்பிட்டுப் போடாதையுங்கோ.... உங்களுக்குத்தான் காஞ்சிபுரம் சேலையள் எல்லாம் போய், இப்ப மின்சாரக் கனவுகள், அடிரா சக்கை அடியா சக்கை, பொலீஸ் லாக்கப், லத்தியடி எண்டு கனக்க விதம் விதமான சேலையள் வந்துகொண்டிருக்கே......

இப்பிடி எல்லாரையும் மயக்கிறதுக்கெண்டு எத்தனையோ உந்தச் சினிமாவுக்க இருக்கு. ஆனா, இந்த வயசு போனதுகளுக்குத்தான் ஒண்டுமில்லை. அதுதான் பிள்ளையள் இப்பிடி எல்லாரும் வசப்படுற மாதிரி நாலும் எடுப்பமெண்டு பாக்கிறன். தலைப்புத்தான் கொஞ்சம் தேடிப்பிடிக்கிறது கஷ்டமாய்க் கிடக்கு. உங்களுக்கெதாவது தட்டுப்பட்டுதெண்டா அனுப்பி வையுங்கோ... தலைப்பு கவர்ச்சியா இருக்கவேணும் எண்டு கட்டாயம் இல்லை, ஏற்கனவே வராததா இருக்கவேணும். அதாலதான் உங்களிட்ட கேக்கிறன்... உங்களுக்குத்தானே தெரியும் பிள்ளையள்.., எந்தத் தலைப்பு வந்துட்டுது எது வரேலையெண்டு...!!

**அருமைத்தம்பி**

ராணி மஹால்

இறக்குமதி செய்யப்பட்ட இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், பசுமையான மரக்கறிவகைகள், கடல் உணவுவகைகளை நியாயமான விலையிலும், ஹிந்தி, தமிழ், வங்காள, பாகிஸ்தான், குஜராத், சிங்கள ஒடியோ, வீடியோ கசட்டுக்களை குறைந்த கட்டண வாடகையிலும் வழங்கி உங்களுக்குச் சேவை செய்யவென காத்திருக்கிறார்கள்!

மலிவு விலையில் புதிய பாடல்கள் அடங்கிய நான்கு CD 100Frs மட்டுமே! (இச் சலுகை குறிப்பிட்ட வாரங்களுக்கு மட்டும்)

127, Av. Parmentier, 75011 Paris. - M°: Goncourt
Tel: 0140213167 / Fax: 0143555927 - Bus: 46 / 75

(இங்கு அரச அனுமதிபெற்ற சர்வதேச தொலைத்தொடர்புகளுக்கான தொலைபேசி அட்டைகளும் விற்பனைக்குண்டு)

## எதிரொலிகள்

**15.01.95** தமிழா திருநாளில் தனது முதல் இதழை வெளியிட்ட ஈழமுரசு அடுத்த வாரம் தனது 150-வது இதழை வெளியிடவுள்ளது. இதழியல் வரலாற்றில் இது ஒரு மிகப் பெரிய சாதனையாகும்.

32 பக்கங்களில் தொடர்ச்சியாக, துணிச்சலாக, உறுதியாக, ஈழவிடுதலை என்கிற இலக்கு நோக்கிய பயணமாக, புலம் பெயர்ந்த தமிழ் மக்களிடையிலான இணைப்புப் பாலமாக இதழினது தொடக்கமும் தொடர்ச்சியும் இருந்து வருகிறது. தமிழீழ வரலாற்றில் இதன் பணி பெருமிதம் கொள்ளத்தக்கது; வணங்குதற்குரியது.

# 150-வது முழக்கத்தை நோக்கி வெற்றி நடைபோடுகின்ற ஈழமுரசு

ஈழ விடுதலைக்கான செயற்பாடுகளை....

அ) எதிரிகளை நேரடியாகக் களத்தில் சந்தித்துப் போராடுகிற களப்பணி.

ஆ] தாயகத்தில் நடக்கிற உண்மை நிலையை மக்களிடத்தும்/ தேச நாடுகளிடத்தும் பிரச்சாரம் செய்து அதன்வழி ஆதரவு தேடுகிற பிரச்சாரப்பணி.

இ] மொழி, நாடு, இனம் தொடர்பான கலை/கலாச்சார பண்பாட்டுச் சேகரிப்புப்பணி.

இம்முப்பெரும் பணிகளாக நாம் வகைப்படுத்தலாம்.

ஈழ விடுதலைக்கான இம்மூன்று பணிகளுள், பிரச்சாரப் பணியினை 'ஈழமுரசு' சிறப்பாகச் செய்துவருகிறது. புலம் பெயர்ந்த தமிழ மக்களுக்கிடையிலும், பிற நாடுகளுக்கிடையிலும் கருத்துப் பரவலுக்காக இவ்விதழ் ஆற்றுகிற பணி அளப்பரியது; வணங்குதற்குரியது.

இதழியல் வரலாற்றில், இதழின் தொடர்ச்சி என்பது இதழாசிரியரின் மறைவிற்கு பிறகு கேள்விக்குறியாகிவிடும். அல்லது அவருக்குப் பிறகு வருபவர்களால் அந்த இதழின் இலக்கு திசை திருப்பப்பட்டு விடும். அல்லது புதிய இதழாசிரியரின் தன்மைக்கு ஏற்றவாறு வளைக்கப்பட்டு விடும். இது பொதுவான நடைமுறை. ஆனால் ஈழமுரசு இதழோ இதழாளர் கஜன் மறைவிற்குப் பிறகும்கூட தொடர்ச்சியாக வெளிவந்து, அவரது இலக்கிலிருந்து முனையளவு கூட வழுவாது வெளியாவது கண்டு பெருமிதம் அடைகிறோம். இது இதழாசிரியர் வடிவமைத்த சிறப்பான அடித்தளத்தை, திட்டமிட்டுக் கட்டமைத்துள்ள மேற்கட்டுமானத்தையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது. ஆசைத்தம்பியால் தொடங்கப்பட்ட ஆருக்குச் சொல்லி அழ அருமைத்தம்பியால் தொடரப்படும் பொழுது கஜனின் இழப்பு தெரியவேயில்லை.

இலக்கியத்தை நுட்பமாக நேசித்து, இதழாளர்களோடு அன்போடு தொடர்பு கொண்டு, இதழின் பரவலுக்காக ஒவ்வொரு நிமிடமும் சிந்தித்து, இயக்கியவர் இதழாளர் கஜன். புல் நுனியில் மின்னுகிற பனி உருண்டையை ரசிக்கவும், போர் முனைப் போராளிக்கு இணையாகப் போராடவும் செய்கிற இவரது தன்மை எல்லோருக்கும் எளிதில் அமைந்துவிடாது. இலக்கியத்தையும், ஈழ விடுதலையையும் தனது இரண்டு கண்களாக்கி, இன்முகத்தோடு இயங்கிய சிறந்த இதழாளர் இவர்.

26.10.96 இல் இவர் சுட்டுக் கொல்லப்படும் வரை, 93 ஈழமுரசு இதழ்களை இவர் வெளியிட்டுள்ளார். அவரது இறுதி இதழான இதழ் 93 இல் 'பாலஸ்தீனமும் தமிழீழமும்' எனத் தலையங்கமிட்டு, பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்கக் குரல் கொடுத்த பிரெஞ்சு ஜனாதிபதி, தமிழீழத்தையும் அங்கீகரிக்கக் குரல் கொடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். அவரது ஆழ்மன வேண்டுகோள் வீண்போகவில்லை. இன்று தமிழீழத்திறகான அங்கீகரிப்பு பலராலும் சுட்டிக் காட்டப்படுகிறது.

அவரது மறைவிற்குப் பிறகு வெளியான, 94 ஆவது இதழில் ஈழமுரசின் பணி தொடரும் எனத் தலையங்கத்தில் குறிப்பிட்டு எமது ஆசிரியர் கஜேந்திரனை அழித்து விட்டால் ஈழமுரசு பத்திரிகை அழிந்துவிடப் போவதில்லை. உண்மையை எழுதுவது, உண்மைக்காய் எழுதுவது என்ற அதன்பணி தொடரும் என்று குறிப்பிட்டும், அடுத்த இதழின் தலையங்கத்தில் 'எமது தேசத்தின் விடுதலையை, எமது மக்களின் விடுதலையை, ஒரே இலட்சியமாகக் கொண்ட நாம், இழப்புகளைக் கண்டு துவண்டு விடப்போவதில்லை, ஏனென்றால் மரணம் வாழ்வின் முடிவல்ல என்று நம்புவோர்கள் நாம், இந்த வகையில் நாம் எழுவோம். இன்னும் வீறு கொண்டெழுவோம்... எதிரியின் முக முடிகளைக்

## ஓர் தமிழக மடல்

கிழித்தெறிவோம்... ஆசைத்தம்பியாய், அபிதயனாய், இளங்கோவாய எமது ஆசிரியர் கஜேந்திரன் தொடங்கி வைத்த பணியை இன்னும் தீவிரமாகச் செய்வோம்' என்று சூளுரைத்தது.

அதற்குப் பிறகு தொடருகிற ஒவ்வொரு ஈழமுரசும் கஜன் முகமாகத்தான் தெரிகிறது. கஜன் மறையவில்லை; இன்றும் நம்மோடு வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார். இதுதான் ஈழ விடுதலைக்காக போராடுகிற புலிகளின் அடிப்படை, ஈழவிடுதலை என்பது இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பயணம். பயணம் வெற்றி பெறுவது உறுதி. பயணத்தை நடாத்திச் செல்பவர்கள் மறைந்தாலும் பயணம் தொடரும். வீரர்கள் புதைக்கப்படுவதில்லை; விதைக்கப்படுகிறார்கள். ஒன்று நூறாகி... நூறு ஆயிரமாகி...

வாரா வாரம் வருகிற ஈழமுரசைக் காணும்போதெல்லாம் உற்சாகம் மேலிடும். தமிழனாய்ப் பிறந்துள்ளோமெனத் தன்மானம் மேலோங்கி நெஞ்சு நிமிரும்.

> **புல் நுனியில் மின்னுகிற பனி உருண்டையை ரசிக்கவும், போர் முனைப் போராளிக்கு இணையாகப் போராடவும் செய்கிற இவரது தன்மை எல்லோருக்கும் எளிதில் அமைந்துவிடாது. இலக்கியத்தையும், ஈழ விடுதலையையும் தனது இரண்டு கண்களாக்கி, இன்முகத்தோடு இயங்கிய சிறந்த இதழாளர் கஜன்.**

ஈழமுரசின் பணி மகத்தானது. இது இனியும் இனிதே தொடரட்டும்.

சரியான திட்டமிடுதலும், முறையான வழிநடத்துதலும் வெற்றி பெறுவதற்கான அடித்தளம். ஈழமுரசு இவ்வடித்தளங்களைத் தனதாக்கி வெற்றி பெற்று வீர நடை போடுகிறது.

**'ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தாற் செயின்'** (திருக்குறள்: 484)

ஞாலமே கிடைக்கும் என்கிறார் வள்ளுவர், தமிழீழம் கிடைக்காமல் இருக்குமா?

**பொள்ளாச்சி நசன்**

## நடைபாதை குறிப்புகள்

### மனதை உறுத்திய அ.செ. முருகானந்தத்தின் மறைவு

ஈழத்தின் மூத்த முதிய எழுத்தாளர் அ.செ. முருகானந்தம் காலமாகிவிட்டார் என்று கடந்தவாரம் என் காதில் விழுந்த செய்தி மனதைக் கொஞ்சம் உறுத்தியது. மனிதர்களாய் இருந்தாலென்ன, விலங்குகளாய் இருந்தாலென்ன பிறந்த எல்லா உயிரினங்களும் ஒருநாள் இறப்பது நியதிதான். இதில் உயர்ந்த உயிர், தாழ்ந்த உயிர், எழுத்தாளன், பத்திரிகையாளன், அரசியல்வாதி என்ற பேதங்கள் எல்லாம் கிடையாது.

ஆனால் அ.செ முருகானந்தத்தின் இறப்பு மனதை உறுத்தியதற்குக் காரணம் அவர் இறந்த இடமும் அவர் இறந்தபோது இருந்த நிலையுமே.

ஈழத்து இலக்கிய உலகின் முன்னோடி; மகாஜனா தந்த மும்மணிகளில் (அ.செ. முருகானந்தம், அ.ந கந்தசாமி, மகாகவி) ஒருவர் என்றெல்லாம் எழுத்திலும், பேச்சிலும் வரிக்கு வரி, வார்த்தைக்கு வார்த்தை இங்கே புகலிட நாடுகளில் கூட முன்னுதாரணம் காட்டப்படும் அவர், மாற்றிக் கட்ட ஒரு துண்டு வேட்டிக்கே வழியில்லாத நிலையில் திருமலையில் உள்ள முதியோர் இல்லத்தில் நோயிலும் பிணியிலும் வாடி, ஒரு அநாதையாக இறந்திருக்கின்றார்.

1921-ம் ஆண்டில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் படிக்கின்ற காலத்திலேயே எழுதத் தொடங்கிய அ.செ.மு, ஈழகேசரி, மறுமலர்ச்சி, எரிமலை, சுதந்திரன், வீரகேசரி ஆகிய இதழ்களிலும், யாழ்ப்பாணம் ஈழநாட்டிலும் பணியாற்றியிருந்தார்.

1943 இல் மறுமலர்ச்சிச் சங்கம் உருவாகக் காரணமாக இருந்த அவர்- அச் சங்கத்தின் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

அ.செ.மு. நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதிய போதிலும் மனித மாடு (1986) என்ற சிறுகதைத் தொகுதிதான் இதுவரை நூலுருவில் வெளிவந்திருக்கிறது. 'புகையில் தெரிந்த முகம்' இவரது மண்மணம் கமழும் தரமான குறுநாவல்களில் ஒன்று.

அ.செ. முருகானந்தத்தை தலை சிறந்த இலக்கியவாதி, மாபெரும் சிந்தனையாளன், மண்ணின் மணத்தை எழுத்தில் வடித்த மாமனிதர் என்றெல்லாம் நம்முடைய இலக்கிய வாதிகளும், இலக்கியச் சந்திப்புக்காரர்களும், கலை இலக்கிய அமைப்புக்களும் இனி வருங்காலங்களில் பெரும் பொருட் செலவில் இலக்கிய விழா எடுக்கும்போது போற்றி புகழ்ந்துரைக்க தயங்கமாட்டார்கள் என்பது உண்மை. ஆனால் அவர் உயிருடன் இருந்தபோது அவருக்கு என்ன செய்தார்கள் என்ற கேள்வி அவர்களை என்றும் குற்றவாளிக் கூண்டில் நிற்க வைத்துக் கொண்டே இருக்கும்.

கடைசி வரை திருமணமே செய்யாமல் எழுத்துப் பணியே உயிர் மூச்சென்று வாழ்ந்த அவர், யாழ்ப்பாணக்குடாநாடு இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்பே கவனிப்பாரற்ற நிலைக்குத் தள்ளப்பட்டு ஒரு அநாதையாக உயிரிழந்திருக்கிறார்.

- நாடோடி

## ஈழமுரசு வாசகர் வட்டத்திற்கான அழைப்பு

**ஈழமுரசுக் குடும்பம் தனது வாசகர்களுக்கான அமைப்பினை ஜேர்மனி நாட்டில் உருவாக்குவதற்கு முடிவு செய்துள்ளதென்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.**

*ஈழமுரசின் வாசகர்கள் தங்களுக்கிடையில் ஒரு தொடர்பாடலை ஏற்படுத்திக் கொள்வதற்கும், ஈழமுரசின் வளர்ச்சியில் பங்கெடுப்பதற்குமாகவே இந்த வாசகர் வட்டம் அமைக்கப்படுகிறது. இந்த வாசகர் வட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு ஆர்வலர்கள் அழைக்கப்படுகின்றீர்கள்.*

முழுப்பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
தொலைபேசி: ..............................

எழுத்துத்துறை, இலக்கியம் போன்றவற்றில் ஆர்வமிருப்பின் அதுபற்றிய குறிப்புகளும் ஈழமுரசின் வளர்ச்சிக்கான உங்கள் ஆலோசனை குறிப்புகளும் வரவேற்கப்படுகின்றன.

அலுவலக உபயோகத்திற்கு வாசகர் எண்..........
ஈழமுரசு சந்தாதாரராயின் சந்தா எண் G- .......

**நா. கதிர்காமநாதன்**
Rosen Str-16
40882 Ratingen

# ஐரோப்பிய நாடுகள் மற்றும் கனடாவில்
# மாவீரர் நாள் - 1997




## பிரான்ஸ்

காலம்: 30.11.1997 ஞாயிறு
நேரம்: பிற்பகல் 4.00 மணி
இடம்: **L.S.C**
**144/146, Av. Du Président Wilson,**
**93210 La Plaine St. Denis**
**(M°: Porte de la Chapelle**
**RER B: La Plaine Voyageurs)**

* * *

காலம்: 23.11.97 ஞாயிறு
நேரம்: பிற்பகல் 3.00 மணி
இடம்: **Salle Des Fetes**
**9, Rue Gabriel Peri,**
**93270 Sevran.**
(Sevran மேரிக்கு அருகாமையில்)
(பஸ் இலக்கம் : 607-A,B, 618, 147
பஸ் தரிப்பிடம்: Place Gastion Bussiere, Sevran.
**RER -B: Sevran Livry - Dir: Mitry Clay)**

* * *

காலம்: 29.11.1997 சனிக்கிழமை
நேரம்: மாலை 15.00 மணிக்கு.
இடம்: **La Maison Des Associations**
**La Place Des Orphelins.**
**67000 Strasbourg.**

## ஜேர்மனி

காலம்: 22.11.1997 சனிக்கிழமை
நேரம்: மாலை 16.00 மணி
இடம்: **Revier Park, Gysen Berg,**
**Am Revier Park 40,**
**44627 Herne.**

## சுவிஸ்

காலம்: 07.12.1997 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 2.00 மணி
இடம்: **Bea Expo, Halle 12,**
**3000 Bern.**

## பிரித்தானியா

காலம்: 29.11.97 சனிக்கிழமை
நேரம்: மாலை 6.30
இடம்: **Waterfront Leisure Centre**
**High Street, Woolwich,**
**London SE 18.**
**(Bus Routes: 51, 53, 122, 96,177,180,272,161**
**British Rail: Woolwich Arsenal *or* Woolwich Dockyard. Woolwich Ferry: South Side.**

## நெதர்லாந்து

காலம்: 30.11.97 ஞாயிறு மாலை 3 மணி
இடம்: **De Rijswijkse Schouwburg,**
**Generaal Spoorlaan 10,**
**Rijswijk (Den Haag)**
(Rijswijk புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்)

## டென்மார்க்

இடம் - **Sonderagerskolen, Herning**
காலம் - 29.11.97 சனிக்கிழமை 16.00 மணி

இடம் -Kobenhavn
காலம் - 22.11.97 சனிக்கிழமை 16.00 மணி

## நோர்வே

Floroo samfunnhuset
6900 Floroo.
காலம் - 22.11.97 சனிக்கிழமை
மாலை 6.00 மணி

* * *

Ortun skole
5028 Bergen.
காலம் - 23.11.97 ஞாயிறு
மாலை 5.00 மணி

* * *

Vardoo kino senter
9950 Vardoo.
காலம் - 22.11.97 சனிக்கிழமை
மாலை 7.00 மணி

* * *

SamfunnShuset. Oslo.
காலம் - 29.11.97 சனிக்கிழமை
மாலை 6.00 மணி

* * *

Lura Bydelshus
Prinsens vei - 14 A
4300 Sandrics.

காலம் - 22.11.97 சனிக்கிழமை
மாலை 6.00 மணி

* * *

Katedral skole
7001 Trondheim.
காலம் 22.11.97 சனிக்கிழமை
மாலை 6.30 மணி

* * *

Hammerfest Kino
9600 Hammerfest.
காலம் - 22.11.97 சனிக்கிழமை
மாலை 5.30 மணி

## கனடா

காலம்: **29.11.97: சனிக்கிழமை மாலை 5.00 -10.30**
**North Albion Collegiate Lustitute, 2580 Kipling Avenue, Kipling.**
காலம்: **30.11.97 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00-10.30**
**Woburn Collegiate. 2222 Ellesmere Road, Scarborough**



# புகலிட நிகழ்வுகள்

## பிரான்ஸ்-சேர்ஜி பொந்துவாஸில் நவராத்திரி விழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சேர்ஜி - பொந்துவாஸ் கிளையி னர் நடாத்தும் தமிழ்ச்சோலைக் கல்விக் கூட மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும், பொதுமக்களும் சேர்ந்து நவராத்திரி விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடி னர். இவ்விழா 11.10.97 சனிக் கிழமை விஜயதசமி நாளன்று பிற்பகல் 5.00 மணிக்கு சேர்ஜி - துலூஸ், மெய்சன் டி கர்த்தியர் (Maison de quartier toulouse) மண் டபத்தில் ஆரம்பமானது.




தமிழ்ச் சோலையின் ஆரம்ப வகுப்பு மாணவர்களான அனோ ஜன் சண்முகநாதன், அபினாசா சண்முகநாதன், அகிலன் சிறீ பதி, விதூஷன் சிவஞானசுந்த ரம், சாந்தன். புஸ்பராசலிங்கம், சோபிகா சரவணபவன், பிர சாந் சரவணபவன் ஆகியோரின் பண்ணிசையைத் தொடர்ந்து ஆசிரியர்களினதும், பெற்றோர் களினதும் கூட்டு வழிபாடும், பூசையும் வெகுசிறப்பாக நடை பெற்றது.

விழாவின் சிறப்பம்சமாக மாணவிகள் அபினாசா சண் முகநாதன், அபிராமி தியாக ராஜா, நிஷா செல்லத்துரை, மேரி புஸ்பராசலிங்கம் ஆகி யோர் கலைவாணி வழிபாட் டின் சிறப்புகள் பற்றியும், சேர்ஜிகா சுப்பிரமணியம் தமிழ ஈழத்தின் சித்தரான யோகர் சுவாமிகளின் மகிமைகள் பற்றி யும் அழகு தமிழில் எடுத்துக் கூறினர். தொடர்ந்து லாவ ண்யா இராசநாயகம், மைதிலி இராசநாயகம், ருக்சலா அஜ ரன், கார்த்திகா சிவகுநாதன், அபிராமி தியாகராஜா, ஆர்த்தி சாந்தகுமார் ஆகியோர் சரஸ்வதி தேவியின் துதிப் பாடல்களைப் பாடி மனதிற்கும் செவிக்கும் விருந்தளித்தனர்.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. நவரத்தினசிங்கம் அவர்களால் சிறார்களுக்கு வித்தியாரம்பம் செய்து வைக்கப்பட்டது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சேர்ஜி கிளையின் தமிழ்ச் சோலை மாணவர் கல்வி, கலை கலாச் சாரங்களில் மட்டுமன்றி ஆன்மீ கப் பாதையிலும் முன்னோடி களாகத் திகழ்வதை அன்றைய நவராத்திரி விழா நமக்கு எடுத் துக் காட்டியது.

## நோர்வேயில் நடந்த திலீபன் நினைவு விழா



திலீபனின் 10ஆம் ஆண்டு நினைவாக, நோர்வே ஓஸ்லோவில் கடந்த 28.09.97 அன்று கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. இந் நிகழ்ச்சி யில் சிறப்புரைகள், கவிதா நிகழ்வு, திலீபகானம் இசை நிகழ்ச்சி என்பன இடம் பெற்றுள்ளன. நூற்றுக்கணக்கான மக்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தியாகி திலீபனுக்கு தமது வீரவணக்கத்தை தெரியப்படுத்தினர்.

## வடநோர்வே வார்டோ தமிழ்ச் சங்கத்தின் 7-ம் ஆண்டு விழா

வடநோர்வே வார்டோ தமிழ்ச் சங்கத்தின் 7-ம் ஆண்டு நிறைவுவிழா 02.11.1997 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு வார்டோ திரையரங்கில் மாந கரசபை முதல்வர் கார்மூட் லாசன் குத்துவிளக்கேற்ற சிற் றம்பலம் நாகலிங்கத்தின் வர வேற்புரையுடன் ஆரம்ப மானது. தலைவர் திரு சின் னப்பா தனபாலசிங்கம் தனது உரையில், சங்கத்தின் நோக்கம் இங்குள்ள சிறுவர்களின் தமிழ் வளர்ச்சிக்கும், கலை கலாச் சார முன்னேற்றத்திற்கும் முக்கி யத்துவம் வழங்குவதெனவும், நோர்வேஜிய தமிழ் மக்களிடை யிலான பலமான தொடர்பு களை ஏற்படுத்துவதில் சங்கம் முக்கிய கவனமெடுக்கும் என வும் கூறினார். இதனைத் தொடர்ந்து தமிழ் நோர்வேஜிய மாணவர்களின் நடனமும், நாட கமும் அத்துடன் நோர்வேஜிய இசைக் குழுவுடன் இணைந்து திரு. நாகலிங்கமும், திரு.சிவ சோதி அவர்களும் ஈழத்துப் பாடல்களைப் பாடினார்கள். இத்துடன் நோர்வேஜிய சாமிஸ் மக்களின் நடனத்துடன் பாடல் களும் இடம் பெற்றன. இவ் விழாவிற்கு நோர்வேஜிய மக் கள் பெருமளவில் வருகை தந் திருந்தனர். திரை அரங்கு நிரம்பி வழிந்தது. இம் மாநகர சபை ஆளுநர், தமதுரையில், 1970-ம் ஆண்டே இங்கு முதல் தமிழர் வந்தார்கள் என்றும் 2-ம் உலகப் போரின்போது 75% மானோர் அமெரிக்காவில் குடி யேறினர். அதே போன்று தமிழ் மக்களும் நோர்வே வருவது போரின் கெடுபிடி என அறி வோம் எனவும் சொன்னார். ஆண்டுகளில் வியக்கக்கூடிய முறையில் தமிழ்ச் சங்கம் முன் னேற்றம் அடைந்துள்ளதென வும், நோர்வேஜிய மக்களைப் போல தமிழ் மக்களும் சட்டம் அறிந்திருக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு சட்டங்களையும் விதிகளையும் அறிவதற்கு விரை வில் ஏற்பாடு செய்வதாகவும் கூறினார். தமிழ்ச் சங்கத் தலை வர் திரு தனபாலசிங்கத்திற்கு வார்டோ சின்னம் பொறிக்கப் பட்ட பொத்தானை அணிவித் தார்.

26.10.97-ல் தமிழர்களின் முக் கியத்துவம் வாய்ந்த கருத்துக்க ளையும், தமிழ் மக்கள் நோர்வே வந்த காரணங்களையும் 16 பக் கங்கள் கொண்ட பத்திரிகை நோர்வேஜிய மொழியில் பிரசு ரிக்கப்பட்டு நோர்வேயில் பல பகுதிகளுக்கும் அனுப்பி வைக் கப்பட்டது. இப் பத்திரிகையைப் பாராட்டி கடிதங்களும் தொலை பேசிகளும் வந்துகொண்டிருந் தன.

காமபெஸ்ற் வெளிநாட்டு அலுவலகப் பொறுப்பாளர் சார்பிலும், தமிழ்ச் சங்கத்தின் சார்பிலும் கோபாலகிருஷ்ணன் கண்ணன் என்பவர் விமானம் மூலம் வார்டோவிற்கு வருகை தந்து பூச்செண்டு அளித்து வாழ்த்துக்கள் கூறினார்.

இதனைத் தொடர்ந்து வெளி நாட்டு அலுவலக உத்தியோ கஸ்தர் திரு. நுவால் வாழ்த்துத் தெரிவித்ததுடன் வார்டோவின் வரலாறுகளை தமிழ் மக்களுக் குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும், உணவும், இசையும், உலக ரீதியான ஒருஇனமொழி என்றும் தமிழ் மக்களோ அல் லது நோர்வேஜிய மக்களோ தாங்கள் சிறந்தவர்கள் எனக் கூறுவதில்லை எனவும் வட பகுதியில் வாழ்பவர்கள் பொறு மையானவர்கள் எனவும் குறிப் பிட்டார்.

மாநகர முதல்வர் கர்மூட் லாசன் பிறந்தநாள் பரிசு கொடுப் பது வழமை. அதேபோன்று நானும் பரிசு கொடுக்க விரும் புகிறேன் என நீண்ட கால வர லாறு அடங்கிய 2 புத்தகங்களை கல்லூரி மாணவனாகிய திரு. அனுசன் நாகலிங்கத்திற்கு அன் பளிப்புச் செய்தார்.

பத்திரிகை வெளியிடுவதற்கு மூல கர்த்தாவாக இருந்த துரை ராஜா குபேரன் அவர்கள் பூச் செண்டு கொடுத்து கௌரவிக் கப்பட்டார்.

8.30 மணியளவில் மார்க் கண்டு சிவபாதனின் நன்றியு ரையுடன் விழா இனிதே நிறை வேறியது.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## சூரிச்சில் இசைக்கச்சேரி

சூரிச்சில் ஞாயிறு 09.11.97 பிற் பகல் தமிழர் புனர்வாழ்வுக் கழ கத்தின் 12-ம் ஆண்டு நிறைவை யொட்டி சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம், அவர் சகோதரன் சுபாஸ் சந்திரன் ஆகியோரின் இசைக்கச்சேரியைப் பார்த்து, கேட்டு இரசிப்பதற்காக மீண் டும் ஒரு மக்கள் கூட்டம் அலைமோதிக்கொண்டது.

வழமைபோல் ஈழ மலர்வுக் காக தங்கள் இனிய உயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களும், பொதுமக்களும் அஞ்சலி செலுத் தப்பட்டு சுவிஸ் தமிழர் புனர் வாழ்வுக் கழக அமைப்பாளர் திருசண்முகதாசன் அவர்களின் வரவேற்பு உரை உள்ளிட்ட புனர்வாழ்வுக் கழக செயற்பாடு கள், அதன்பால் மக்களுக்குள்ள கடமைகள் என்பனபற்றிய பேச் சுடன் இசைநிகழ்ச்சி இனிதே ஆரம்பமானது. பக்திப்பாடல் கள், கர்நாடக சங்கீதப்பாடல்கள், சுதந்திரப் பாடல்கள் என்று பல வகையான பாடல்கள் பாடப் பட்டபோதும், சுதந்திர உணர்வு களை ஊட்டும் பாடல்களை பாடும்போது அதற்கு தனி வர வேற்பு, கரகோஷம். அதுமட்டு மன்றி அப்பாடல்களுடன் ஒன் றித்த ஒருநிலையை மக்கள் மத் தியில் ஏற்படுத்தியது என்றால், சுதந்திர உணர்வு எந்தவகையில் மக்களிடம் குடிகொண்டிருக்கி றது என்பதையே எடுத்துக்காட் டுகிறது.

சர்வதேச செயலகத்தைச் சேர்ந்த திரு.சிவநேசன் அவர்க ளுடைய பேச்சு சிந்தனையைத் தூண்டி, மக்களின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையிலேயே காணப்பட்டது. அவருடைய பேச்சில் தற்போது ஈழத்தில் மாரி காலம் நிகழ்வதால் இடம் பெயர்ந்து மக்கள் படும் அவலநிலையையும் எடுத்துக்கூறி, சுவி சில் வாழ் ஒவ்வொரு தமிழ னையும் உதவி செய்யக்கோரிய துடன், புனர்வாழ்வுக் கழகத் தின் செயற்பாடுகளுக்காக 7 இலட்சம் மக்கள் காத்திருப்பதா கவும், ஆதலால் நீங்களும் தாய் மண்ணினை நினைவுகொண்டு இன்றைய சூழ்நிலையில் வரு மானத்தில் 15% ஒதுக்கி பங்க ளிக்க வேண்டுமெனவும் கேட் டுக் கொண்டார்.

இசைக் கச்சேரி நடாத்திய பொன் சுந்தரலிங்கம் பேசுகை யில், 1995-ம் ஆண்டு முல்லைத் தீவு ஓமந்தையில் தான் பட்ட கஷ்டத்தில் த.பு. கழகத்தின் உத விகளையும் பாராட்டி, கஷ்டங் களுக்கு உதவுமுகமாக நடை பெறும் நிகழ்ச்சிகளில் மக்களை பெருமளவில் கலந்துகொண்டு உதவுமாறும் கேட்டுக் கொண் டார். இவ்விழா புரட்சிப் பாடல் களுடன் இனிதே நிறைவு பெற் றது.

தொகுப்பு—
சங்கையூர் குமார்.



சுவிஸ் சூரிச்சில் 26.10.97 இல் நடைபெற்ற லெப்கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகியோரின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வின் போது பிடிக்கப்பட்ட நிழற்படம்.

# உலகக்கோப்பை உதைபந்தாட்டம் - 1998

### சவுதி அரேபியா

அரபு உலகின் நவீன கர்த்தாக்கள் என வர்ணிக்கப்படும் சவுதி அரேபியா இரண்டாவது முறையாக உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிச் சுற்றுக்கு தெரிவாகியுள்ளனர். 1994ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்ற பதினேழாவது உலகக் கிண்ண இறுதிச் சுற்றுக்கு முதல்முறையாக பங்குபற்றத் தெரிவாகிய இவர்கள் இன்று சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் வரிசைப் படுத்தலில் முப்பத்தியேழாவது இடத்தை வகிப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 12.11.97 அன்று கட்டாரின் தலைநகர் டோகாவில் நடைபெற்ற கட்டாருக்கு எதிரான குழுநிலைப் போட்டியில், ஆட்டத்தின் 64-வது நிமிடத்தில் அல் சகராணி என்பவர் அடித்த கோல் மூலம் 1-0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்று 1998ம் ஆண்டு பிரான்சில் நடைபெறும் பதினெட்டாவது உலகக்கிண்ண இறுதிச் சுற்றில் பங்குபெறும் தகுதியைப் பெற்றுள்ளனர்.

முதலாவது குழுநிலைப் போட்டியில் தாய்வான், மலேசியா, வங்காளதேசம் ஆகிய நாடுகளுடன் நடைபெற்ற ஆறு ஆட்டங்களில், ஐந்தில் வெற்றியும், ஒன்றில் வெற்றி தோல்வி அற்ற பெறுபேறையும் பெற்று பதினாறு புள்ளிகளுடன் முதலிடத்தைப் பெற்று இரண்டாவது குழுநிலைப் போட்டிகளில் பங்குபெறும் தகுதியைப் பெற்றனர். இவ் ஆறு ஆட்டங்களிலும் பதினெட்டு கோல்களை அடித்து ஒரு கோலையும் பெற்றிருந்தனர்.

இரண்டாவது குழுநிலைப் போட்டியில் மக்கள் சீனக் குடியரசு, ஈரான், குவெய்த், கட்டார் ஆகிய நாடுகளுடனான எட்டு ஆட்டங்களில் நான்கில் வெற்றியும், இரண்டில் வெற்றி தோல்வியற்ற பெறுபேற்றையும், இரண்டில் தோல்வியையும் பெற்று பதின்னான்கு புள்ளிகளுடன் குழு A-யில் முதலிடத்தைப் பெற்றனர்.

போர்த்துக்கல்லைச் சேர்ந்த எடுவார்டோ விங்கடா (Eduardo Vingada) என்பவரை பயிற்சியாளராகக் கொண்டு இயங்கிவந்த இவ் அணி, முதல் நான்கு ஆட்டங்களில் ஏழு புள்ளிகளையே பெற்றிருந்தனர். இவ்வணியில் செயற்பாட்டில் உத்வேகமும் மாறுதலும் தேவை என்பதால் இவர்களது உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவரான இளவரசர் பெய்சல் பகிட் (Faysal Fahd) பயிற்சினாரில் மாற்றம் வேண்டும் என உணர்ந்து, 12.10.97 தொடக்கம் ஜேர்மனியைச் சேர்ந்த ஒற்றோ பிப்ஸ்ரர் (Otta Pfister) என்பவரை பயிற்சியாளராக மாற்றம் செய்தார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மீதி நான்கு ஆட்டங்களில் 7 புள்ளிகளையே பெற்றிருந்த போதிலும், வீரர்களிடையே தன்னம்பிக்கை மேலோங்கி இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

1994ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்ற பதினேழாவது உலகக் கிண்ண இறுதிச் சுற்றின் முதல் சுற்றில் நெதர்லாந்துடனான போட்டியில் 2-1 என்ற கோல் அடிப்படையில் தோல்வி கண்ட இவர்கள் மொரோக்கோ, பெல்ஜியம் ஆகியவற்றுடனான போட்டிகளில் முறையே 2-1, 1-0 என்ற நிலையில் வெற்றிபெற்றனர். சுவிடனுடன் நடைபெற்ற அரைக்கால் இறுதியாட்டத்தில் 3-1 என்ற கோல் அடிப்படையில் தோல்வி அடைந்தனர். இப்பெறுபேறு இவர்களுக்கு பெரும் உத்துசக்தியானதன் விளைவே இம்முறையும் உலகக் கிண்ண இறுதிச்சுற்றுக்குத் தெரிவாகியமையாகும்.

1984ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற ஒலிம்பிக் உதைபந்தாட்ட போட்டியில் முதல் முறையாக பங்குபெறும் வாய்ப்பைப் பெற்ற இவர்கள 1984, 1988, 1996-ம் ஆண்டுகளிற்கான ஆசியக்கிண்ணத்தை தம் வசமாக்கியதோடு, 1994ம் ஆண்டிற்கான வளைகுடாநாட்டு வெற்றிக் கிண்ணத்தையும் வெற்றிகொண்டவர்களாவர்.

- ஜே. ஜே.

# பிரான்ஸ் வெற்றி

1998ம்-ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை நடாத்தும் பிரான்சிற்கும், இச்சுற்றுப் போட்டியில் பங்குபெறும் தகுதியைப் பெற்ற ஸ்கொட்லாந்திற்கும் இடையே லியோனில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் பிரான்ஸ் 2-1 என்ற கோல அடிப்படையில் வெற்றிபெற்றது.

ஆட்ட ஆரம்பம் முதலே எதிரணியின் தாக்குதல் எல்லைக்குள் தமது தாக்குதலை தீவிரப்படுத்தியிருந்த பிரான்ஸ் அணியினர், பன்னிரண்டாவது நிமிடம், சிடன் (Zidane) எதிரணியினரின் தாக்குதல் எல்லைக்குள் கிடைத்த பந்தை தனக்கு சற்று முன்னே நின்ற கிவாஸ் (Guivarch) நோக்கி தட்டிக் கொடுத்தார். கோல் எல்லைக் கோட்டில் இருந்து 7 மீற்றர் தொலைவில் கிடைத்த பந்தை தனது முழுப் பலத்தையும் பிரயோகித்து உதைக்க, அது கோல் எல்லைக் கம்பத்திற்கு மேலாகச் சென்றது. அதே போலவே இருபத்தியொன்பதாவது நிமிடம் இப்றாகிம் பா (Ibrahim Ba) வலது புறமிருந்து தட்டிக்கொடுக்க எதிரணியின் பாதுகாப்பு வீரர்கள் எவரும் இல்லாத நிலையில் கிடைத்த அந்தப் பந்தை மீண்டும் கிவாஸ் தவறவிட்டது மிகவும் கண்டனத்திற்குரியது. தாக்குதல் வீரர்களுக்கு 'அத்திபூத்தாற் போல்' கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைத் தவறவிடுவது மிகவும் வருந்தத்தக்கது. பாதுகாப்பு வீரர்கள் எத்தகைய தந்திரத்தையும் பாவித்து தாக்குதல் வீரர்களுக்கு கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை குழப்பியடிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்கும்போது தாக்குதல் வீரர்கள் தமது கடமையில் அசிரத்தையாக இருப்பது விரும்பத்தகாதது.



34-வது நிமிடம் 25 மீற்றர் தூரத்தில் இருந்து, தூரம் (Thuram) எதிரணியினரின் தாக்குதல் எல்லைக்குள் அடிக்க அதனை சிடன் தலையால் இடிக்க முற்பட அது தவறிச் சென்றது. சற்றுப் பின்னே நின்ற லைக்ல் (Laigle) அப்பந்தினை இடது காலினால் அடித்து முதலாவது கோல் போட்டார்.

கணப் பொழுதில் தம்மைச் சுதாகரித்துக்கொண்ட ஸ்கொட்லாந்து அணியினர் 34 செக்கன்கள் இடைவெளியில் தமது முதலாவது கோலை அடித்தனர். டிசெயி, பெற்றிற் போன்ற பிரான்ஸ் அணியின் பாதுகாப்பு வீரர்களின் முதுகில் பட்டு வந்த பந்தை ஸ்கொட்லாந்தின் வீரர் கொலின்ஸ், பிரான்ஸ் அணியின் பாதுகாப்பு வலயத்துக்குள் அடிக்க தாக்குதல் வீரர் டியூறி, கோல் எல்லைக்குள் அடித்து ஆட்டத்தை சமப்படுத்தினார்.

77-வது நிமிடம் ஸ்கொட்லாந்தின் தாக்குதல் எல்லைக்குள் தனக்குக் கிடைத்த பந்தை லைக்ல் நோக்கி சிடன் தட்டிக் கொடுத்தார். அதனை அடிக்க முற்பட்ட லைக்ல்-லை அவரது முழங்காலிற்கு கீழ் இடறி வீழ்த்தினார் வீரர் வியூர்வி. அதனால் கிடைத்த தண்டனை உதை மூலம் தோர்க்கேப் (Djorkaeff) கோல் ஒன்றை அடித்து தமது அணியை 2-1 என்ற அடிப்படையில் வெற்றிபெறச் செய்தார்.

— ஜே.ஜே.

# கிரிக்கட்

### இங்கிலாந்து

கிரிக்கட்டின் தாயகம் என்று இங்கிலாந்தே கருதப்படுகிறது. முதல் முதல் டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்ட நாடுகள் இங்கிலாந்தும் அவுஸ்திரேலியாவுமாகும். முதல் மூன்று உலகக் கிண்ணப் போட்டியை நடாத்திய நாடாகவும், அத்தோடு 1999-ம் ஆண்டில் நடைபெற இருக்கும் 7வது உலகக் கிண்ணப் போட்டியை நடாத்த இருக்கும் நாடாகவும் இருக்கின்ற போதும் பலமுறை இறுதிப் போட்டியில் காலடிபதித்த இங்கிலாந்து வெற்றிக்கிண்ணத்தை தூக்கி வெற்றி கொண்டாட கொடுத்துவைக்கவில்லை.

சர்வதேச அளவில் மட்டுமன்றி உள்ளூர்ப் போட்டிகளிலும் பல 'கவுன்ரி'களை (County) உருவாக்கி பல இலட்சம் பணத்தைக் கொட்டி, உலகின் தலைசிறந்த வீரர்களை விளையாட வைக்கின்றார்கள். இவ்வாறு தெரிவுசெய்யப்படும் வீரர்களுக்காக 'கவுன்ரிகள்' போட்டி போட்டு ஒரு பல வியாபாரத்தையே நடத்துகின்றன. கோடைக் காலமானால், இங்கிலாந்தில் கிரிக்கட் பருவம் உலகையே இழுத்தெடுத்துவிடும்.

அவுஸ்திரேலியாவின் தலைசிறந்த வீரரான சேர் டொனால்ட் பிரட்மன் தொடக்கம் இன்றைய இந்திய அணித் தலைவர் டெண்டுல்கார் வரையான தலைசிறந்த வீரர்கள் யாவரும் இங்கிலாந்தில் விளையாடத் தவறவில்லை. இப்படிப்பட்ட சிறப்புக்களைக் கொண்ட இங்கிலாந்து அணியின் தற்போதைய நிலை திருப்திகரமாக இல்லை. இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல் அதர்டன் (Michael Atherton) தொடர்ந்து பதவி வகிப்பாரா? அல்லது அவரை தொடர்ந்து பதவியில் வைத்திருப்பதா? என்ற நிலையில் அணி தள்ளாடி வருகிறது. இங்கிலாந்து அணியில் கூடிய தடவை அணித் தலைவராக இருந்தவர் என்கின்ற பெருமை அதர்ட்டனுக்கு உண்டு. இதுவரை இவர் 46 தடவைகள் அணியை வழிநடாத்தியுள்ளார். இதற்கு முன்பு 1955 இலிருந்து 1961 வரை 41 தடவைகள் பீற்றர் மே (Peter May) என்பவர் இங்கிலாந்து அணியை வழிநடத்தியுள்ளார். பல வெளிநாட்டவர்கள் அதாவது வெளிநாடுகளில் பிறந்து இங்கிலாந்து பிரஜா உரிமையைப் பெற்றவர்கள் அன்றி இங்கிலாந்தில் பிறந்து பிரஜா உரிமையுடைய வெளிநாட்டு வம்சாவளிகள் பலர் இங்கிலாந்து அணியில் விளையாடியும், விளையாடிக்கொண்டும் இருக்கிறார்கள். தற்பொழுது அணியில் உதவித் தலைவராக இருக்கும் நாசர் குசைன் (Nassar Hussain) தமிழகத்தின் சென்னையில் பிறந்தவராவார். அத்துடன் கவுன்ரி போட்டிகளில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றவரும் மிடில் செக்ஸ் (Middle Sex) அணியின் தலைவருமான மார்க் ராம்பிரகாஸ் இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவராவார். பந்து வீச்சை எடுத்துக்கொண்டால், மேற்கிந்திய வீரர் மல்கம் மார்ஷல்-ஐ (Malcolm Marchal) குறிப்பிடலாம.



தற்போதைய இங்கிலாந்து அணியில் ஸ்ருவேட் தோர்ப், கூடவே அதர்ட்டன், குசைன் போன்ற துடுப்பெடுத்தாட்ட வீரர்களும் கூச், காட்டிக் போன்ற பந்துவீச்சாளர்களும் அவ்வப்போது மட்டுமே பனிச்சிடுவதாலும், தகுந்த சுழல்பந்து வீச்சாளர்களையும், சகலதுறை ஆட்டக்காரர்களையும் கொண்டிராததே பெரிய குறையாகும்.

இங்கிலாந்து கிரிக்கட் வரலாற்றில் எண்ணற்றவர்கள் தோன்றி மறைந்தபோதும், சகலதுறை ஆட்டக்காரர் இயன் போத்தம் (Ian Botham), ஆரம்பத் துடுப்பெடுத்தாட்டக்காரரா இரகாம கூச் (Graham Gooch) பீற்றர் மே, டேவிட் கவர் (David Gover), அலன் லாம்ப் (Allen Lamb) என்ற பட்டியலும் பந்து வீச்சில் உலக சாதனையாக, ஒரு 'இனிங்சில் அனைத்து விக்கட்டுக்களையும் (53 ஓட்டங்களுக்கு 10 விக்கட்டுக்கள் - 1956) கைப்பற்றிய லேங்கர் (J.C.Lanker), லோமன் (Lohmann), ரூமான் (Trueman), சுழற்பந்துவீச்சாளர் ஜோன் எம்புரி (Embury) போன்றவர்கள் குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

பொன். தாமோதரம்

## பலமான அணி பதித்த வெற்றி

கிரிக்கட் டெஸ்ட் தொடர் போட்டிகள் உருவாகிய நாளிலிருந்தே உலகில் பலமான டெஸ்ட் அணியாக இருந்து வரும் அவுஸ்திரேலியா, கடந்த 7.11.97 தொடக்கம் 11.1197 வரை குயின்ஸ்லாந்து மாநில தலைநகர் பிறிஸ்பேர்ன் நகரில் நடைபெற்ற நியூசிலாந்திற்கு எதிரான முதலாவது டெஸ்ட் தொடரில் 186 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

அவுஸ்திரேலியா அணித் தலைவர் மார்க் ரெயிலர் (Mark Tayler) பெற்ற 112 ஓட்டங்கள் உள்ளடங்க 373 ஓட்டங்களை அவுஸ்திரேலிய அணி பெற்றது.

தொடர்ந்து ஆடிய நியூசிலாந்து அணி, தனது முதலாவது இனிங்சில் 349 ஓட்டங்களைப் பெற்றது. நியூசிலாந்து அணித் தலைவர் ஸ்ரீபன் ஃபிளமிங் (Stephen Fleming) 91 ஓட்டங்களை தனது அணிக்குப் பெற்றுக் கொடுத்தார்.

அவுஸதிரேலியா தனது இரண்டாவது இனிங்சில் 6 விக்கட்டுக்களை இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தி நியூசிலாந்து அணியை அடப் பணித்தது.

அவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்துவீச்சாளர் மக்கிறாத் (Mc Grath)-ன் தனது சிறப்பான பந்து வீச்சினால் 5 விக்கட்டுக்களை வீழ்த்தி அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு வித்திட்டார். நியூசிலாந்து அணி தனது இரண்டாவது இனிங்சில் சகல விக்கட்டுக்கள் இழப்பிற்கும் 132 ஓட்டங்களையே பெறமுடிந்ததால் 186 ஓட்டங்களால் தோலவியைத் தழுவியது.

# வர்த்தகம் / மூலதனம்

## வர்த்தகக் கலந்துரையாடல்

நவீன பொருளாதார வர்த்தக அமைப்பானது உலகம் தழுவியது. புலம் பெயர்ந்து வாழும் தமிழ் வர்த்தகர்களும், செல்வந்தர்களும் தம் துறையில் விருத்தி காண்பதற்கு இச் சர்வதேச வர்த்தகம் பற்றிய அறிவைப் பெறுவது அத்தியாவசியமானது. இதனடிப்படையில் உலக வங்கியின் ஐரோப்பிய காரியாலயம் வர்த்தகக் கலந்துரையாடல்களை நடாத்துகின்றது. எதிர்வரும் டிசம்பர் 1-ம் திகதி ஒரு முழுநாள் கலந்துரையாடல் உலக வங்கியின் பாரிஸ் செயலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது உலகவங்கி தனது முதலீட்டு முறைகளையும் தன்னால் சிறுரக மற்றும் மத்திய ரக வர்த்தகர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புக்கள் (ஒப்பந்தங்கள் உட்பட) பற்றியும் போதிக்கும். மேலும் வங்கியின் கடனுதவி வழங்கும் நிறுவனங்களிலிருந்து எவ்வாறு கடன்களைப் பெறலாம் மற்றும் எவ்வாறு முதலிடலாம் என்பன பற்றி அறிவுறுத்தப்படும். கலந்துகொள்ள விரும்பும் வர்த்தகர்களும், ஆர்வமுள்ளவர்களும் தமது பெயரை உடனடியாக உலக வங்கியின் ஐரோப்பிய காரியாலயத்திற்கு அறிவித்து தம்மை பதிந்துகொள்ளலாம்.

முகவரி: **The World Bank International Office**
**66 Avenue d'Iena, 75116 Paris**
தொலைபேசி: (33-1) 40 69 30 21
தொலைநகல்: (33-1) 40 69 31 51
இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு ஈழமுரசுடன் தொடர்பு கொள்ளலாம்
தொலைபேசி: (33-1) 40 37 63 63

## சிங்கப்பூர்:- முதலாளித்துவ கனவுலகம்

அந்த குட்டித்தீவின் இவ்வருட நிகரலாபம் (இறக்குமதி ஏற்றுமதி கணிப்பீட்டில்) 15.5 பில்லியன் டொலர்கள். அதனது சர்வதேச நாணய கையிருப்பு 81 பில்லியன் டொலர்களாகும். அந் தீவின் பிரதான சொத்து, நன்றாக கல்வியறிவு ஊட்டப்பட்டு பயிற்றப்பட்ட, தொழில் நுட்பம் சார் பொருளாதார அமைப்பிற்கான பிரசைகள்.

உலக முதலாளித்துவ பொருளியல் அறிஞர்களால் 'நவீன பொருளாதாரத்திற்கான மாதிரி' என வர்ணிக்கப்படும் சிங்கப்பூர் தொலைத்தொடர்பு தவிர்ந்த ஏனைய துறைகளை முழுமையாக சர்வதேச போட்டியாளர்களுக்கு திறந்துவிட்டுள்ளது.

சிங்கப்பூரின் 50% மான விற்பனைக்கான உற்பத்தி கிழக்காசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆயினும் கைத்தொழிற்துறை உற்பத்தி மேற்கு ஐரோப்பா மற்றும் அமெரிக்கா என்பனவற்றிற்கே அனுப்பப்படுகின்றன. சிங்கப்பூரின் சொத்துக்களுக்கான சந்தையும், சில்லறை விற்பனை முறையும் குறைபாடுள்ளன என விபரிக்கப்படுகின்றது.

* * *

## செல்வந்தராவதற்கு ஸ்ரீவ் கேஸ் ஒரு பாடம்

செல்வந்தராவதற்கு நவீன உலகில் விரைவான–மிக விரைவான வழிகள் உள்ளன. அதனைச் சாதிக்க மனிதனுக்கு வேண்டியது எதிர்காலம் பற்றிய பார்வையும், நிர்வாகத் திறமையும் கடும் உழைப்புமே. இதனை 39 வயதான ஸ்ரீவ் கேஸ் உலகிற்கு நிரூபித்துக் காட்டியுள்ளார்.

தன் மிக இளம் பருவத்தில் எலுமிச்சம் பழத்திலிருந்து 'சோடா' தயாரித்து விற்ற இளைஞன் பின்னர் விவசாயத்திற்கான விதைகளிலிருந்து மணிக்கூடுவரை வாங்கி விற்கும் சில்லறை வியாபாரியாக மாறினான். கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் 'பெப்சிகோலா' நிறுவனத்திலும் பிற சில நிறுவனங்களிலும் சிறிது காலம் பணி புரிந்த ஸ்ரீவ் கேஸ், 'பிஸா கட்'டில் (Pizza hut) வர்த்தகத்தை அதிகரிக்கும் துறைக்கு நியமிக்கப்பட்டான். அவன் அங்கு அறிமுகப்படுத்திய 'பொக்கற் பிஸா' தோல்வி கண்டது. ஆனால் கேஸின் எதிர்காலம் பற்றிய பார்வை (Vision) உருவாகியது. அது அவனை இலத்திரனியல் டிஜிட்டல் துறைக்கு உந்தித் தள்ளியது. Kaypro என்னும் பழைய–இயக்குவதற்கு கடினமான கணினியையும் ஒரு நத்தைவேக 'மொடத்தையும்' (Modem) வாங்கிய கேஸின் கனவுலகு விரிந்தது.

ஒரு கறுப்பு வெள்ளைப் படத்தை ஒரு கணினியிலிருந்து மொடம் எனும் தொடர்பு வழியூடாக பிறிதொரு இடத்திலிருக்கும் கணினிக்கு அனுப்புவதற்கு 30 நிமிடங்கள் எடுத்த அன்றைய காலத்தில் ஒரு இணைக்கப்பட்ட கணினி வலை பற்றி கனவு கண்டான். 1985 இல் அவர் நிறுவிய அமெரிக்க ஒன்லைன் (AOL) நிறுவனத்தின் சக நிர்வாகிகள் கேஸின் கனவுகளை நம்பவில்லை. 'என்னால் எதிர்காலத்தை எதிர்வு கூற மட்டும்தான் முடியும்' ஆனால் எப்போது அது சாத்தியமாகும் என்பதில்லை' என தன்னைக் கேலி செய்தவர்களிடம் கேஸ் கூறிவந்தான்.

ஈற்றில் கேசின் 'பார்வை' வெற்றியைத் தேடித் தந்தது. இவ்வாண்டு கேசின் சிந்தனையில் விரிந்த திட்டத்தின் பயனாய், 2 பில்லியன் டொலர்கள் AOL பெற்றுள்ளது.

தற்போது உலகின் மூத்த கணினி இணைப்பு நிறுவனமான கொம்பியு சேவ் (Compu Serve) மற்றும் வோர்ல்ட் கொம் (World com) என்பவற்றினை உடன்பாடு ஒன்றின் மூலம் தன் வர்த்தக வளர்ச்சிக்காக பயன்படுத்தி வருகின்றது. உலகின் முதலாவது கணினி ஊடான தகவல் பரிமாற்ற சேவையாக AOL ஐ கேஸ் உருவாக்கி உள்ளார்.

இன்று AOL ஒரு இலத்திரனியல் சமுதாயத்தை உலகம் பூராகவும் உருவாக்கி வருகின்றது.

உங்களிடம் கணினிகளும் அதனை இணைக்கும் மொடமும் இருந்தால் நீங்கள் AOL ஊடாக உங்களுக்கென்று ஒரு இலத்திரனியல் முகவரியைப் பெற்றுக்கொண்டு நவீன இலத்திரனியல் சமுதாயத்தில் சேர்ந்துகொள்ளலாம்.

* * *

## பிக்காசோவின் 'கனவு'க்கு விலை 48.4 மில்லியன் டொலர்கள்



நியூயோர்க்கில் இரு மணிநேர ஏலத்தில் உலகின் தலைசிறந்த ஓவியர்களின் 57 படைப்புக்கள் பல மில்லியன்களுக்கு விற்கப்பட்டது. இதில் தலைசிறந்த ஓவியர் பிக்காசோவின் 'கனவு' என தலைப்பிடப்பட்ட அவரது காதலி (ஒன்றாக வாழ்ந்தவர்) மேரி திரேசா வோல்ரரினை பிரதிபலிக்கும் ஓவியமே அதிகூடிய விலைக்கு தொலைபேசி மூலம் கேட்கப்பட்ட ஒருவருக்கு விற்கப்பட்டது.

* * *

## தோற்கடிக்கப்பட்ட கிளின்டனின் வர்த்தக விரைவுபாதை (Fast Track Trade)

உலகின் திறந்த சந்தை அமைப்பு முறையை மேலும் பலப்படுத்தும் விதத்தில் உபில் கிளின்டன் காங்கிரஸ் முன் வைத்த 'விரைவுபாதை வர்த்தகம்' என்ற சட்டமூலத்தை தோல்வியில் இருந்து தப்ப, வாபஸ் பெற்றுவிட்டார்.

'அமெரிக்க பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதே சரியான நடவடிக்கை. அதற்கு ஏற்ப முடிவெடுக்கும் அதிகாரங்களை கொண்ட இப் புதிய சட்டமூலத்தை ஆதரியுங்கள்' என கிளின்டன் கோரியிருந்தபோதும் அமெரிக்க மக்களின் நலன்கள் பல் தேசிய கம்பனிகளின் வர்த்தக நலன்களுக்காக பலியாக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக பல ஜனநாயகக்கட்சி காங்கிரஸ் உறுப்பினர்கள் இதனை எதிர்க்கின்றனர். இதனால் இச் சட்டமூலம் வாபஸ் பெறப்பட்டது. கிளின்டனின் வர்த்தகம் மீதான அதிகாரத்தை குறைக்கின்றது என கூறப்படுகின்றது.

ஆயினும் கிளின்டனில் ஜனநாயக கட்சி முழுமையான திறந்த வர்த்தகம், அமெரிக்க மக்களினதும் சிறு உற்பத்தியாளர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள், நலன்களை பாதிக்கின்றது எனக் கருதப்படுகின்றது.

* * *

## ஆசிய வங்கிகளின் திரும்பிவராத கடன் 500 பில்லியன் டொலர்கள்

ஆசிய வங்கிகளின் பாதகமான கடன்கள் எனப்படும் திரும்பி வராத கடன்கள் 500 பில்லியன் டொலர்களை விரைவில் அடைத்துவிடும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

9 கிழக்காசிய நாடுகளின் மொத்தக் கடன்களில் 20% பாதகமான கடன்கள் என மதிப்பிடப்படுகின்றது. இது மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய மூன்று நாடுகளின் மொத்த உள்ளூர் உற்பத்திக்கு சமமான தொகையாகும். சீனாவின் பாதகமான கடன் 271 பில்லியன் டொலர்களாகும்.

ஆசிய நாடுகளின் வங்கிகள், தமது பண அடித்தளத்தை அதிகரிப்பதற்காகவும் பிறலாபங்களுக்காகவும் ஏராளமான கடன்களை ஒழுங்குபடுத்தாத முறையில் கொடுத்து வந்தன. ஆனால் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் தற்போது இவ் வங்கி முறை மீது கடுமையான தாக்குதலைக் கொடுத்துள்ளது. வங்கி நடைமுறைகளை சீர்படுத்தாவிட்டால் எதுவித உதவிகளையும் வழங்க முடியாதென உலக நாணய நிதியம் எச்சரிக்கிறது.

* * *

## அமெரிக்காவில் கியூப போலி சுருட்டுக்கள்




கியூப அதிபர் பிடல் காஸ்ரோ அபிமானத்திற்குரிய கொகிபாஸ் (Cohibas) சுருட்டுக்கள், அமெரிக்க கியூப நேர்மை தொடர்பான சர்ச்சையையும் அமெரிக்க நீதிமன்றத்தின் தலையீட்டையும் கோரியுள்ளது.

கியூபா மக்களினால் புரட்சியின் ஒரு அடையாளமாக பார்க்கப்படும் கொகிபாஸ் சுருட்டுக்கள் உலகப் புகழ் பெற்றவை. இவற்றினை அமெரிக்காவில் கியூபாவினால் சந்தைப்படுத்த முடியாத சூழலைப் பாவித்து பிறிதொரு அமெரிக்க நிறுவனம், இதே பெயரில் தன் சொந்த 'சுருட்டினை' விற்று வருகின்றது. உலகம் பூராவும் கொகிபாஸ் என்ற பெயரில் கியூப சுருட்டுக்களும், அமெரிக்காவில் போலி சுருட்டுக்களும் விற்பனையாகி வருகின்றன. ஆனால் அமெரிக்க நிர்வாகம் இவ் வர்த்தக சர்ச்சையில் எதுவித முடிவுகளையும் எடுக்காதபோதும் கியூபாமேலே அரசியல் ரீதியாக தாம் கொண்டுள்ள பகையினால் போலிச் சுருட்டுக்களை அனுமதித்துள்ளனர். சர்வதேச சட்டத்தின்படி ஒரு பிரபலமான பெயரினை பிறிதொரு நிறுவனம் தனது உற்பத்திக்கு பாவிப்பது சட்ட விரோதமாகும். இதற்கென IPR எனப்படும் சர்வதேச வர்த்தக உடன்பாடுகள் உள்ளன.

* * *

## விளம்பரம்

### ஆண்களை தாழ்மைப்படுத்தும் 'பெண்கள் சக்தி'

லீ- ஜீன்ஸ் (Lee Jeans) நிசான் கார் ஆகிய நிறுவனங்களின் விளம்பரங்கள் ஆண்களை தாழ்மைப்படுத்தும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளதாக, பிரித்தானிய விளம்பரங்களை ஒழுங்குபடுத்தும் அமைப்பின் முன் முறைப்பாடுகள் வைக்கப்பட்டுள்ளன.

தற்போது விளம்பர வர்த்தகத்தில் அதிகரித்துவரும் 'பெண்கள் சக்தி' எனும் கோட்பாட்டு விடயம் தொடர்ச்சியாக ஆண்களை கீழ்மைப்படுத்தும் விளம்பரங்களை தயாரிக்க தூண்டுவதாகவும், இது வர்த்தக போட்டிகளை சமாளிப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உதவுவதாகவும் கூறப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து விளம்பரங்களை கண்காணிக்கும் அமைப்பு இவ்வாறான விளம்பரங்களை எச்சரித்துள்ளது. ஆயினும் லீ ஜீன்ஸ் மற்றும் நிசான்கார்களுக்கான விளம்பரங்களை தடுத்து நிறுத்த விளம்பர கண்காணிப்பு அமைப்பு மறுத்துவிட்டது.

| நாணய மாற்று விகிதம் | $ | £ | DM | F Fr | S. Fr |
|---|---|---|---|---|---|
| பிராங்பேட் | 1.73 | 2.93 | – | 0.29 | 1.23 |
| சூரிச் | 1.40 | 2.38 | 0.81 | 0.24 | – |
| பாரிஸ் | 5.79 | 9.82 | 3.34 | – | 4.13 |
| லண்டன் | 0.59 | – | 0.34 | 0.10 | 0.42 |
| நியூயோர்க் | – | 1.69 | 0.58 | 0.17 | 0.71 |
| பம்பாய் | 36.65 | 61.94 | 21.17 | 6.32 | 26.10 |
| கொழும்பு | 59.84 | 101.13 | 34.56 | 10.32 | 42.61 |

ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# தமிழீழ தேசத்தின் இறைமை

இலங்கைத்தீவு என்பது ஒரே தேசமாகவும் ஒரு அரசாங்கத்தைக் கொண்டதாகவும் இருப்பதாக சிறீலங்காவின் பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சியாளர்கள் பிரகடனப்படுத்திக் கொண்டாலும் அங்கு நடைமுறையில் இரண்டு தேசங்களும், இரண்டு அரசுகளும் இருப்பதே யதார்த்த உண்மையாகும்.

அதாவது தென்பகுதியில் (சிறீலங்காவில்) பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சியும் வடக்குக் கிழக்குப் பகுதியில் (தமிழீழத்தில்) விடுதலைப் புலிகளின் ஆட்சியும் நடந்து வருகின்றதென்ற உண்மை, இன்று மேற்குலகில் ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

சிறீலங்கா அரசாங்கம் தமிழீழ தேசத்தின் பிரதேசங்களான வடக்குக் கிழக்குப் பகுதி தன்னுடைய அரசின் இறைமைக்குட்பட்ட பிரதேசம் என்று பிரகடனப்படுத்திக்கொண்டாலும் – அங்கே யதார்த்தத்தில் அதிகாரம் சிறீலங்கா அரசு இயந்திரத்தின் கைகளில் இல்லை.

எப்போதும் ஒரு அரசுக்குரிய இறைமையென்பது – அதனுடைய தேச எல்லைக்குள் வாழக்கூடிய மக்களின் சுய விருப்பத்துடன் கூடிய ஒத்துழைப்பின் அடிப்படையில் பெறப்பட்டதாக இருக்கவேண்டும்.

மாறாக ஒரு அரசாங்கம் தானே இயற்றிக்கொண்ட சட்டத்தின் மூலமாகவோ, தன்னுடைய படைப்பலத்தின் மூலமாகவோ ஒரு பிரதேசத்தின் மீது தன்னுடைய அரசின் இறைமையை நிலை நாட்ட முற்படுமாக இருந்தால் அது ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகவே இருக்கும்.

இவ்வாறான ஒரு ஆக்கிரமிப்புக்கு கீழ் நிலையில் குறிப்பாக – ஒரு இனம் என்ற அடிப்படையில்– பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அரசாங்கம் ஒரு சிறுபான்மை இனத்தை நசுக்கும்போது – அவ்வினத்தின் பாரம்பரிய பிரதேசங்கள் மீது இராணுவ வல்லாண்மையைப் பிரயோகித்து தனது இறைமையை நிலைநாட்ட முற்படும்போது, நசுக்கப்படும், ஆக்கிரமிக்கப்படும் இனத்தைச் சேர்ந்த மக்கள் தங்களுடைய அடிப்படை உரிமைகளையும், தங்கள் பிரதேசத்தின் இறைமையையும் நிலை நாட்ட மேற்கொள்கின்ற போராட்டத்தின் மூலம் புதிய தேசங்களும், புதிய அரசுகளும் தோற்றம் பெற்றிருக்கின்றன.

இலங்கைத் தீவை பொறுத்தவரை சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்புக்கு எதிரான தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளாக மாறி, வீரம் செறிந்த போராட்டத்தின் மூலம், தங்களுடைய தேசியக் கட்டமைப்பையும் காலனிய ஆட்சிக் காலத்தில் தாங்கள் இழந்த தமிழீழ தேசத்தின் இறைமையையும் இன்று நிலை நிறுத்தியிருக்கின்றார்கள். சிறீலங்கா அரசாங்கம் காலனிய ஆட்சியாளர்களிடமிருந்து தமிழீழம் தொடர்பாக கடைத்தனமாகப் பெற்ற இறைமையை தன்னுடைய இராணுவ வல்லாண்மையின் மூலம் மட்டும்தான் தக்கவைத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு தமிழீழ தேசத்தின் இறைமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் இறைமை தன்னுடைய கைகளில்தான் இருப்பதாக சிறீலங்கா அரசாங்கம் சொல்லிக்கொண்டாலும், தனது இராணுவ வல்லாண்மையின் மூலம்தான் அதனால் அங்கே இருக்க முடிகின்றது. அந்த இராணுவ வல்லாண்மையை அகற்றிவிட்டால், ஒருநாள் முழுதாகக்கூட சிறீலங்கா அரசின் இறைமை அங்கே இருக்காது. இதுதான் யதார்த்த உண்மை.

இந்த நிலையில் நிகழ்வு பூர்வமாக இருக்கக்கூடிய தமிழீழ தேசத்தின் அரசாங்கமாக இயங்கிக்கொண்டிருக்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகளை, உண்மைக்குப் புறம்பான விதத்தில் ஒரு சிறு இராணுவ குழு என்றும், பயங்கரவாத இயக்கம் என்றும் சிறீலங்கா அரசாங்கம் சர்வதேச அளவில் பிரச்சாரம் செய்து வருகின்றது.

இங்கே கிழக்கு ஐரோப்பாவிலுள்ள முன்னாள் யூகோஸ்லோவியாவின் சேர்பிய மேலாதிக்க அரசாங்கம், குரோவாசியா, பொஸ்னியா, மசிடோனியா, சிலாவோனியா பிரதேசங்கள் எல்லாம் தன்னுடைய இறைமைக்குட்பட்ட பிரதேசங்கள் என்று சொல்லிக்கொண்டு, தனது சேர்பிய மேலாதிக்க இராணுவ வல்லாண்மை மூலம் அந்த தேசங்களையும், அந்த தேசங்களின் விடுதலைக்குப் போராடிய தேசிய விடுதலை இயக்கங்களையும் அழிக்க முற்பட்டபோது எவ்வாறு சர்வதேச ரீதியாகக் கண்டிக்கப்பட்டதோ, அந்தத் தேசங்களிலிருந்து வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப்பட்டதோ அவ்வாறே சிறீலங்கா அரசாங்கம் தமிழீழத் தேசத்தின் மூலம் மேற்கொள்கின்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்காகவும், இன அழிப்பு நடவடிக்கைகளுக்காகவும், சர்வதேச ரீதியாக கண்டிக்கப்படவும் தமிழீழ மக்களுக்கு அவர்களுடைய இறைமையை விட்டுக்கொடுத்து அவர்களுடைய தேசத்திலிருந்து வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப்படவும் வேண்டும்.

# யாழ் குடாவில் புலிகளின் பிடி இறுகுகின்றது

யாழ்குடாவை ஆக்கிரமித்துள்ள சிறீலங்காப் படைகள் கடந்த இரு வாரங்களில் 10 முனைகளில் வைத்து விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டுள்ளனர். வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் இடம்பெற்ற இவ் இராணுவ நடவடிக்கை மூலம் புலிகள் யாழ் குடாவினை மீள தமிழர்களுக்கு கொண்டுவரும் தமது உறுதியினை தெளிவுபடுத்தி விட்டனர்.

மறுபுறம் இராணுவ உளவுத் துறையைச் சேர்ந்த மூத்த அதிகாரி மேஜர் ஜெனரல் லயனல் பாலகெலவை யாழ்குடாவிற்கான தளபதியாக நியமித்ததன் மூலம் தனது ஆக்கிரமிப்பை தொடர்வதற்கான போர்த் திட்டங்களை மரபு ரீதியான அரசு எதிர்ப்பு (Counter -insurgercy) வடிவத்தில் மேற்கொள்ள அரசு தயாராகிவிட்டது.

கடந்தவாரம் பொறுப்பதிகாரியாக பதவியேற்ற மேஜர் ஜெனரல் லயனல் பாலகெல புலிகள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என பகிரங்கமாக கோரிக்கை விடுத்ததன் மூலம் தனது அரசின் போர்த்திட்டத்தின் முதலாவது தேவையான பகை உணர்வற்ற சூழ்நிலையை ஏற்படுத்த முயன்றார். இந்து - கிறிஸ்தவ - பௌத்த குருமார் மத்தியில் பதவியேற்ற புதிய தளபதி யாழ்ப்பாணத்திற்கு அமைதியையும், செல்வத்தையும் கொண்டுவர மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என வேண்டினார். இவ்வாறு அவர் உரையாற்றிக் கொண்டிருந்தபோது காரைதீவுப் பகுதி கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு அப்பகுதி மக்கள் தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் மற்றும் யாழ்ரன் கல்லூரி ஆகிய இடங்களுக்கு இழுத்துவரப்பட்டு காலை 6.00 மணிமுதல் 10.30 மணிவரை தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளனர். இதே தினம் தும்பளை மற்றும் வதிரி பகுதிகளில் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு மக்கள் அச்சுறுத்தப்பட்டனர். இதேபோல கடந்தவாரம் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் ஏராளமான கிராமங்கள் இராணுவ நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டது. இவ் நடைமுறை ரீதியான 'முரண்பாடு' சிங்கள அரசின் அந்நியத் தன்மையையும் மரபு ரீதியான கலக எதிர்ப்பு போர்த்திட்ட 'குறைபாட்டை'யும் காட்டுகின்றது.

இன்று யாழ்குடாவில் ஏராளமான பகுதிகள் போக்குவரத்துத் தடை உத்தரவுகளினால் 'போகமுடியாத' வலயங்களாக உருவாக்கப்பட்டுள்ளன. அரியாலை பிரசைகள்குழு இந்தடை உத்தரவுகளைத் தீர்க்குமாறு பகிரங்கமாகக் கேட்டுக்கொண்டது. ஆயினும் இராணுவம் இதனை நிராகரித்து வருகின்றது. உதயபுரம், வசந்தபுரம், மரியத்தோட்டம், பூம்புகார் ஆகியவற்றுடன் கொழும்புத்துறையின் சில பகுதிகள் எவ்வளவு ஆட்கள் போகமுடியாத பிரதேசமாக இராணுவம் அறிவித்துள்ளது. வடமராட்சிப் பகுதியில் கோதுமை மா விநியோகத்திற்கு கடந்த 18 மாதமாக சிறீலங்கா இராணுவம் தடைவிதித்து வருகின்றது. இதனால் உழைக்கும் மக்களுக்கு 'பாண்' ஒரு விலையுயர்ந்த விடயமாக மாறி வருகின்றது. வல்லிபுரம் தொட்டு மாமுனைவரை வாழும் கரையோர மக்கள் இதன் பாதிப்பை தினசரி உணர்ந்து வருகின்றனர்.

இவ்வாறான பகை உணர்வான நடவடிக்கைகள் மூலம் யாழ்குடாநாட்டில் தமது மக்கள் மீதான பிடியை உருவாக்க முடியாது திண்டாடும் இராணுவம் மறுபுறம் கைதுகள், தேடுதல், கற்பழிப்புகள், காணாமற்போதல், படுகொலைகள் போன்ற உத்தியோகபூர்வ (?) நடவடிக்கைகள் மூலம் மக்களை தமது எதிரிகளாக நிறுத்தி வைத்துள்ளனர்.

**வடமராட்சியில் தென்கரையோரம் விடுதலைப் புலிகளின் கைகளில் வீழ்ந்துவிட்டதை இராணுவம் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு வருகின்றது. நாகர் கோவில் முதல் வெற்றிலைக்கேணிவரை புலிகளின் பகிரங்கமான செயற்பாட்டுத்தளமாக உருவாகிவிட்டது.**

விடுதலைப் புலிகளின் போர் நடவடிக்கைகள், இராணுவத்தை



முடக்கும் நடவடிக்கைகள் மேலும் விசாலமடைந்து வருகின்றன. வடமராட்சியில் தென்கரையோரம் விடுதலைப் புலிகளின் கைகளில் வீழ்ந்துவிட்டதை இராணுவம் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு வருகின்றது. நாகர் கோவில் முதல் வெற்றிலைக்கேணிவரை புலிகளின் பகிரங்கமான செயற்பாட்டுத் தளமாக உருவாகிவிட்டது.

கடந்த இரு வாரங்களில் பத்துமுனைகளில் புலிகள் இராணுவத்தினரைத் தாக்கி அழித்துள்ளனர். சில மோதல்கள் இருமணிநேரம் கூட இடம்பெற்ற சம்பவமானது விடுதலைப் புலிகள் போர்முனைகளின் பின்னரங்க அணிகளுடன் யாழ் குடாவினை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினரை 'நெருக்கி' வருவதைப் புலப்படுத்துகின்றது.

புலிகளின் பலமான கடற்போராளிகள் குடாநாட்டிற்கான ஆயுத விநியோகத்தை மேற்கொண்டு வரும்வேளையில் மக்கள் ஆதரவுடன் எண்ணிக்கை மதிப்பிட முடியாத புலிகளின் உளவுப்படை வீரர்களும், சிறப்புப்படைப் போராளிகளும் குடாநாட்டிற்குள் முகாமிட்டுள்ளது வெளிப்படையாகத் தெரிய வருகின்றது. புலிகளின் நிதி சேகரிப்பு நடவடிக்கைகள் இன்று குடா நாட்டில் குறிப்பாக நகர்ப்புறங்களில் பகிரங்கமாக இடம்பெற்று வருகின்றன.

இதனை இராணுவமும் அதனுடன் இயங்கும் பிற தமிழ் குழுக்களும் அறிந்துள்ளபோதும் மக்களுடன் இணைந்து மக்களால் நடாத்தப்படும் நிதி பங்களிப்பைத் தடுத்து நிறுத்த முடியாது உள்ளது.

இது தொடர்பாக சிறீலங்காவில் 51வது படைப்பிரிவு விடுத்த பகிரங்க அறிவிப்பில், 'புலிகளினால் பலாத்காரமாக பயிற்றுவிக்கப்பட்டோர் எமது சூரியக் கதிர் நடவடிக்கைக்கு முன் மக்களை கஷ்டப்படுத்தினர். இப்போது மருந்துவம், கல்வி, நெடுஞ்சாலை மின்சாரம் தொலைத் தொடர்பு என்பன மக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன. இதன் மத்தியிலும் மக்களிடம் பணம் கேட்கப்படுவதை நாம் அறிவோம். புலிகளின் நடவடிக்கை பலவீனப்படுத்தப்பட்டுள்ள வேளையில் இரகசியமாக நிதி கொடுப்பது கொடுப்பவரின் நலனுக்கும் சமூகத்திற்கும் பாதகமானது' என எச்சரித்துள்ளது.

கொழும்புப் பத்திரிகையொன்று இராணுவத்துடன் இயங்கும் தமிழ்க் குழு ஒன்றை ஆதாரம் காட்டி வெளியிட்ட செய்தியில் 'புலிகள் யாழ் நகரில் பலமாதங்களாக நிதி சேகரிப்பது இராணுவத்திற்கு தெரியும். ஆயினும் யாழ் சமூகத்தில பலதப்பட்ட தரப்பினர் இதில ஈடுபட்டுள்ளதால் இராணுவத்தினரால் ஒன்றும் செய்யமுடியாதுள்ளது' என குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இராணுவம் மீதான போர்முனைகளை பல்வேறு பிரதேசங்களில் ஆரம்பித்ததன் மூலம் இராணுவத்தினரை முகாம்களுக்குள் முடக்கும் பணியின் முதல் கட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.

விநியோக சிக்கல்கள், தொடர்ச்சியான தாக்குதல்கள் காரணமாக எழுந்துள்ள பய உணர்வு என்பனவும் மக்களின் ஒத்துழைப்பின்மையும் இராணுவத்தினை தோல்வியின் பாதைக்கு தள்ளும் அதேவேளை, புலிகள் இராணுவம் மீதான பிடியை விநியோகப்பாதையை தாக்குதல்களுக்கு உட்படுத்துவதன் மூலமும் பல்வேறு போர்முறைகளை திட்டமிட்டு உருவாக்குவதன் மூலமும் இறுக்கி வருகின்றனர்.

— சு.நாகலிங்கம்

# WOODLANDS




ஹூட்லண்ட்ஸ் தொலைபேசி அட்டையில் அதேவிலை 100 பிராங் உடன் மீண்டும் நிமிடங்கள் அதிகரிக்கப்பட்டுவிட்டன.




| | Nº. Local | Nº. Vert |
|---|---|---|
| இந்தியா | 22நிமி. | 15நிமி. |
| இலங்கை | 22நிமி. | 15நிமி. |
| ஐரோப்பா | 68நிமி. | 52நிமி. |
| அமெரிக்கா | 65நிமி. | 37நிமி. |
| கனடா | 65நிமி. | 37நிமி. |
| தாய்லாந்து | 18நிமி. | 18நிமி. |
| கம்போடியா | 17நிமி. | 14நிமி. |

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

70, Rue Louis Blanc, 75010 Paris - Tel: 01 40 35 01 04 / 01 40 35 00 27

## இசைப்புயல் A.R.ரஹ்மான் இன்னிசையில்...
## வாங்கிவிட்டீர்களா?

# ரட்சகன்



எங்கும் கிடைக்கிறது 'கலர் கனவுகள்'

**வெகுவிரைவில்**

'சின்னராமசாமி பெரியராமசாமி',

'தினந்தோறும்'

இசைமாமணி இளையராஜா இன்னிசையில்

'காதலுக்கு மரியாதை'

கதை-வசனம்-டைரக்ஷன்: பாசில்

K.J. ஜேசுதாஸ், S.Pபாலா, ஹரிஹரன், உன்னிகிருஸ்ணன், காதலன் உதித்நாராயணன், சுவர்ணலதா, சுஜாதா, ஹரினி மற்றும் பல பாடகர்கள் பாடியுள்ள 8 இனிய பாடல்கள் A.R.Rahman இசையில் ஒரே CD இல்!
Bhasky முத்திரை பதிக்கப்பட்ட Ayngaran CDs, Cassettes.

போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்

BHASKY

*Marketed & Distributed by*
**Ayngaran Limited**
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
*E-mail:*
*bhasky@aol.com*

# சிறீலங்கா அரசிடம் இருந்து காப்பாற்றுமாறு எம்.பி ஜாலத் ஜயவர்த்தனா கோரிக்கை

தனது மனித உரிமைச் செயற்பாடுகளினால் சிறீலங்கா அரசால் தான் சிறைக்குத் தள்ளப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சிறீலங்கா பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜலத் ஜய வர்த்தனா தெரியப்படுத்தியுள்ளார்.

தனக்காக சிறீலங்கா அரசிடம் குரல் கொடுக்குமாறு அரச சார்பற்ற நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புக்கள், மற்றும் தனிப்பட்டவர்களிடம் இக் கோரிக்கையை விடுத்துள்ளார். மனித உரிமை மீறல்களை கேட்டுக் குரல் கொடுக்கும் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கே இந்நிலை என்றால் சாதாரண மக்களின் நிலை என்ன என தனது வேண்டுகோளில் கேட்டுள்ளார்.

இவரது கோரிக்கையை ஏற்று பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு மனித உரிமை அமைப்புகள் சிறீலங்கா அரசிடம் குரல் கொடுத்துள்ளன.

சிறீலங்கா அரச பயங்கரவாதத்திலிருந்து தன்னைக் காப்பாற்றுமாறு இவர் தமிழர் மனித உரிமை மையத்திற்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மனித உரிமைகள் மையத்தின் செயலாளர் திரு. கிருபாகரன் விடுத்துள்ள செய்தியில், 'அனைத்து மனிதாபிமானிகளும் திரு. ஜெயலத்திற்கு பாதுகாப்புக் கோரி சிறீலங்கா ஜனாதிபதிக்கும் சட்டமா அதிபருக்கும் வேண்டுகோள் விடுக்க வேண்டும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### மட்டு: 20000....

ஆரம்பித்தனர். சில இடங்களில் எச்சரிக்கை வேட்டுக்களும தீர்க்கப்பட்டுள்ளன. ஆனால், பெண் பேதமின்றி சோதனைகள் மிக கடுமையாக நடாத்தப்பட்டன. சிறார்கள் கூட சோதனையிலிருந்து தப்பவில்லை. எத்தனை பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்ற செய்தி இதுவரை கிடைக்கப் பெறவில்லையாயினும் உயர்தர வகுப்பு மாணவ, மாணவிகள் பலர் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாணவர்கள் சோதனையிடப்படும் செய்தியை அறிந்த பெற்றோர் பீதியுடன் பாடசாலைகளை நோக்கி படையெடுத்த போதிலும், படையினர் சோதனை நடைபெறும் இடங்களுக்கு அவர்களைச் செல்ல முடியாதவாறு தடை செய்துவிட்டனர். படையினர் தடுத்து நிறுத்தியவுடனேயே சிறாரகள் பீதியுடன் அலறி அழுதது, நெஞ்சை உருக்கும் நிகழ்வாக இருந்ததாக மட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### கொழும்பு மின்சார....

கல்லோலப்பட்டது.

விமானப் படையினர், திப ணைப்புப் படையினர், பொலிசார் ஆகியோர் பின்னர் தலத்திற்கு வந்து தீயை அணைக்கும் பெரும் போராட்டத்தை நடாத்தி, தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

சம்பவம் நடாத்தப்பட்ட இடத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளும் பின்னர் வந்து பார்வையிட்டனர். தாக்குதலினால் ஏற்பட்ட மொத்த சேதத்தின் பெறுமதி இன்னும் மதிப்பிடப்படவில்லை.

இத்தாக்குதலைப் பற்றி செய்தி வெளியிட்ட சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை நடாத்தியதாகக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை மேற்படி தாக்குதலைப் பற்றி கருத்துத் தெரிவித்த இராணுவ ஆய்வாளர்கள், கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு சவாலாக மிகவும் நுட்பமாக இத்தாக்குதல் நடாத்தப்பட்டிருப்பதுடன், கொழும்பை பாதுகாப்பதென்பது சிறீலங்காப் படையினரால் இயலாத காரியமெனவும் குறிப்பிட்டுள்ளனர்.

# தோப்பூரில் புலிகள் தாக்குதல் 3 இராணுவ பொலிசார் பலி

திருமலை மாவட்ட தோப்பூர் பகுதியில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஒன்றில் சிறீலங்காப் படையினரின் மூன்று இராணுவ பொலிசார் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 14ம் திகதி இடம் பெற்ற இத்தாக்குதலுக்கு ரோந்து வந்த இராணுவப் படையணியே இலக்காகியுள்ளது. ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைக்காக கிழக்கிலிருந்து பெருமளவு படையினர் வன்னிக்கு அனுப்பப்பட்டிருப்பதால் தற்போது கிழக்கில் பொலிசாரும், இராணுவத்தினரும் காணப்படுகின்றனர். தற்போது இவர்கள் மீது விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்களை பரவலாக தீவிரப்படுத்திவருவது குறிப்பிடத்தக்கது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### மக்களின் பாராட்டினை...

ளைகள், வயோதிபர் என்ற வயது வேறுபாடின்றி தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே கொழும்பு போன்ற வேறு பகுதிகளுக்கு செல்வதற்கு மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர். அதனைவிட திடீரென இடைவழிகளில் குறுக்கிடும் இராணுவத்தினர் வாகனங்களில் பிரயாணம் செய்யும் மக்களை கீழிறக்கி மனிதநேயமற்ற கணக்காக சோதனை என்று கூறி மிகவும் துன்பப்படுத்தி வருவதும் தற்பொழுது அதிகரித்துள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### பிரபாகரன்....

உடன்பாட்டை. இந்தியாவுடன் முரண்படக்கூடாது என்பதற்காக மிகுந்த தயக்கத்துடன் அவர் ஏற்றுக்கொண்டார்' என சுட்டிக்காட்டினார்.

இந்தியாவின் மீதான சிங்களவர்களின் சந்தேகம் தொடர்பாக பதிலளித்த தீக்சித் 'நாம் சிறீலங்காவின் ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் விளைவிப்பவர்களாக இருப்பின் விடுதலைப் புலிகளை அழித்து அவர்கள் சிறீலங்காவை உடைக்க உதவியிருக்கலாம். எமது 2000 படையினர் உயிர் துறந்ததால்தான் இன்றுவரை சிறீலங்கா 'ஒரு' நாடாக இருக்கிறது' எனக் குறிப்பிட்டார்.


# வீர வணக்கம்

வீரஜனனம்: 04 – 01 – 1971



வீர மரணம்: 05 – 10 – 1997

## மேஜர் பாபு

தம்பிராசா – சிவலிங்கம்
(கோண்டாவில் கிழக்கு, தமிழீழம்)

*விடுதலையின் வேட்கை*
*விழிதனில் சுமந்து*
*தலைவன் வழியே*
*மூச்சாகவும்...*
*பேச்சாகவும்....*
*நிதம் கொண்டு*
*களம் பல கண்ட*
*எங்கள் தோழனே!*
*இன்று!*
*உன் பிரிவு கண்டு*
*மனமுருகுகிறோம்*

*மண்ணைவிட்டு*
*மறைந்தாலும் -எம்*
*மனதை விட்டு*
*மறையாத எங்கள்*
*தோழனே*
*நாளை*
*மலரப்போகும்*
*ஈழத்துக்கு*
*உரம் நீ!*

– நீர்வேலி நண்பர்கள்


# புளொட் – ரெலோ கும்பல் வவுனியாவில் மோதல்

17.11.97

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் ரெலோ- புளொட் கும்பலிடையே எழுந்த மோதல் சம்பவம் ஒன்றில் மூன்று ரெலோ உறுப்பினர்கள், புளொட் கும்பலினால் சுட்டு படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர். ரெலோ கும்பலுக்கு சொந்தமான சிற்றூர்தி ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. நேற்றிரவு 10.00 மணியளவில் நடைபெற்ற இம் மோதலுக்கு இரு தரப்பினரிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கமே காரணமெனவும் வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வீதியால் சென்ற இரண்டு புளொட் உறுப்பினர்களை ரெலோ கும்பல் முதலில், தாக்கியதாகவும், அதனைத் தொடர்ந்து சிற்றூர்தி ஒன்றில் பூந்தோட்டப் பகுதியை நோக்கி பிரயாணம் சென்ற ரெலோ கும்பலை நோக்கி புளொட் கும்பல் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது, மூவர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களை ஏனைய உறுப்பினர் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டனர்.

இச்சம்பவத்தை அடுத்து பூந்தோட்டப் பகுதி பெரும் பதட்டத்துடன் காணப்படுகிறது. பெரியதொரு மோதல் சம்பவம் நடைபெறலாமெனவும் மக்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

# MI-24 ஐ வீழ்த்தியது எந்த ரக ஏவுகணை?

கடந்தவாரம் கொக்கிளாய் கடனீரேரியில் விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட MI-24 தாக்குதல் உலங்கு வானூர்தி, ஏவுகணைத் தாக்குதல் காரணமாகவே வீழ்ந்தது என சிறீலங்கா விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஏவுகணைகள் வெப்ப இலக்குகளைத் தேடி அழிக்கும் வகையைச் சேர்ந்தவை எனத் தெரிவித்த அதிகாரிகள், ஆனால் இந்த ஏவுகணைகள் எந்த ரகத்தினைச் சேர்ந்தவை என இதுவரை உறுதிப்படுத்தப்படமுடியவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

சுட்டுவீழ்த்தப்பட்ட உலங்கு வானூர்தியிலிருந்து உரையாடல் பகுதிப் பெட்டியை மீட்ட விமானப்படையினர் அதை செவிமடுத்த போது அதில் 'கறுப்பன் கறுப்பன்' (கிருப்பு திருப்பு) என அதிகாரி ஒருவர் பீதியுடன் சிங்களத்தில் அலறியதைச் செவிமடுத்துள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான உலங்குவானூர்தி மீது தொடர்ந்து ஐந்து ஏவுகணைகள் ஏவப்பட்டதை தாம் கண்டதாக கொக்கிளாய்ப் படைமுகாம் இராணுவக் கப்டன் ஒருவர் தெரிவித்த போதிலும் பாதுகாப்பு அதிகாரி அதனை நிராகரித்ததுடன் ஒரு ஏவுகணை மட்டுமே ஏவப்பட்டிருக்கலாம் என தெரிவித்துள்ளார். சுட்டுவீழ்த்தப்பட்ட MI 24 தாக்குதல் கலத்துடன் மேலும் ஒரு MI 17 ரக துருப்புக் காவி உலங்கு வானூர்தி இத்தாக்குதலின் போது சேதமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### அம்பாறை மத்திய....

பின்னர் அப்பகுதியில் தேடுதலை நடாத்திய விடுதலைப் புலிகள், கொல்லப்பட்ட படையினரிடமிருந்த ஆயுதங்களை கைப்பற்றிக் கொண்டு தளம் திரும்பினர். இத்தாக்குலின் போது புலிகள் தரப்பில் இழப்பேதும் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.


# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 29 - 03 - 1978



இறப்பு: 10 - 11 - 1995

## வீரவேங்கை எழுச்சியன்

செல்லர் நகுலேஸ்வரன்
(கைதடி குமரநகர், கைதடி)

*எதிரிப் படைதனை துரத்தி*
*எம் தாயக சுதந்திரத்தில்*
*எழுந்து நின்ற எழுச்சியே...*
*எம் மனம் ஓர் கணம் வெம்மினாலும்*
*நின் தீரத்தில் மறுகணம் திளைக்கின்றது!*

தகவல்: யோகேஸ்வரன் சுவிஸ் - 014628912
ராசா ஜேர்மனி - 0201227916

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

AYNGARAN ENTERPRISES & VIDEO
பசுமையான மரக்கறி வகைகள் மளிகைப் பொருட்கள்
ஐரோப்பிய ரீதியில் தெளிவான, தரமான, ஒரிஜினல்
வீடியோக்களை குறைந்த விலையில் வழங்குபவர்கள்
AYNGARAN VIDEO
80, BURLINGTON ROAD, NEW MALDAN
SURREY, KT3 4NU, ENGLAND
Tel: 0181 - 9421561
Fax: 0181 - 2968778


## கொழும்பு மின்சார நிலையத்தில் குண்டு தாக்குதல்

# 13 மில்லியன் லீற்றர் எரிபொருள் தீப்பிடித்தது

## விடுமுறை நாளில் நடந்த மற்றொரு தாக்குதல்

கொழும்பில் கடந்த மாதம் நடைபெற்ற பாரிய குண்டுத் தாக்குதலின் ஒரு மாத நிறைவு நாளான மற்றொரு போயா தினத்தில், கொழும்பு நகரத்திற்கு மின் வழங்கும் பிரதான மின்சார நிலையமான களனி திஸ்ஸ நிலையத்தில் மிகவும் நுட்பமான வகையில் திட்டமிடப்பட்ட குண்டுத்தாக்குதல் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

நிலையத்தில் எரிபொருள் தாங்கிகள் மீது மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலினால் மூன்று பிரதான தாங்கிகள் பலத்த சேதமடைந்துள்ளன. ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளதுடன் தாக்குதலின் காரணமாக 13 மில்லியன் லீற்றர் எரிபொருள்கள் முற்றாக எரிந்துள்ளன.

கடந்த வெள்ளி(14.11.97) அன்று அதிகாலை 4.30 மணிக்கே இக் குண்டு வெடிப்புகள் அடுத்தடுத்து நிகழ்ந்துள்ளன. மொத்தமாக எட்டுக் குண்டுகள் வெடித்துள்ளன.

நிலையத்தைச் சுற்றிப்போடப்பட்டிருந்த பாதுகாப்பு வேலியை வெட்டி, காவற் கோபுரங்களையும் ஊடறுத்து உட்புகுந்த தாக்குதற்காரர்கள், எரிபொருள் தாங்கிகளில் காந்த ஈர்ப்புச் சக்தி கொண்ட IMED ரக வெடிகுண்டுகளை நுட்பமாக பொருத்தி விட்டுச் சென்றுள்ளனர்.

சரியாக அதிகாலை 4.45 மணியளவில் ஒன்றன்பின் ஒன்றாக இக்குண்டுகள் அடுத்தடுத்து வெடித்ததனால் தாங்கியிலிருந்த எரிபொருள் தீப்பிடித்துக் கொண்டது. மொத்தமாக எட்டுக் குண்டுகள் இவ்வாறு வெடித்துள்ளன. குண்டுகள் வெடித்ததைத் தொடர்ந்து முழு மின்சார நிலையமுமே அல்லோல

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# பிரபாகரன் தலைசிறந்த அரசியல் சாணக்கியன்

**- ஜே. என். தீக்சிற்**

'கடந்த 10 வருடங்களாக பிரபாகரன் பற்றி வேறுபட்ட பார்வை இருந்து வந்தது. ஆனால் அன்றுமுதல் இன்றுவரை பிரபாகரனின் ஈழத்திற்கான அவரது முழுமையான ஈடுபாட்டை நான் திடமாக 'நம்புகின்றேன்' என முன்னைான் இந்திய வெளிவிவகார செயலாளரும், கொழும்புக்கான தூதுவருமான திருஜே. என் தீக்சிற் கொழும்பு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

'இந்த மனிதன் பற்றிய எனது அபிப்பிராயம் மாற்றம் பெற்றுள்ளது. இந்த மனிதன் (பிரபாகரன்) ஒரு பூரணத்துவமான அரசியல் சாணக்கியனும் (Accomplished Political Strategisy, இராணுவ வல்லுனரும் ஆவார்' என குறிப்பிட்ட தீக்சிற் 'இந்திய - இலங்கை

(தொடர்ச்சி 31ம் பக்கம்)



# மக்களின் பாராட்டினைப் பெறும் 'தோல்வி நிச்சயம்'

வரும் வெள்ளியில் இருந்து ஆரம்பமாக இருக்கும் மாவீரர் நாளுக்கு தயாராகிவரும் மட்டக்களப்பு மக்கள், விடுவிக்கப்பட்ட தமது பிரதேசங்களில் பல சிரமதானப் பணிகளைத் தொடங்கியுள்ளதுடன், அலங்கார வளைவுகள் அமைப்பதிலும் மிக வேகமாக ஈடுபடத் தொடங்கிவிட்டனர். இதேவேளை மட்டக்களப்பு கலைஞர்களால் உருவாக்கப்பட்ட 'தோல்வி நிச்சயம்' என்ற நாட்டுக் கூத்தும் பல இடங்களில் மேடையேற்றப்பட்டு, மக்களின் அமோக ஆதரவையும் பெற்று வருகின்றது.

இதேவேளை மாவீரர்தான் ஞாபகார்த்தமாக விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொள்ளக்கூடும் என்ற காரணத்தினால், மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் அமைந்துள்ள சிறீலங்கா இராணுவத்தினர் சோதனைச் சாவடிகளில் தமது சோதனைகளை அதிகரித்துள்ளனர்.

அத்துடன் பெண்கள், குழந்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# அம்பாறை மத்திய முகாம் பகுதியில் புலிகள் தாக்குதல்; 6 பொலிசார் பலி

(14.11.97)

அம்பாறை மத்திய முகாம் பகுதியில் விடுதலைப் புலிகள் இன்று மேற்கொண்ட அதிரடித் தாக்குதலொன்றில் ஆறு பொலிசார் பலியாகியுள்ளனர். மேலும், பத்துப் பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் ஆறு பேர் அதிரடிப்படையினர் ஆவர். அத்துடன் ஒரு அதிகாரியைக் காணவில்லை எனவும் அறிவிக்கப்படுகிறது.

மத்திய முகாம் பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் வீதி சோதனைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வெல்லாவெளி பொலிஸ் கொமாண்டோ அணியினரே விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானவர்கள் ஆவர்.

காலை 6.50 மணியளவில் புலிகளின் அதிரடிப் படைப்பிரிவினர் மேற்படி பொலிஸ் அணியை சுற்றிவளைத்துத் தாக்குதலைத் தொடுத்தனர். சுமார் அரை மணி நேரம் நடாத்தப்பட்ட இத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் போக எஞ்சியவர்கள் தமது காயமடைந்த சகாக்களுடன் முகாம்களுக்கு ஓடித்தப்பினர்.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# மட்டு: 20000 மாணவர்கள் கைது

(17.11.97)

மட்டக்களப்பு நகரப் பாடசாலை மற்றும் புறநகர் பகுதியான கோட்டை முனை, கல்லடிப் பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்கள் மீது சிறீலங்காப் படையினர் ஏக கால சோதனை நடவடிக்கைகளை இன்று பிற்பகல் மேற்கொண்டுள்ளனர்.

தமது பாடசாலை நேரத்தினை முடித்துக் கொண்டு பிற்பகல் 2.00 மணியளவில் வீடு திரும்பிய சுமார் 20 000 மாணவர்களையும் திடீர் தடை நிலைகளை வீதிகளில் அமைத்து காத்திருந்த படையினர் தடுத்து நிறுத்தி, தமது சோதனைகளை

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

ஈழமுரசு பிரித்தானியா
சந்தா விபரம்
தபாற் செலவுடன்:-
52 - வாரங்களுக்கு £60 (520Frs.)
26 - வாரங்களுக்கு £30 (260Frs.)
தொடர்புகளுக்கு:
ஜெயந்தன் - 09 56 90 81 45 / குணம் - Tel: 09 56 27 77 18
E.Mail - eelamurasu@aol.com

'ஈழமுரசு' உங்கள் பத்திரிகை; நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் ஈழமுரசினை அறிமுகப்படுத்துங்கள்

# முல்லைக்கான உணவுப் பொருட்கள் இராணுவத்தினால் நனைந்து பாழாயின

சிறிலங்கா இராணுவத்தின் அரக்கத்தனமான மனிதாபிமானமற்ற செயலினால் தமிழ் மக்களுக்கான உணவுப் பொதிகள் மழையில் நனைந்து பாழாகிவிட்டன.

வவுனியாவிலிருந்து முல்லைத்தீவுப் பிரதேசத்திற்கு 29 பார வண்டிகளில் (லொறிகள்) உணவுப் பொருட்கள் கடந்த 10-ம் திகதி அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால் இவையாவும் பறையனாலங்குளத்தில் வைத்து படையினரின் சோதனைக்கென இறக்கப்பட்டு சோதனையிடப்பட்ட வேளையில், கடும் மழை பெய்யத் தொடங்கியதனால் அவ்வுணவுப் பொருட்கள் யாவும் மழை நீரில் நனைந்து பாவனைக்கு உதவ முடியாத வகையில் பாழாயின.

18 பார வண்டி மா மூடைகள், 10 பார வண்டி சீனி மூடைகள், 1 பார வண்டி அரிசி மூடைகள் ஆகியனவே இவ்விதம் பாழானவையாகும்.

மழை பெய்யப் போகின்றது எனத் தெரிந்திருந்தும் படையினர் அதனைக் கணக்கெடுக்காது விசமத்தனமாக உணவுப் பொருட்களைக் கீழே இறக்குமாறு பணித்துள்ளனர். முன்னர் தாண்டிக்குளத்தினூடாக உணவு அனுப்பப்பட்ட வேளையில் கொட்டகைகளினுள்ளேயே இவ்விதம் சோதனை இடப்படுவது வழக்கம். தற்போது வெளியான பிரதேசத்திலேயே இவ்வாறான சோதனைகள் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

# வன்னியில் கடும் மழை இடம்பெயர்ந்தோர் அவலம்

வன்னிப் பகுதியில் கடந்த சில நாட்களாக கடும் மழை பெய்து வருவதனால் தாழ்வான நிலப்பரப்புகளில் பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக முல்லைத்தீவு பரந்தன் வீதியில் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியதால் இதனூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. உடையார் கட்டு குளத்தின் தற்காலிக அணையும் உடைப்பெடுத்ததால் அயற்கிராமங்களில் கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதேவேளை மூங்கில் ஆறு, இரணை மடு, கல்மடு, அக்கராயன், பேராறு ஆகியவற்றின் நீர் மட்டங்கள் தொடர்ச்சியாக உயர்ந்துவருவதால் அணைகள் உடைப்பெடுத்து சில இடங்கள் வெள்ளத்தினால் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. நாச்சிக்குடா, முழங்காவில் பகுதியிலும் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. பெய்யும் கடும் மழையினால் சிறீலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். உணவுப் பொருட்களின் பற்றாக்குறையினாலும், நோய்களின் பரப்பலும் அவர்களை பெரிதும் வாட்டி வருகின்றன. போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளதால் நிவாரண உணவு வகைகள் காவிச் செல்லும் வாகனங்களின் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது.

இறுதியாக கிடைத்த செய்திகளின்படி வவுனியா - கண்டிக்குளம் பகுதியிலுள்ள சிறு குளங்கள் உடைப்பெடுத்ததினால் வீடுகள், வீதிகள் என்பன நீரில் முற்றாக மூழ்கியுள்ளதுடன், வர்த்தக நிலையங்களிலுள்ள பொருட்களும் நீரினால் அள்ளுண்டு செல்லப்பட்டுள்ளன என வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# புலிகளுக்கு நிதி செல்வதற்கான சான்றுகள் இல்லை — தென்னாபிரிக்க அரசு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தென்னாபிரிக்காவிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது என்பதற்கான சிறீலங்கா அரசின் குற்றச்சாட்டினை தென்னாபிரிக்க அரசு நிராகரித்துள்ளது.

அதிபர் நெல்சன் மண்டேலாவின் பணிப்பில், சிறீலங்காவின் குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட குழுவினர் சிறீலங்காவின் மேற்படி குற்றச்சாட்டுக்கு எவ்வித ஆதாரமும் இல்லையெனவும் தெரிவித்துள்ளனர்.

குழுவின் முடிவு தொடர்பாக கருத்து வெளியிட்ட தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு. அல்பிரெட் நிசோ, விடுதலைப் புலிகளுக்கு தென்னாபிரிக்கக் குடிமக்களால் நிதியுதவி வழங்கப்படுகின்றது என்ற குற்றச்சாட்டினை சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுநலவாய மாநாடு நடந்த வேளையில் அதிபர் நெல்சன் மண்டேலாவிடம் கூறியிருந்ததைத் தொடர்ந்து நாம் இது பற்றி விசாரணைகளை மேற்கொண்ட போதிலும், அதற்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்காததினால் நாம் இந்தக் குற்றச்சாட்டினை நிராகரிக்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

முன்னதாக, தென்னாபிரிக்க தமிழர் சம்மேளனத்தின் தலைவர் திரு. குபு விடுதலைப் புலிகளை பலமாக ஆதரித்து கருத்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# தொண்டர் நிறுவனங்கள் மூடப்படும் — சந்திரிகா எச்சரிக்கை

சிறீலங்காவில் இயங்கும் அரசு சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் (NGO) நடவடிக்கைகள் முடக்கப்படும் அல்லது அவற்றின் சேவை கட்டுப்படுத்தப்படுமென சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா எச்சரித்துள்ளார்.

கடந்தவாரம் பொதுஜன மக்கள் ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினரிடையே உரையாற்றிய போதே சந்திரிகா மேற்படி எச்சரிக்கைகளை விடுத்துள்ளார். இக்கூட்டத்தில் கம்பகா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பீலிக்ஸ் பெரேரா, அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களில் சில விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படுகின்றன என்ற குற்றச்சாட்டை முன்வைத்ததற்கு பதிலளித்த சந்திரிகா, எமக்கு இசைவாக இயங்காத அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் மூடப்படும். அத்துடன் ஏனைய நிறுவனங்களின் மீதும் விரைவில் சில கட்டுப்பாடுகள் விதிப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பு நகருக்குள் ஊடுருவியுள்ள கரும் புலிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடனே போக்குவரத்துக்களை மேற்கொண்டனர் என்ற அப்பட்டமான விசமத்தனமான பிரச்சாரங்களை சிறீலங்கா அரசு தற்போது மேற்கொண்டுள்ளது.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு அரசு எவ்வித சேவைகளையும் வழங்காத இந்த வேளையில், பல அரச அழுத்தங்களுக்கு மத்தியில் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் சிறிதளவு சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியமும் நடாத்திய தமிழிசைக் கச்சேரி

கடந்த 16.11.97 ஞாயிற்றுக்கிழமை சுவிஸ் பேர்ண் மாநகரில் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியமும் இணைந்து பொன். சுந்தரலிங்கம் அவர்களின் தமிழிசைக் கச்சேரியை நடாத்தியுள்ளன. இதன்போது புங்குதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியத்தினால் 64,000 சுவிஸ் பிராங்குகள் தமிழர் புனர்வாழ்வுக் கழக சுவிஸ் கிளைப் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை இன்னுமொரு தொகைப் பணத்தினை எதிர்வரும் மாவீரர் தின விழாவின் போது தாம் வழங்க இருப்பதாகவும் 'புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியம்' தெரிவித்துள்ளது.

# களனித் தாக்குதலுக்கு நீர் உந்து வண்டி பயன்படுத்தப்பட்டது?

களனி திஸ்ஸ மின்சார நிலையத்தில் குண்டுத் தாக்குதலை நடாத்த வந்தவர்கள் நீருந்து வண்டிகளை (Water - Scooters) பயன்படுத்தினரென சிறீலங்காப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

களனி ஆற்றினூடாக நீருந்து வண்டிகளில் வந்தவர்கள் மின் நிலையத்தின் பின் பக்கமாக உள்ள புகையிரதப் பாதையினூடாக நிலைய வளாகத்திற்குள் உட்புகுந்து குண்டுகளை பொருத்தியிருக்கலாமெனவும் இவர்கள் பயன்படுத்திய நீருந்து வண்டிகள் கொழும்பின் புறநகர்ப் பகுதியிலேயே வைத்து பொருத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை இத்தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட குண்டுகள் மிக நுட்பமான தொழில் நுட்பத்தைக் கொண்டவையாகும். இக்குண்டுகள் காந்த ஈர்ப்பு சக்தியின் உதவியுடனேயே பொருத்தப்படுபவை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெடிகுண்டு வெடிப்பினால் மட்டுநகர் மக்கள் பதற்றம்

மட்டக்களப்பு நகரின் மத்தியிலுள்ள கோட்டமுனைப் பாலத்தில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் கடந்த புதன்கிழமை (12.11.97) அன்று காலை 10.30 மணியளவில் குண்டொன்று வெடித்ததினால் மக்கள் தமது அன்றாட அலுவல்களை விட்டுவிட்டு வீடுகளில் அடைந்து கொண்டனர்.

இச் சம்பவம் இடம் பெற்ற வேளை மட்டக்களப்பு நகரப் பகுதியில் கூடியிருந்த மக்கள் நாலபுறமும் சிதறி ஓடினர். நகரப்பகுதியே சிலமணி நேரங்களில் வெறிசோடியது.

சோதனைச் சாவடியில் தொங்கவிடப்பட்டிருந்த படையினர் ஒருவரின் உடையிலிருந்து வீழ்ந்த குண்டு ஒன்று வெடித்ததே இதற்குக் காரணம் என பின்னர் படையினரால் தெரிவிக்கப்பட்டது.

## அரச நிறுவனங்களில் உயர் அதிகாரிகளில் புலிகளின் உளவாளிகள்

- புலனாய்வுத்துறை

கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் உள்ள பிரதான அரச நிறுவனங்களில் விடுதலைப் புலிகளின் உளவாளிகள் பலர் உயர் அதிகாரிகளாக பணி புரிவதாக சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சு புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை தலைமையகம், கொலன்னாவை எண்ணெய்க் குதம், மக்கள் வங்கித் தலைமையகம், ரூபவாஹினி கூட்டுத்தாபனம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் புலிகளின் உளவாளிகள் பலர் இருப்பதாகவும், இவர்கள் கணினி, மற்றும் தொலைதகலூடாக தமக்கிடையே செய்திகளை சங்கேதமான முறையில் பரிமாறி வருவதாகவும் குறிப்பிட்டுள்ள புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள், வெகுவிரைவில் இவர்களைக் கைது செய்துவிடுவோம் எனவும் தெரிவித்துள்ளனர்.


## உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையேயான ஒன்றுகூடலும் இரவு விருந்துபசாரமும்

பிரான்சில் இயங்கிவரும் ஈழத்தமிழர் உதைபந்தாட்டக் கழகங்களிற்கிடையேயான நல்லுறவையும் புரிந்துணர்வையும் மேலும் வளர்க்கும் முகமாக ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் - பிரான்ஸ் விருந்துபசாரத்துடன் கூடிய ஒன்றுகூடல் ஒன்றை எதிர்வரும் 07.12.97 ஞாயிறு பிற்பகல் 4.00 மணிக்கு நடாத்தவுள்ளது.


இடம்: தமிழ்ச்சோலை மண்டபம்

26, Rue du Departement, 75018 Paris. (Mo: La Chapelle)

மேலதிக விபரங்கட்கு: திரு. ரொனி -01 43 94 19 05



## வாகன சேவை



உங்கள் பொருட்கள் வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றை ஏற்றி இறக்கவும் வெளியூர் பிரயாணம் போன்ற தேவைகளுக்கும்

ரவி:
01 48 76 51 90 /
06 07 62 26 89
01 42 23 23 10

# மருத்துவ தாதிமாரின் அலட்சியம் வீதியில் பிரசவித்த பெண்

மருத்துவத் தாதிமாரின் அலட்சியப் போக்கினால், நிறை மாதக் கர்ப்பிணிப்பெண் ஒருவர் வீதியில் பலர் பார்த்திருக்க குழந்தை பிரசவித்த சம்பவம் யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்திலுள்ள வீதியில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி பெண் பிரசவவலி எடுத்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்றபோது அங்கிருந்த தாதிமார் வைத்தியர் வரவில்லை என்றும், அதுவரை வைத்திய சாலை வளாகத்திலுள்ள சிறு வீதியால் நடந்து திரியுமாறும் அலட்சியமாகக் கூறியுள்ளனர்.

அப்பெண் தனக்கு பிரசவ வலி அதிகமாக இருப்பதாகக் கூறியும், தாதிமார் அதைக் கவனத்தில் எடுக்காததால் வீதியிலேயே குழந்தையைப் பிரசவிக்க வேண்டிய பரிதாபம் இப்பெண்ணிற்கு ஏற்பட்டது. அது மட்டுமல்லாது நின்ற நிலையில் அப்பெண் குழந்தையைப் பிரசவித்ததால், குழந்தை நிலத்தில் விழுந்து இறந்துள்ளது.

தாதிமாரின் மனிதாபிமான மற்ற இச்செயலை யாழ் நகரில் செயற்படும் மனித உரிமை அமைப்புக்கள் பலமாகக் கண்டித்துள்ளன.

# காரைநகர் சுற்றிவளைப்பு பலர் கைது

சிறீலங்காக் கடற்படையினர் கடந்த 14-ம் திகதி காரைநகர்ப் பகுதியைச் சுற்றி வளைத்து பெரும் தேடுதலை நடாத்தியுள்ளனர். இத்தேடுதல வேட்டையின்போது பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

காலை 6.00 மணியளவில் தேடுதல் வேட்டையினை ஆரம்பித்த கடற்படையினர், சகல பொதுமக்களையும் தியாகராஜா மகாவித்தியாலயத்தில் கூடுமாறு அறிவித்ததைத் தொடர்ந்து சகல பொதுமக்களும் வயது, பால் வேறுபாடின்றி பாடசாலைக்குச் சென்றுள்ளனர்.

தமது காலைக் கடன்களைக் கூட செய்துமுடிக்க அனுமதிக்கப்படாத நிலையில் பெரும் அவலத்துடனேயே பொதுமக்கள் பாடசாலையில் கூடிநின்றனர்.

காலை 10.30 மணிவரை வீடுகளில் தேடுதலை நடாத்திய படையினர் அதன் பின்னா பாடசாலைப் பகுதிக்கு வந்து தமது விசாரணையை மேற்கொண்டனர். விசாரணைகளின் முடிவில் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களது பெயர் விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. இத்தேடுதல் வேட்டைக்கு தமிழ் கூலிக்குழுக்களும் உதவியதாகக் கூறப்படுகிறது.

# வீதிகளை மூடி நிற்கும் வெள்ளம்

யாழ்குடா நாட்டு வீதிகள் எதுவும் திருத்தப்படாமல் குன்றும், குழியுமாக இருப்பதால் தற்போது பெய்துவரும் கடும் மழையினால் போக்குவரத்து மிகவும் பாதிப்படைந்துள்ளது. இதேவேளை பல கால்வாய்கள் திருத்தி அமைக்கப்படாமல் இருப்பதனால், மழைநீர் தேங்கி நின்று நுளம்புகளின் தொல்லைகளும் அதிகரித்துள்ளன. இதனால் மலேரியா போன்ற தொற்று நோய்கள் ஏற்படுமோ என மக்கள் கவலை கொண்டுள்ளனர்.


இவற்றை புனரமைக்கும் படி மாநகரசபை அதிகாரிகளை கேட்டுக்கொண்ட போதிலும், போதிய நிதிவசதி இல்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இக் கடும்மழை காரணமாக திருநெல்வேலி, கல்வியங்காடு, சந்தைகள் வெள்ளத்தினால் நிரம்பியுள்ளன. இதனால் சந்தை மூடப்பட்டதால் அன்றாடம் தொழில்புரிந்து ஜீவனம் நடாத்தும் மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

# வரணியில் மூதாட்டி சுட்டுக்கொலை

வரணிப் பகுதியில் கடந்த 10.11.97 திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு விடுதலைப் புலிகளுடன் ஏற்பட்ட மோதலையடுத்து அப்பகுதியைச் சுற்றிவளைத்த சிறீலங்கா இராணுவத்தினர், 65 வயது மூதாட்டி ஒருவரைச் சுட்டுக்கொன்றதுடன் 13 வயதுச் சிறுவன் ஒருவரையும் சுட்டுக் காயப்படுத்தியுள்ளனர்.

வரணி சுடப்பியல் என்ற இடத்தில் நடைபெற்ற இத்தச் சம்பவத்தில் தம்பு இளைப் பிள்ளை என்ற மூதாட்டியே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். சதாசிவம் விக்கினேஸ்வரன் என்ற சிறுவனே சுட்டுக் காயப்படுத்தப்பட்டு ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.



# யாழ்ப்பாண செய்திகள்

# பொருட்களின் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணக்குடா நாடு முழுவதும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை திடீரென அதிகரித்துள்ளது. முன்பு 25 ரூபா முதல் 30 ரூபா வரை விற்ற ஒரு கிலோ அரிசி, தற்போது 37 ரூபாவாக விற்கப்படுகிறது. அதுபோல் கிலோ 40 ரூபா முதல 45 ரூபா வரை விற்கப்பட்ட மைசூர்ப்பருப்பு தற்போது கிலோ 60 ரூபா முதல் 65 ரூபாவாக விற்கப்படுகின்றது.

குடாநாட்டில் தற்போது பெய்துவரும் அடைமழையைப் பயன்படுத்தி வர்த்தகர்கள் பொருட்களை பதுக்கி வைத்து கறுப்புச் சந்தையில் விற்க முற்பட்டதே, இவ் விலையுயர்வுக்குக் காரணம் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# தும்பளையில் தேடுதல் வேட்டை

பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் கடந்த 14-ம் திகதி சிறீலங்காப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடாத்தப்பட்டது. இத் தேடுதல் வேட்டையின்போது சில பொது மக்கள் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படுகின்ற போதிலும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

இப் பகுதியில விடுதலைப் புலிகள் முகாமிட்டு இருப்பதாக தமக்கு தகவல் கிடைத்திருப்பதாக தெரிவித்த படையினர் அப் பகுதியால் போக்குவரத்துச் செய்த பொதுமக்களை தடுத்து நிறுத்தி விடுதலைப் புலிகளின் இருப்பிடங்களைக் காட்டுமாறு பணித்து மூர்க்கத்தனமான தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

# சோதனை என்ற பெயரில் வீடுகளில் படையினர் கொள்ளை

வீடுகளைச சோதனை செய்யப்போகிறோம் என்று சொல்லிக்கொண்டு நள்ளிரவு வேளையில் வீடுகளுக்குச் சென்று சிறீலங்காப் படையினர் அங்குள்ள பொருட்களைக் கொள்ளையடித்துச் செல்லும் சம்பவங்கள் சமீப காலமாக அதிகரித்துள்ளன.

கடந்தவாரம் கோப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு நள்ளிரவில் சென்ற படையினர் வீட்டைத் சோதனையிடப் போவதாகக் கூறிக்கொண்டு உள்ளே புகுந்து வீட்டிலிருந்தவர்களை துப்பாக்கி முனையில் மிரட்டி அவர்களிடமிருந்த 3,200 ரூபா பணம், நகைகள் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதேபோல் ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குச் சென்ற இராணுவத்தினர், வீட்டைச் சோதனையிடப் போவதாகக் கூறிக்கொண்டு அவ்வீட்டிலிருந்த தொலைக்காட்சிப்பெட்டி, வீடியோ டெக், வானொலிப்பெட்டி, நகைகள் உட்பட 2 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துக்கொண்டு சென்றுள்ளனர்.

# பொறிவெடியால் கையிழந்த மாணவி

ஒரு மாணவி தனது வீட்டு வாசலில் கணித உபகரணப் பெட்டி (கொமபாஸ்) போல் கிடந்த பொருளை எடுத்தபோது அது வெடித்ததால் தனது இரு கைகளையும் இழந்த பரிதாபச சம்பவம் கடந்தவாரம் உடுவிலில் நடைபெற்றுள்ளது.

தற்போது தனது இரண்டு கைகளும் அகற்றப்பட்ட நிலையில் இந்த 14 வயது மாணவி, யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இவரது பெயர் விபரம் கிடைக்கப்பெறவில்லை.

# மிதிவெடிகளை அகற்ற கொழும்பு வந்தும் யாழ் செல்ல முடியாமல் ஐ.நா. குழு

யாழ். குடா நாட்டில் இராணுவத்தினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ள அளவுக்கதிகமான மிதிவெடிகளினால் மக்கள் தொடர்ந்தும் ஆபத்துக்களை எதிர் நோக்கியவண்ணம் உள்ளனர். குறிப்பாக புத்தூர் கிழக்குப் பகுதிகளிலும், சாவகச்சேரி வீதி அருகிலுமே ஏராளமான மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. இதனால் இங்குள்ள மக்கள் பயபீதியுடனே தமது ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கவேண்டியுள்ளது.

ஐ.நா. வின் மிதிவெடிகளை அகற்றும் குழு யாழ் குடாநாட்டில் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்கு கொழும்பு வந்துள்ள போதிலும், இராணுவத்தினா இந் நடவடிக்கைக்கான ஆதரவை வழங்க மறுக்கிறார்கள் எனவும் தெரியவந்துள்ளது.


# சிவதயா தமிழ் அச்சகம்

★ உங்கள் சகலவித அழைப்பிதழ்களும் மிக அழகான, நவீன, தரமான அழைப்பிதழ்களிலும் மற்றும் சகல அச்சுப் பதிப்புகளுக்கும் குறித்த நேரத்தில் மிக விரைவாக செய்து தரப்படும்.

★ எம்மிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் நாம் இலவசமாக Model Cards உங்களுக்கு அனுப்பி, Fax or, Telephone மூலமாக விபரங்களை பெற்று குறிப்பிட்ட தவணையில் உங்களுக்கு அழைப்பிதழ்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைப்போம்.

தொடர்புகளுக்கு: Mr. K. Siva

*Haupt Str - 13, 6313 Menzingen (Zug, Switzerland )*
*Tel: & Fax: 41/ 7553192*

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
தரமான அதிநவீன அழைப்பிதழ்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.


# இராணுவத்தின் புதிய காவலரண்

யாழ். பலாலி வீதியில் தமது பாதுகாப்புக் காரணங்களுக்காக போக்குவரத்துக்கு இராணுவம் தடைவிதித்திருந்தது அறிந்ததே. இதனால் தற்போது மக்கள் திருநெல்வேலி சந்திக்கு அருகால் தமது போக்குவரத்துகளை செய்து வருகின்றனர். இதனை அறிந்த இராணுவத்தினர் யாழ். பேருந்து நிலையம் முனீஸ்வரன் வீதியில் ஹட்டன் தேசிய வங்கியின் முன்னால் புதிய காவலரண் ஒன்றை அமைத்துள்ளனர்.

## உள்ளதைக் கொஞ்சம் ஒழுங்காக் கதைப்பம்

**சடையர்**

# நாயைக் கண்டால் கல்லைக் காணம்.. கல்லைக் கண்டால் நாயைக் காணம்!

இப்ப இரண்டு மூண்டு கிழமையாய் அமந்துபோயிருந்த ஆமிக்காரர்... இப்ப மூண்டாம் கட்டத்திற்கு வெளிக்கிட்டிருக்கினம். ஜெயசிக்குறுயின்ர மூண்டாம் கட்ட நடவடிக்கையாம். காணாது காணாது எண்டு ஜெயசிக்குறுய் கேட்க... அங்கையிங்கை எண்டு எல்லாப் பக்கத்திலையிருந்தும் அள்ளிக் குவிச்சு... ஒரு பெரிய நாசகாரியத்திற்கு மீண்டும் வெளிக்கிட்டிருக்கினம். ஆயிரக் கணக்கான ஆமிக்காரரை இன்னும் சேர்த்து. இன்னும் பல கவச வாகனங்கள் டாங்கிகளை கொண்டுவந்து... மூன்றாம் கட்டம் ஆரம்பிச்சிருக்கினமாம்.

இந்த மூன்றாம் கட்ட நகர்விற்கு புதிய இராணுவ உத்திகள் நகர்வுகள் பாவிக்கப்படுகிறதாக சிறீலங்கா தரப்பில சொல்லுகினம். மரபுப்படையணியாய் வெறிகொண்டு முன்னேற குத்திபோட்டு மறிச்சடிச்ச கணக்காய்... புலியள் வெளுவெளு எண்டு வெளுத்த கையோட விக்கி விக்கி மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை இப்ப... இறுதியான கட்டத்தை அடைஞ்சிருக்குதாம்.

புதிய உத்தி எண்டுகினம். நகர்வெண்டு சொல்லுகினம். ஒருவேளை.... இராணுவம் கெரில்லாப் பாணி நடவடிக்கையில ஈடுபடப் போகுதுபோல. அப்ப.... புலியள் மரபுப்படையணியாய் மோதுவினம்.

சரி... ஆறுமாதம் இழுபட்ட பாதை திறப்புக்கு... ஏழாம் மாதமெண்டாலும் விடுதலை கிடைக்குமா எண்டது அரசாங்கத்தின்ர தவிப்பு. மழைகாலம் தொடங்கிவிட்டுது... இராணுவத்துக்கு சத்திராதியான காலம். அதோட மாவீரர் நாளும் நெருங்குது எண்டால் பெரும் பதைபதைப்பாய்த்தான் இருக்கும்...

அப்ப, என்னத்துக்கு இந்த மூண்டாம் கட்டத்தை இந்த வில்லங்களுக்கிடையில தொடங்கினவை எண்டு யோசிப்பியள். இராணுவ விற்பன்னர்கள் எதிர்வு கூறினது மாதிரி... தொடங்க வேண்டிய கட்டாயத்திலதான் இராணுவம் இருந்திருக்குது.

குடாநாட்டில விடுதலைப் புலிகளின்ர தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரிச்சிருக்குது. தொடர்ந்து அடி.... என்ன இருந்தாப்போல புலியள் இப்பிடி அடிக்கினம் எண்டது குடாநாட்டுப் படைக்கு கொஞ்சம் கலக்கம். அதோட இராணுவ முகாம்களுக்கு கிட்ட இருக்கிற சனங்களை வெளியேறச் சொல்லி பொடியள் அறிவிச்சிருக்கினம் எண்டும் தகவல். இதுபோதும்தானே சிங்களப்படையை கலக்கியடிக்க.

மாவீரர் வாரத்தில குடாநாட்டில ஒரு கரைகாண புலியள் யோசிச்சிருக்கினம் எண்டது சிங்களப்படையின்ர யோசனை. சரி! குடாநாடுதான் எண்டில்லாட்டிலும் எங்கையெண்டாலும் பெரும் தாக்குதலை புலியள் நடாத்தப்போகினம் எண்டு அரசாங்கம் கடுமையாக அச்சப்படுகுது. அதுதான் அதுக்கிடையில ஜெயசிக்குறுய் மூண்டை ஆரம்பிச்சிருக்கினம்போல. சேத்துக்க சிக்குப்பட்டால் என்ன... பெருமழையில நனைஞ்சால் என்ன... இந்த படை நகர்வை ஆரம்பிச்சு, புலியளின்ர முழுக் கவனத்தையும் வன்னிக் களத்துக்கு திருப்ப சிங்களப்படை முயற்சித்திருக்குது எண்டு யோசிக்கத்தூண்டுது.

ஆனால் புலியளின்ர தந்திரம் வேற மாதிரிக் கிடக்குதுமாதிரித்தான் தெரியுது. பெரும் படையணியை, திக்குத் தெரியாத காட்டில், உள்ளிழுத்து... ஒரு கணக்கில வைச்சிருந்துகொண்டு... ஏனைய பகுதிகளில தங்கட நடவடிக்கையளை விஸ்தரிக்கிற மாதிரித்தான் தெரியுது.

குடாநாட்டுத் தொடர் தாக்குதல்களும் அதைச் சொல்லாமல் சொல்லுது.

> **போறபோக்கில ஒரு ஏற்றம் தெரிஞ்சால்.... குடாநாட்டு இராணுவம் ஒதுங்கி மெலிந்து சுருங்கி... அப்பிடியே பலாலி எண்டும் காங்கேசந்துறையெண்டும் பதுங்கிப்போற காலம் வரும். வரத்தானே வேணும். சரி.... அப்பிடி சறுக்காய் வந்தால்... இவை பாதைதிறந்து கிளிநொச்சிக்குப் போக.... அங்கை விநியோகம் செய்யிறதுக்கு இராணுவம் இருக்கமாட்டுது. அப்ப பாதைமாத்திரம் இருக்கும் விநியோகத்திற்கு இராணுவம் இருக்காது.**

போறபோக்கில ஒரு ஏற்றம் தெரிஞ்சால்.... குடாநாட்டு இராணுவம் ஒதுங்கி மெலிந்து சுருங்கி... அப்பிடியே பலாலி எண்டும். காங்கேசந்துறையெண்டும் பதுங்கிப்போற காலம் வரும். வரத்தானே வேணும். சரி.... அப்பிடி சறுக்காய் வந்தால்... இவை பாதை திறந்து கிளிநொச்சிக்குப் போக.... அங்கை விநியோகம் செய்யிறதுக்கு இராணுவம் இருக்கமாட்டுது. அப்ப பாதைமாத்திரம் இருக்கும் விநியோகத்திற்கு இராணுவம் இருக்காது. சரி... பாதையைத் தான் திறந்திட்டம்.... விநியோகம் செய்யவேணும். குடாநாட்டில பேந்தும் ஒரு இராணுவ நடவடிக்கையை நடத்தி இராணுவத்தை எல்லாஇடமும் குவிச்சால்.... பிறகு விநியோகத்திற்கு பாதையிருக்காது.

இது நாயைக்கண்டால் கல்லைக் காணம்.... கல்லைக் கண்டால் நாயைக் காணம் கதைதான்.

சிறீலங்காவின்ர தலைநகர் எண்டால் எவ்வளவு பெரும் பாதுகாப்பு... அதிலும் அடி விழும் எண்டு அச்சப்பட்டால் அதின்ர கனதியே வேற. அதிலையும் அடிவேண்டிய சூட்டோட அதுபாடுகிற அந்தரமும் பாடும் சொல்லிவேலையில்லை.

...ம்... போனமாதம் 15ம் திகதி... தலைநகரில முக்கிய பொருளாதார மையநிலையில வெடிச்ச குண்டின்ர சத்தம் இன்னும் அடங்கி ஓயேல்ல... அதுக்கிடையில இன்னும் ஒரு குண்டுவெடிப்பு. சரியாக ஒரு மாதத்தில நடந்திருக்குது. அரச படையின்ர பாதுகாப்புக் கெடுபிடிகள் உச்சம் பெற்று தமிழரை உலுப்பிக் கொண்டிருக்க... இந்தக் குண்டுகள்... கொழும்பில உள்ள பிரதான மின்நிலையத்தில வெடிச்சிருக்குது. பாதுகாப்பு உச்சமாய்ப் பேணப்படுகிற இடத்திலதான் குண்டுவெடிப்பு நடந்திருக்குது. உலகவர்த்தக மையக் கட்டடத்தைக் குறிவைச்சு நடத்தப்பட்ட தாக்குதலின்பின் அரசாங்கம்... ஆயிரக் கணக்கான தமிழர்களை கொழும்பில கைது செய்து சிறையில் அடைத்து சித்திர வதை செய்து விசாரணைநடத்தினது தெரியுந்தானே. புலியளைப் பிடிக்க தேடுதல் நடத்தி விசாரணை செய்தவையாம்.

ஒக்டோபர் குண்டு வெடிப்பு மாதிரி மீண்டும் ஒரு குண்டுவெடிப்பு நடக்காமல் இருக்க பெரும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கு எண்டு.... சிறீலங்காவின்ர தொடர்புத்துறை அமைச்சர் பெருமையாகச் சொல்லி... இருபத்திநாலு மணிநேரத்தில குண்டுவெடிச்சிருக்குது. பாதுகாப்பின்ர விறுத்தம் இதுதானோ எண்டு வெளிநாட்டுக்காரர் நாக்குவழிப்பினமோ இல்லையோ...?

ஆனால் அரசாங்கம் வெட்கப்படுகிறதாய்க் காணம். குண்டு வைச்சவைதான் ஆனால்... அவையின்ர நோக்கம் வெற்றி பெறேல்ல எண்டு அரசாங்கம் சொல்லிச் சமாளிக்குது. முதல் இரண்டு குண்டு வெடிச்சதெண்டிச்சினம். பிறகு • மூண்டெண்டு சொல்லிச்சினம்... பிறகு ஏழு குண்டு வெடிச்சதெண்டு சொல்லுகினம். முப்பது நிமிசத்தில நெருப்பை அணைச்சுப் போட்டம். குண்டு வைச்சவையின்ர நோக்கத்தை பெயிலியர் ஆக்கிப்போட்டம் எண்டு பாதுகாப்பமைச்சகம் அறிக்கை விடுகுது.

## ஒரு அலசல்

ஒண்டு இரண்டு வெடிச்சதெண்டதே இப்ப பிரச்சினை..?

இந்தமாதிரி புறியர் போட்டு... சனத்தை அரிச்செடுக்கிறியள். அதுக்குள்ள நழுவிப் போய்... காரியத்தை முடிக்கிற தில் இருக்குதெல்லே.... ம்... அதைச் சொல்லு.

அதையும் புலியள்தான் செய்தது இதையும் புலியள்தான் செய்தது எண்டு அரசாங்கம் சொல்லுறதைப் பார்த்தால்... இவை யாழ்ப்பாணத்தைப் பிடிக்க... எங்கட பொடியள் கொழும்பைப் பிடிச்சிருக்கிறாங்கள். அதுக்கு இது சரியாப்போச்சுது...

அப்பிடியெண்டு சொல்லத்தூண்டுதெல்லே.

இலண்டனில்
நகைத் தெரிவுகளுக்கு
ராஜூ பட்னி அன் சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD WEMBLEY, MIDDX HA0 4TQ
TEL: 0181-903 6677 / 2859, 0181-902 0577
FAX: 0181- 903 4887

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது
இங்கில்லை
N°: 199, The BROADWAY, Southall, Middx.
T.P: 0181 / 813 9126

# யாழ்.பல்கலைக்கழக மாணவன் படையினரால் சுட்டுக்கொலை

யாழ். பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவனான செல்லப்பா குலசேகரம் (வயது 27) கடந்த 1-ம் திகதி சிறீலங்காப் படையினரால் தென்மராட்சி கனகம்புளியடி சந்தியில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். பின்னர், இவரது சடலத்தினை படையினர் அருகிலுள்ள துர்க்கையம்மன் ஆலய வளவினுள் வீசி எறிந்துள்ளனர்.

தனது நண்பனை சர்வராஜாவுடன் சாவகச்சேரியை நோக்கி குதியுந்து (ஸ்கூட்டர்) வண்டியில் பயணித்த குலசேகரத்தினை கனகம் புளியடிச் சந்திக்கு அண்மையில் சிறீலங்காப் படையினர் வழிமறித்துள்ளனர். பின்னர் சர்வராஜாவை சுட்டுப் படுகாயப் படுத்தி குதியுந்திலிருந்து இழுத்தெறிந்துள்ளனர். பின்னர் குலசேகரத்தினை தொடர்ந்து செல்லுமாறு பணித்தனர்

சிறிது தூரம் சென்றதும் திட்டமிட்டபடி அவரை வழிமறித்த இன்னொரு படைக் கும்பல் அவரை சுட்டுக்கொன்றுவிட்டு சடலத்தை அருகிலுள்ள துர்க்கையம்மன் கோவில்வளவினுள் எறிந்துள்ளனர்.

சில நாட்களுக்கு முன்னர் குலசேகரத்தின் குதியுந்தினை இராணுவத்தினர் தமது பாவிப்புக்கு தருமாறு வற்புறுத்திய போது அதற்கு அவர் மறுப்புத் தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் காயமடைந்த சர்வராஜா தற்போது யாழ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

# கிழக்கில் தொழில்வாய்ப்பின்றி 2000 பட்டதாரிகள்

சிறீலங்கா அரசு சர்வதேச ரீதியில், தமிழ் மக்களுக்கு தொழில் வாய்ப்புகள் பாரபட்சமின்றி வழங்கப்படுகின்றது என பொய்ப் பிரச்சாரம் செய்து வருவதற்கு கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளின் ஒன்றியத் தலைவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

1994-ம் ஆண்டிலிருந்து கிழக்கு மாகாணப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புத் திட்டமேதுவும் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதை தெரிவித்த ஒன்றியத் தலைவர், கிழக்கில் மட்டும் 2000 இற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகள் இருப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிங்களப் பட்டதாரி மாணவர்களுக்கு விசேட தொழில் வாய்ப்புகள், விசேட கொடுப்பனவுகள் போன்ற செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரும் அரசு தமிழ் பட்டதாரிகள் விடயத்தில் ஒடுக்கும் முறையினை பிரயோகிப்பதாகவும் இது தமிழ் பட்டதாரிகளுக்கு உளவியல் ரீதியான பாதிப்பினைத் தோற்றுவித்துள்ளமையையும் அவர் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை வடக்கு, கிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சினால் 75 வேலைவாய்ப்பு வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது அதற்கு 8000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இதற்கான நேர்முகப் பரீட்சையை நடாத்தி முடிக்கவே ஐந்து மாதங்கள் எடுக்கும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கிளிநொச்சியில் 9 பேரைக் காணவில்லை

கிளிநொச்சிப் பகுதியில் பொது மக்கள் காணாமற் போகும் நிகழ்வுகள் தொடர்ந்தவாறேயுள்ளன. இராணுவ நடவடிக்கை காரணமாக தமது வீடுகளை பார்வையிடச் செல்லும் பொது மக்களே இவ்விதம் சிறீலங்காப் படையினரால் கடத்திச் செல்லப்படுவதற்கும், கொலை செய்யப்படுவதற்கும் தொடர்ந்தும் உள்ளாகி வருகின்றனர்.

கடந்த வியாழனன்றும், இவ்விதம் தமது வீடுகளை பார்வையிடச் சென்ற உருத்திரபுர வாசிகள் ஒன்பது பேர் காணாமற் போயுள்ளனர். சிறீலங்காப் படையினரின் கரங்களுக்குள் சிக்கிக்கொண்ட இவர்களின் நிலையென்ன வென்பது பற்றித் தெரியாத இவர்களது உறவினர்கள் கலக்கம் கொண்டுள்ளனர்.

முன்னரும் இவ்விதம் காணாமற் போனவர்களின் விபரங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் அறிவிக்கப்பட்ட போதிலும் அது எவ்வித பலனையும் தரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

# அடாது மழையானாலும் விடாத எறிகணைவீச்சு

வன்னியில் பெரு மழை பெய்துகொண்டிருக்கும் இந்த வேளையில் அப்பகுதியில் உள்ள படை நிலைகளிலிருந்து சிறீலங்காப் படையினர் கண்மூடித்தனமான எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி, ஆனையிறவு, நெடுங்கேணி ஆகிய இராணுவ நிலைகளிலிருந்தே கடுமையான எறிகணை வீச்சுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொது மக்கள் குடியிருப்புக்களை நோக்கி நடாத்தப்படும் இந்த எறிகணை வீச்சுக்களால் இடம்பெயர்ந்த மக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளனர். மழைக்கால நிலையை புலிகள் சாதகமாக்கி தம்மீது தாக்குதல்களைத் தொடுப்பார்கள் என்ற பீதி காரணமாகவே படையினர் இவ்விதம் எறிகணை வீச்சுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்.பெருமாள் கோயில் முன்றலில் உண்ணாவிரதப் போராட்டம்

யாழ். குடா நாட்டில் இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உள்ளான பின்னர் அங்கு காணாமற் போன பொதுமக்கள் தொடர்பாக தமக்கு நீதி கிடைக்க வேண்டுமென கோரி காணாமற் போனோருடைய உறவினர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த உண்ணாவிரதப் போராட்டம் கடந்த 14-ம் திகதி யாழ். பெருமாள் கோவில் முன்றலில் நடைபெற்றுள்ளது.

சுமார் 500-க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில், யாழ். ஆதீன சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் சிறப்புரை ஆற்றியுள்ளார்.

அதேவேளை, யாழ். ஞானம் விடுதியில் இயங்கிவரும் சிறீலங்காப் படையினரின் 51—2 கட்டளைப்பணியக ஒழுங்கு செய்த காணாமற் போனோர் சங்கத்தினர் தலைவரையும், செயலாளரையும் தாம் சந்திக்க வேண்டுமெனவும் அவர்கள் ஞானம் விடுதிக்கு வருமாறு அழைப்பு விடுத்தபோதும் அவர்கள் விடுதிக்கு செல்லவில்லை எனவும் தெரியவருகிறது.

காணாமற் போனோர் தொடர்பாக நடாத்தப்படும் போராட்டத் தொடரில் இது மூன்றாவது போராட்டமாகும்.

# களுவாஞ்சிக் குடியில் தமிழ் கும்பலின் கைவரிசை

களுவாஞ்சிக்குடி எருவில் பகுதியில் தமிழ் கும்பல்கள் பெரும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன்னர் இப் பகுதியிலுள்ள வீடொன்றுக்கு இரவு வேளையில் சென்ற ஆயுதம் தாங்கிய சிலர் மாற்று இயக்கமொன்றின் பெயரினைக் கூறி கதவைத் திறக்கும்படி கோரியுள்ளனர்.

வீட்டு உரிமையாளரும் கதவைத் திறக்கவே உட்பிரவேசித்த ஆயுதபாணிகள் அவரையும் அவரது மனைவி பிள்ளைகளையும் ஒரு அறைக்குள் வைத்து பூட்டிய பின்னர் வீட்டிலிருந்த 3 இலட்சம் ரூபா பெறுமதியான நகை, 1 இலட்சத்து 27 ஆயிரம் ரூபா ரொக்கப் பணம் ஆகியவற்றை கொள்ளையடித்துவிட்டு தப்பிச் சென்றுவிட்டனர்.

இச் சம்பவத்தை அடுத்து தமது வீடுகளிலும் இந்த தமிழ் கும்பல்கள் புகுந்துவிடுமோ என எருவில், குறுமண்வெளி மக்கள் பீதியிலுள்ளனர்.

# சிப்பாய்களிடையே விரக்தி நால்வர் சுட்டுக்கொலை

மன்னார், தள்ளாடி படை முகாமில் இராணுவத்தினரிடையே ஏற்பட்ட சச்சரவு ஒன்றின் போது இரண்டு சிப்பாயகள் சக கோப்ரல் ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 12-ம் திகதி நடந்த இச் சம்பவத்திற்கான முழுமையான காரணம் எதுவும் இது வரை தெரியவில்லையாயினும் பணிபுரியும் நேர அட்டவணை தொடர்பாக இரு தரப்பினரிடையே எழுந்த சச்சரவே இதற்குக் காரணம் எனவும் கூறப்படுகிறது.

இதே வேளை, கடந்த 9-ம் திகதி காங்கேசன்துறை சீமெந்து ஆலை இராணுவ முகாமில் பணிபுரியும் இராணுவ லெப்டினன்ட் ஒருவர் தனக்குக் கீழே பணிபுரியும் இரு சிப்பாய்களைச் சுட்டுக்கொன்றுள்ளார்.

விடுமுறைகள், ஓய்வு எதுவும் வழங்கப்படாத நிலையில் தொடர்ச்சியாக போர் முனைகளில் படையினர் பணியாற்றுவதனாலேயே, விரக்தி தலைதூக்கி இவ்வாறான சம்பவங்கள் படையினரிடையே தற்போது அதிகரித்துள்ளதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மன்னார் வர்த்தக நிறுவனங்கள் இராணுவத்தால் சேதம்

கடந்த 12-ந் திகதி மன்னார் நகரப் பகுதியில் சிறீலங்காப் படையினர் நடாத்திய காடைத்தனத்தால் சில வர்த்தக நிறுவனங்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதுடன், பொதுமக்களும் படையினரின் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

காலையில் இப்பகுதிக்கு வந்த படையினர், கடைகளை அடித்து நொருக்கியதுடன் அப்பகுதியால் போக்குவரத்து செய்த பொதுமக்களையும் தடுத்து வைத்து மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளனர். படையினரின் தாக்குதலுக்கான காரணம் என்ன என்பது பற்றி உடனடியாக தெரியவராத போதிலும், விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் முதல் நாளன்று படையினர் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கு முகமாகவே படையினர் இக்காட்டு மிராண்டித்தனத்தை பொதுமக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

இதேவேளை மன்னார் நகருக்கான போக்குவரத்து வீதிகளில் பெரும்பாலானவற்றை மூடிவிட இராணுவ உயரதிகாரிகள் முடிவு செய்திருப்பதாகவும் தெரியவருகிறது.

# வர்த்தகர்கள் இராணுவத்தால் கைது

வடபகுதிக்கு தடை செய்யப்பட்ட பொருட்களை கொண்டு செல்ல முயன்றார்கள் என்ற பொய்க் குற்றச்சாட்டின் பேரில் மன்னார் பகுதியில் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். உண்மையில், இராணுவத்திற்கு கப்பம் செலுத்த மறுத்த காரணத்தினாலேயே மேலும் இவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட இவர்கள் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்த சுமார் எட்டு மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களையும் இராணுவத்தினர் பறிமுதல் செய்துள்ளனர்.


நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும்
தமிழ் அருவியின்
5-வது ஆண்டு
இசைத்திருவிழா
27.12.1997 சனிக்கிழமை எசன் மாநகரில்!
ஜேர்மனியின் பிரபல இசைக்கலைஞர்கள்
ஒன்றிணைந்து இசை வழங்க
சுப்பர்ப்பிறின்ஸ் ராஜாவின்
நெறிப்படுத்தலில் பல பாடகர்களும், பாடகிகளும்
கலந்துகொள்கிறார்கள்.
தமிழக பிரபல பாடகர் ஒருவரும் கலந்து
சிறப்பிக்கின்றார்.
வானொலித் தென்றல் என்.ரி. ஜெகனின்
அற்புதத் தொகுப்பில்!
முத்தான பல கலை நிகழ்ச்சிகள் கொத்தாக- உங்களுக்காகக் காத்திருக்கின்றன! தமிழருவிப் போட்டி நிகழ்ச்சிக்கு பெரும் தொகையான பாடகர்கள் பாடகிகள் விண்ணப்பித்திருப்பதால் முன் தெரிவு பற்றி அவர்களுக்கு அறிவிக்கப்படும்.
தொடர்புகளுக்கு!
தமிழருவி ஜேர்மனி (Rgd)
0201 - 668809

# மலையகத்தை பங்குபோடுவது யார்?

## தீர்வுப் பொதி பிறந்த கதை 6

EPRLF இயக்கம் வடக்கு கிழக்கில் இந்திய இராணுவத்தில் நிழலில் இருந்துகொண்டு கட்டாய ஆட்சேர்ப்பு, ஆயுதப் பயிற்சி என்பவற்றின் மூலம் தமது அமைப்பை பலப்படுத்த முயன்ற போதிலும், இந்திய இராணுவம் வெளியேறிவிட்டால் தங்களுடைய இருத்தல் கேள்விக்குறியாக அமைந்து விடும் என்பதை உணர்ந்தே இருந்தது.

இதனால் இந்திய இராணுவம் வடக்குக் கிழக்கில் நிலைகொண்டிருப்பதை எதிர்க்கும் JVP யினரது வளர்ச்சியையும் அவர்களது போராட்டங்களையும் முளையிலேயே கிள்ளியெறிந்துவிடும்படி அப்போது ஆட்சிப் பீடத்திலிருந்து பச்சைக் கட்சி பெரியவருக்கு நிர்ப்பந்தம் கொடுக்குமாறு RAW அதிகாரிகளுக்கு EPRLF வேண்டுகோள் விடுத்திருந்தது.

அத்துடன் RAW வுடன் தொடர்பு வைத்திருந்த PLOT தலைவர்கள் மூலமாக JVP க்கு பயிற்சி கொடுப்பதை நிறுத்துமாறு உமாமகேஸ்வரனிடம் அழுத்தங்கள் கொடுக்குமாறும் அவர்கள் RAW விடம் கேட்டிருந்தார்கள்.

இவற்றை விட பச்சைக் கட்சித் தலைவர்களையும், நீலக்கட்சித் தலைவர்களையும் கூட சந்தித்து இந்த விடயத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினார்கள்.

இவற்றையெல்லாம் விட JVP க்கு எதிரான இன்னொரு சிங்கள இடதுசாரிக்குழுவுக்கு இந்திய இராணுவத்தின் உதவியோடு பயிற்சி கொடுக்கவும் முற்பட்டார்கள்.

EPRLF இயக்கத்தைப் பொறுத்தவரை அவர்களுடைய செயற்பாட்டுத்தளம் வடக்குக் கிழக்காக இருந்தபோதிலும், அங்கே எப்போதும் விடுதலைப் புலிகளால் தங்களுக்கு அச்சுறுத்தல் வரும் என்பதை அவர்கள் உணர்ந்திருந்ததால் மலையகத்தில் தங்களது அமைப்புக்கு உறுதியான அடித்தளம் ஒன்றை அமைப்பதற்கு விரும்பினார்கள்.

இந்திய இராணுவத்துடன் இணைந்து செயற்படுவது, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வரதராஜப் பெருமாளை வடக்கு கிழக்கு முதலமைச்சராக்கியிருப்பது ஆகிய இரண்டு அம்சங்களின் அடிப்படையில் அவர்கள் மலையக மக்கள் மத்தியில் தமது செல்வாக்கை வளர்த்துக் கொள்ளலாம் என்று எதிர் பார்த்தார்கள்.

1970 களில் வடக்கு கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களின் செயற்பாடுகள் தொடர்பாக இளைஞர்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியைப்போன்று 1988 ஆரம்பத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மீதும் அதன் தலைவர் தொண்டைமான் மீது இளைய தலைமுறையினருக்கு அதிருப்தி ஏற்பட்டிருந்தது. பச்சைக்கட்சி அரசாங்கத்தில் தொண்டைமான் அமைச்சராக இருந்த போதிலும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மலையக இளைஞர்கள் கைது செய்யப்படுவது தொடர்பாகவும், விசாரணையின்றி வருடக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை விடுவிப்பது தொடர்பாகவும் அவர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்கின்ற ஆதங்கம் அங்குள்ள இளைஞர்களிடம் நிறைந்திருக்கிறது.

அந்தக் கால கட்டப் பகுதியில் அங்கு வடக்கு கிழக்கைச் சேர்ந்த 3 இயக்கங்கள் செயற்பட்டுக்கொண்டிருந்தன. ஒன்று EROS இரண்டாவது EPRLF, மூன்றாவது PLOT. இதில் EPRLF வும் EROS ம் தங்களுடைய சொந்தப் பெயரிலேயே இரகசியமாகச் செயற்பட்டு வந்தன. PLOT அங்கே அவ்வாறு இயங்கவில்லை. அது JVP யுடன் இணைந்தும், மலையகத்தினின்று பழமை வாய்ந்த பிரபல இடதுசாரித் தொழிற் சங்கம் ஒன்றுடன் இணைந்துமே செயற்பட்டு வந்தது.

EROS இயக்கம் நுவரேலியாவில் இருந்த ரூபவாகினி தொலைக் காட்சிக் கோபுரத்துக்கு குண்டு வைத்ததனால் அதன் மலையக பிரிவின் முன்னணி உறுப்பினர்கள் பலர் கைது செய்யப்பட்டிருந்தார்கள்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், மற்றைய தொழிற் சங்கங்களும் அந்த அமைப்பை பயங்கரவாத அமைப்பு என்றும் அந்த அமைப்புடன் தொடர்பு வைத்திருப்பவர்கள் பொலிசாரினால் உடனடியாகக் கைது செய்யப்படுவார்கள் என்ற ஒரு பயப் பீதியை மலையகத்திலே உருவாக்கியிருந்தார்கள்.

இதனால் இதொக தலைமை மீது அதிருப்தியடைந்த இளைஞர்கள் கூட EROS இயக்கத்தில் இணைந்து கொள்வதைவிட்டு அதிகம் தயக்கம் காட்டி வந்தார்கள்.

**இந்திய இராணுவம் வடக்குக் கிழக்கில் நிலைகொண்டிருப்பதை எதிர்க்கும் JVP யினரது வளர்ச்சியை முளையிலேயே கிள்ளியெறிந்துவிடும்படி அப்போது ஆட்சிப் பீடத்திலிருந்து பச்சைக் கட்சி பெரியவருக்கு நிர்ப்பந்தம் கொடுக்குமாறு RAW அதிகாரிகளுக்கு EPRLF வேண்டுகோள் விடுத்திருந்தது.**

EPRLF இயக்கம் இந்திய அரசின் ஆதரவு பெற்ற இயக்கம். வடக்கு கிழக்கில் அரச நிர்வாகத்தை நடத்துகின்ற இயக்கம். ஒரு இந்திய வம்சாவழித் தமிழரை முதலமைச்சராகத் தெரிவு செய்திருக்கின்றன. இயக்கம் என்கின்ற ஒரு பிரேமையை அவ்வியக்கம் மலையக மக்கள் மத்தியில் உருவாக்கியிருந்தது.

இதனால் அதிகளவு இளைஞர்கள் அவ்வியக்கத்தில் இணைந்துகொள்ள ஆரம்பித்தனர்.

இந்த நிலை தொடருமாக இருந்தால்; அதாவது EPRLF இயக்கம் மலையகத்தில் பலம் பெறுமாக இருந்தால், நிச்சயமாக அது தமிழீழ மக்களுக்கும், ஏன் மலையக மக்களுக்கும் கூட நீண்ட கால அடிப்படையில் பாதகமான விளைவுகளை தரும் என்று எண்ணிய PLOT ன் மலையகப் பிரிவு, இலங்கை தொழிலாளர் காங்கிரசில் அதிருப்தி கொண்டிருந்த சந்திரசேகரனை முதன்மைப்படுத்தி அங்கு ஒரு அமைப்பை அதாவது மலையகத்தவர்களாலேயே தலைமை தாங்கப் படுகின்ற ஒரு அமைப்பை உருவாக்க விரும்பியது. அவர்களின் இந்த முடிவு EPRLF க்கு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது.

அவர்கள் இந்தியச் சார்புடைய PLOT பிரிவை தூண்டிவிட்டு, PLOT வளங்களைப் பயன்படுத்தி எதற்காக சந்திரசேகரன் தனியான ஒரு அமைப்பு உருவாக்க அனுமதிக்கிறீர்கள். உங்களது மலையகப் பிரிவின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும்படி உமா மகேஸ்வரனுக்கு நிர்ப்பந்தம் கொடுங்கள் என்று தூண்டிவிட்டனர்.

**இந்திய இரர்ணுவத்துடன் இணைந்து செயற்படுவது, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வரதராஜப் பெருமாளை வடக்கு கிழக்கு முதலமைச்சராக்கியிருப்பது ஆகிய இரண்டு அம்சங்களின் அடிப்படையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். மலையக மக்கள் மத்தியில் தமது செல்வாக்கை வளர்த்துக் கொள்ளலாம் என்று எதிர்பார்த்தார்கள்.**

[illegible]

# மத்திய முகாம் படுகொலை அணிவகுப்பிற்கு சமுகமளிக்க பொலிசார் மறுப்பு

அம்பாறை மத்திய முகாம் பகுதியில் சிறிலங்கா பொலிசாரினால் மேற்கொள்ளப்பட்ட ஐந்து தமிழர்களின் படுகொலை தொடர்பாக சிறிலங்கா அரசின் நீதிமன்றத்தின் முன் அடையாள அணிவகுப்பு ஒன்று நடாத்தப்பட ஏற்பாடாகியிருந்த போதும் பொலிசார் அதற்கு சமுகமளிக்க மறுத்துவிட்டனர்.

கடந்த 6ம் திகதி இந்த வழக்கு விசாரணைகள் கல்முனை நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட போதிலும், சம்பந்தப்பட்ட பொலிசாரை அடையாள அணிவகுப்பில் ஈடுபடுத்த பொலிஸ் அத்தியட்சகர் மறுப்புத் தெரிவித்துள்ளார். பாதுகாப்புக் காரணங்கள் முன்னிட்டே சம்பந்தப்பட்ட பொலிசாரை நீதி மன்றத்திற்கு கொண்டுவர இயலாதிருந்ததாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் தரப்பின் வாதத்தினை நிராகரித்த மாவட்ட நீதிபதி, பொலிஸ் திணைக்களத்தினை எச்சரிக்கை செய்ததுடன் அடுத்த மாதம் நடைபெறும் அடையாள அணிவகுப்பிற்கு கட்டாயம் பொலிசார் சமுகமளிக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

# வட்டுவாகலில் பயணிகள் வாகனம் கவிழ்ந்தது

முல்லைத்தீவு செம்மலையிலிருந்து புதுக்குடியிருப்புப் பகுதியை நோக்கி சென்றுகொண்டிருந்த பேருந்து வண்டி, வட்டுவாகல் என்னும் இடத்தில் கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த 14 பேர் காயமடைந்தனர். வன்னியில் தொடர்ந்து பெய்யும் மழை காரணமாக பாதை சேற்றுக் காணப்பட்டதனாலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.


சம்பவத்தைத் தொடர்ந்து அப் பகுதிக்கு விரைந்த பொது மக்கள் மீட்புப் பணிகள் செய்து காயமடைந்த பயணிகளை மீட்டு வைத்திய சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர். இச் சம்பவத்தில் இந்திராணி (40), பாக்கியலட்சுமி (20), சந்திரன் (39), புவனேஸ்வரன்(25), யோகேஸ்வரி (37), புவனேஸ்வரி (48), நந்தகுமார் (38), மணவேந்தன் (23), இராசரட்ணம் (40), சின்னத்தங்கம் (53), இராஜலிங்கம்(34), இராஜன்(23), தீபன் (20) ஆகியோரே காயமடைந்த பயணிகளாவர்.

# கண்டாவளையில் சிரமதான மூலம் பாலம் அமைப்பு

கண்டாவளைப் பிரதேசத்தில் சுகாதாரத்தினை முன்னிட்டு செயற்படுத்தப்பட்ட தொண்டுச் சேவைகளில் அப் பகுதிக்கு ஒரு சிறிய பாலம் அமைத்துக் கொடுக்கப்பட்டமை பொதுமக்களால் பெரிதும் பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

கிரமந்தனாறு பகுதியில் அமைக்கப்பட்ட இப் பாலத்தினால் அப் பகுதியிலியங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையம் பெரிதும் பயனடைந்துள்ளது. இச் சிரமதானப் பணியில் கிரமந்தனாறு தமிழ்க் கலவன் பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்கள் பெரிதும் உற்சாகத்துடன் ஈடுபட்டுள்ளார்கள் என வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.





வளர்ந்து வரும்
இளம் தலைமுறைக்கான
தமிழ்ச்சோலை
தமிழர் கல்விக்கூடம்
★ தமிழ் ★ நடனம் ★ பிறகலை வகுப்புக்கள்
★ பிறமொழி வகுப்புக்கள்
பாரிசில் (சோதியா கலைக்கல்லூரியுடன் இணைந்து)
'தமிழ்ச்சோலை' மண்டபம்
26,RUE DU DEPARTEMENT, 75018 PARIS
Tel: 0140383074 / 0143581142

நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்விக்கூடங்கள்

| | | | |
|---|---|---|---|
| CERGY | - 0134435606 | SEVRAN | - 0143846985 |
| EVRY | - 0160781892 / 0160774523 | TORCY | - 0160178207 |
| | | LYON | - 0478753358 |
| GARGES LES GONESSE | - 0139939452 | TOULOUSE | - 0561439952 |
| | | STRASBOURG | - 0388849802 |

வெகுவிரைவில் பிரான்சின் ஏனைய பாகங்களிலும் ஆரம்பமாகவுள்ளன
கல்விப்பிரிவு, தமிழர் புனர்வாழ்வுக் கழகம்-பிரான்ஸ் - Tél: 01 40 38 30 74

சிறீலங்காவின் இராணுவ, விமானப்படை, கடற்படை தளபதிகள் தங்களது படைப்பிரிவுகளின் அண்மைக்கால வெற்றிகள் பற்றி பெருமைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அதில முக்கியமானவர் விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்காதான். காரணம சில நாட்களுக்கு முன்னர் அவரது விமானப்படை முல்லைத்தீவு கடற்பகுதியில் ஒரு கப்பலை மூழ்கடித்திருந்தது. ஈழப்போர் III ஆரம்பமானதன் பின் அதிகளவில் சிறீலங்காவின் விமானப்படை விமானங்களை இழந்திருந்தது அண்மையில் இவ்விழப்புகளுக்கான காரணங்களைக் கண்டறியும் ஒரு விசேட குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதில், இழப்புகளுக்கு அதன் தளபதி ஒலிவர் ரணசிங்காவே முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவரது ஆளும் அடங்குவதாகவும் விமானப்படையினர் கூறியிருந்தார்கள். தமது கப்பல் மூழ்கடிப்பினால் விடுதலைப் புலிகள் பாரிய ஆயுதத் தட்டுப்பாட்டை எதிர்நோக்குவார்கள் எனவும் விமானப்படையினர் கூறியிருந்தார்கள்.

# பண்ணையார்

இவ்வாறான வேளையில் இவ்விடயம் பற்றி ஆராய்ந்த ஒரு பத்திரிகையின் பாதுகாப்பு ஆய்வாளர் தனது கட்டுரையில் 'முல்லைத்தீவு கடற்பகுதியில் ஒரு கப்பல விமானப்படையின் குண்டுத் தாக்குதலினால் தீப்பிளம்பாகி கடலுக்குள் மூழ்கியது ஒரு மிகப்பெரிய விடயமாக பிரச்சாரப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பாரிய இடைவேளை கப்பலின் பொருட்களை நாறூறு மீற்றர்கள் மட்டுமே தொலைவில் இருந்த கரைக்கு கொண்டு செல்ல தாராளமாகப் போதும். இறுதியாக அவ் வெறும் கப்பல் மூழ்கடிக்கப்பட வேண்டும் என விடுதலைப் புலிகள் விரும்பியதனாலேயே அங்கு வழக்கமற்ற முறையில் சகலருக்கும் தெரியும் வகையில் அக்கப்பலை நிறுத்தி வைத்துள்ளார்கள். அங்கும் அவர்கள் ஒரு சண்டையை கடற்படையினருடன் எதிர்பார்த்திருந்தாலும எந்த வித கடற்படைப் படகுகளும்



கடந்த செவ்வாய்கிழமை காலை வவுனியாவில் கொண்டு வந்தது குவிக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினரை வேறு முகாம்களுக்கு கொண்டு செல்லும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக சுமார் 120 படைவீரர்கள் மூன்று MI.17 உலங்கு வானூர்திகளில் வவுனியா விமானத்தளத்திலிருந்து புறப்படத் தயாரானார்கள். அவர்கள் செல்ல வேண்டிய இடம் ஆனையிறவு படைத்தளம். ஆனால் அவ் உலங்கு வானூர்திகள் புளியங்குளப் பகுதிக்கு மேலாகப் பறக்க முடியாத நிலை, MI.17 உலங்கு வானூர்திகள் ஆட்களைக் கொண்டு செல்லும் அதேவேளை, தாக்குதல்களிலும் ஈடுபடக் கூடியவை. ஆனால் அவைகள் தமது பாதுகாப்பிறகாக MI.24 'பறக்கும் தாங்கியை' அழைத்துக்கொண்டன. காலை 11.15 மணியளவில் வவுனியா விமானத் தளத்திலிருந்து புறப்பட்ட இந்த நான்கு உலங்கு வானூர்திகளும் வெலிஓயா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினூடாக கொக்கிளாய் கடலேரிக்கு மேலாக பறந்து கடற் பகுதியான, ஆனையிறவு படைத்தளத்தை வந்தடைய வேண்டும். கொக்கிளாய்க்கு மேலாக உலங்கு வானூர்திகள் கடலுக்கு வடபகுதியில் கொக்கிளாயின் கிழக்கினூடாக பறந்து கொண்டிருந்த உலங்கு வானூர்திகளில் MI.24 இன் விமானி கடலேரிப் பகுதியில்

# கப்பல் மூழ்கடிப்பு = சாதனை!?
# MI 24 மூழ்கடிப்பு = சோதனை!
## சிறீலங்கா விமானப்படை!

பொறுப்பற்ற தன்மையினாலேயே இவ்விழப்புகள் விமானப்படைக்கு ஏற்பட்டுள்ளன என்று விசாரணைக் குழு தெரிவித்திருந்தது. இப்படி தலமேல் பழி சுமத்தப்படிருந்த வேளை, தமது படையினர் ஒரு கப்பலை கண்டு பிடித்து அழித்தமாக பிரச்சாரப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் அதில் சம்பந்தப்பட்டவர்கள் அது விடுதலைப் புலிகளின ஆயுதக் கப்பல் என்றும், பெருமளவிலான நவீன ஆயுதங்கள் அதில் இருந்துள்ளன என்றும் கூறிய பின் அக்கப்பலில் இருந்த தளபாடங்களில் எவ்வளவு தொகையானவை ஏற்கனவே இறக்கப்பட்டு விட்டிருந்தன என்பதை எப்படி தம்மால் கூற இயலும் என்றும் அங்கலாய்த்திருந்தனர். அப்படியானல் இவர்கள் மூழ்கடித்திருந்தது ஒரு வெறும் கப்பலையே. அப்பகுதிக் கடலில் சிறீலங்காவின் கடற்படை ரோந்துப்படகுகளும் Y 12 கண்காணிப்பு விமானங்களும் சுற்றித் திரிவது வழக்கம். அப்படியாயின் அன்றையதினம் (சனிக்கிழமை) மாலை வரை அக்கடற் பரப்பில் எந்தவிதமான கப்பல்களும் காணப்படவில்லை. அன்று மாலை ஆறுமணியின் பின்னரேயே கப்பல் அக் கடற்பிராந்தியத்துக்குள் வந்துள்ளது. ஆனால் அங்கு ஒரு கப்பல் நிற்பது அடுத்த நாள் காலை 10.00 மணியளவிலேயே கடற்படையினரால் அவதானிக்கப்பட்டுள்ளது. அப்படியாயின் சுமார் 15 மணிநேர இடைவெளியின் பின்னரே கப்பல் அவதானிக்கப்பட்டது.



விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு படையணி

தை 'சாதனை' என்றுதானே அவர் கூற வேண்டும். கப்பல் மூழ்கடிப்பு நிகழ்வினை தீவின் பெரும்பான்மைப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டன. ஆனால் அவைகளுக்கு வழங்கப்பட்ட செய்திகள் சுதந்திரமானவை அல்ல. அரசின் செய்தி ஸ்தாபனத்தால் வழங்கப்பட்டவையே என்ற நிலையில் சில பத்திரிகையாளர்கள் கப்பல் சம்பவத்தின் மறுபக்கத்தை அலச முனைந்தனர். அத்துடன் சில இராணுவ ஆய்வாளர்களும், அரசு கப்பல் சமாசாரத்தை 'பெரிதுபடுத்தியதாகவே' கூறியுள்ளார்கள்.

இக்கப்பலை தாம் ஆயிரத்தி ஐந்நூறு முதல் இரண்டாயிரம் வரையிலான சரக்குடன் மூழ்கடித்ததாயும் அவற்றுள் எவ்வளவு தொகையை இறக்கியிருக்கக் கூடும் என்பதை அறிய முடியவில்லை எனக் கூறியவர்கள், அதற்குள் பல நவீன ஆயுதங்க

கப்பலை நெருங்கி வராத நிலையில் திடீரெனத் தோன்றிய கிபீர் விமானங்களின் தாக்குதலை அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. அதனாலேயே எந்தவித இழப்புக்களும் விமானப்படைக்கு ஏற்படவில்லை' எனக் கூறியிருக்கும் கட்டுரையாளர், 'விமானப்படையின் அன்றைய நடவடிக்கை நீண்ட நாள் இக்கட்டிலிருந்து அதனைக் காப்பாற்றிய ஒரு சம்பவமாக கூறமுடியுமே தவிர அவர்கள் நிகழ்த்தியது ஒரு சாதனையல்ல என்று கூறியிருக்கிறார்.

ஒருவழியாக தனது தோளை நிமிர்த்திக் கொள்ள விமானப் படை தளபதி தயாரானபோது உங்கள் சோதனைக் காலம் இன்னும் முடியவில்லை என்று கூறிக்கொண்டு அடுத்த சம்பவம் கடந்த செவ்வாயன்று வந்து நின்றது. அன்றைய தினம் சிறீலங்காவின் நம்பிக்கைக்குரிய பறக்கும் தாங்கி 'MI 24' உலங்கு வானூர்தி விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

> விமானப்படையின் அன்றைய நடவடிக்கை நீண்டநாள் இக்கட்டிலிருந்து அதனைக் காப்பாற்றிய ஒரு சம்பவமாக கூறமுடியுமே தவிர அவர்கள் நிகழ்த்தியது ஒரு சாதனையல்ல என்று கூறியிருக்கிறார். ஒரு வழியாக தனது தோளை நிமிர்த்திக் கொள்ள விமானப்படை தளபதி தயாரானபோது உங்கள் சோதனைக் காலம் இன்னும் முடியவில்லை என்று கூறிக்கொண்டு அடுத்த சம்பவம் கடந்த செவ்வாயன்று வந்து நின்றது.

நான்கு படகுகளைக் கண்டுள்ளார். அவைகள் கடற்புலிகளினது என்பதைக் கண்டறிந்த நிலையில் MI.17 உலங்கு வானூர்திகளை அப்பகுதியில் இருந்து விலகி உள்பகுதிக்கு வருமாறு கட்டளையிட்டு நான்கு உலங்கு வானூர்திகளும் மீண்டும் கொக்கிளாய் பகுதிக்குள் பிரவேசித்த சமயம் MI.24 தாக்குதலுக்கு உள்ளாகியது அத்துடன் ஒரு MI.17 உம் தாக்கப்பட்டதில் விமானி சாமர்த்தியமாக அதனை தரையிறக்கியுள்ளார். தாக்குதலுக்கு உள்ளான MI.24 தீப்பிளம்புகளுடன் கொக்கிளாய் கடலேரிக்குள் சங்கமமானது. அவ் உலங்கு வானூர்தி தாக்கப்பட்ட வேளை அதில் இரண்டு விமானிகளும் இரண்டு 'கன்னர்ஸ்' எனப்படும் தாககுதவாளர்களும் இருந்துள்ளனர். கொக்கிளாய் கடலேரிப் பகுதி இராணுவப் பிரதேசமாகியபடியால் உதவிக் குழுக்கள் உடன் அப்பகுதிக்கு விரைந்து மூழ்கியவர்களை காப்பாற்ற முயற்சிகளை மேற்கொண்டன. இரண்டு தாக்குதல்களும் ஒரு விமானியும் அவர்களால் காப்பாற்றப்பட்டனர். அதில் விமானி பின்னர் இறந்துள்ளார். விமானப்படையில் நீண்டகால அனுபவமுள்ள 'விங்கமாண்டர்' ஒருவரும் ஒரு விமான லெப்டினன்ட் உம் கொல்லப்பட்டனர்.

இவ் உலங்கு வானூர்திகள் எவ்வாறான ஆயுதங்களால் தாக்கப்பட்டன என்று அறிய முடியாத நிலையில் விடுதலைப் புலிகள் ஏவுகணைகள் கொண்டுதான் தாக்கினார்கள் என விமானப்படை அதிகாரிகள் கூறியுள்ளார்கள்.

ஆக நடந்து முடிந்துள்ள இரு நிகழ்வுகளிலும் சிறீலங்கா விமானப்படையே பெரிதும் பங்கேற்றுள்ளது. ஒன்றின் மூலம் தனது வெற்றியை பிரச்சாரப்படுத்த முனைந்து தோற்ற நிலையில் அடுதத சமபவத்தால் மீண்டும் விமானப்படை மூக்குடைபட்டுப் போயுள்ளது என்பதுதான் உண்மை.